நாகூர் ஆண்டகையின் பேரர்

# காட்டு பாபா ஃபக்ருத்தீன்

## ஷஹீது ஒலியுல்லா

ஆக்கம்:

எம்.ஏ. ஹைதர்அலீ யகீனுல்லாஷா B.A.,
கலிஃபத்துல் காதிரி ஷத்தாரி க்ஷிஸ்தி ரிஃபாயி

ஸையிதா அத்தீன் கதிஜா **D.C.S.E.**காதிரி
ஸையிதா ஹசனத்துல் ஹைரியா **M.B.A.**காதிரி

ஆங்கிலம்:
எம்.ஜே. அலீ அபுதாஹிர். **B.E.,**
கலீஃபத்துல் காதிரி

வெளியீடு:
*மும்தாஜ் பதிப்பகம்*
*39, முஸ்லிம் கருமார் தெரு*
*நெல்லிக்குப்பம் - 607 105.*
தொ.பே. 04142 656520 / அ.பே. 98947 46014

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | காட்டு பாபா ஃபக்ருத்தீன் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| ஆசிரியர் | : | எம்.ஏ. ஹைதர் அலீ B.A. |
| மொழி | : | தமிழ் |
| நூல் அளவு | : | 7" / 4" |
| எழுத்தளவு | : | 12 |
| பக்கங்கள் | : | 150 |
| விலை | : | *ரூ.15/-* |

*அச்சகம்:*
*யுனைடெட் பைன்ட் கிராஃபிக்ஸ்,*
*189, ராயப்பேட்டை ஹை ரோடு,*
*மைலாப்பூர் , சென்னை 600 004.*

# சமர்ப்பணம்

நாகூர் ஆண்டகை காதிர் ஒலி நாயகம்
ஸையித் முகம்மத் யூசுப் தாதா நாயகம் -
உம்முசாகிபா சுல்தான் பீபி
ஆகியோரின் குலவழிப்பேரர்

நாகூர் ஹாஜி குலாம் தஸ்தகீர் நாநா சாஹிப் அவர்களின்
தவப்பேறு
எமது குருபிரான்
ஷெய்கே காமில் எம். ஜி. முகம்மது ஹூசைன் சாஹிபு
நாதாவின் உன்னதமான ரூஹூக்கு சமர்ப்பணம்

பணிவுடன்

A.. முகம்மதுஇலியாஸ் காதிரி. எம்.ஏ. ஹைதர் அலீ **B.A.**
A . நூர்ஜஹான்பேகம் காதிரி. கலிஃபத்துல் காதிரி ரிஃபாயி
ஆசிரியை முகம்மத் பீவி காதிரி.
**Dr.**ஆயிஷா பீவி. **B.Sc., M.B.B.S.,** காதிரி.
நெல்லிக்குப்பம் - 607 105

# சமர்ப்பணம்

நாகூர் ஆண்டகையின் திருப்பேரர்
காட்டுபாபா ஃபக்ருத்தீன் ஒலி நாயகம்
அவர்களின் சந்ததிகள்

மீ. அலீயார் சாஹிபு, நாகூர்
தேவநேச குலவழி தோற்றலர்
அ. சாஹிபு மாலிமார், பரங்கிப்பேட்டை
அ.சா. முகம்மத் அலீ சாஹிபு, கூத்தூர்
ஆகியோரான எமது முன்னோர்களின்
உன்னதமான ஆன்மாவுக்கு
சமர்ப்பணம்

உண்மையுள்ள
எம்.ஏ. ஹைதர் அலீ காதிரி

ஸையிதா அத்தீன் கதிஜா **D.C.S.E.**காதிரி.
ஷேக் தஸ்தகீர்பாதுஷா.**B.E,M.B.A.**கலிஃபத்துல் காதிரிக்ஷிஸ்தி
எம்.ஜே. அலீ அபுதாஹிர். **B.E.,** கலிஃபத்துல் காதிரி
ஸையிதா Dr. ஃபாத்திமுத்து **B.Sc., B.A.M.S.,**காதிரி

கடலூர்.

# அழைப்பு

நாகூர் ஆண்டகை ஷாகுல் ஹமீது பாத்துஷா நாயகத்தின் திருப்பேரர் இறைநேசர் பாபா ஃபக்ருத்தீனின் அடக்கவிடம் புதுகோட்டையிலிருந்து மதுரை செல்லும் பஸ் மார்க்கத்தில் திருமயம் என்ற நகருக்கருகில் உள்ளது என்று அறிந்து பாபா நாயகத்தின் ஜியாரத்துக்கு சென்றேன்.

பாபா ஃபக்ருத்தீன் ஷஹீது ஒலியின் வாழ்க்கை வரலாற்று குறிப்புகள் அரிதாக உள்ளன. காட்டு பாபா காரண சரித்திரம் என்ற கவிதை நூல் ஒன்றும், எனது அன்பு சகோதரர் நாகூர் அல்ஹாஜ் ஏ.ஜே.எஸ். அப்துல் ஹமீது பைஜீ அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள காதிர் ஒலி பேரர் சையிது பாபா ஃபக்ருத்தீன் ஷஹீது நாகூரி என்ற நூலும் மட்டுமே பாபாவைப் பற்றிய தகவலை நமக்கு தருகின்றன.

அங்கு சென்ற எனக்கு ஏற்பட்ட பல்வேறு அனுபவங்கள் விசித்திரமானவை. சில அன்பர்களை நாயகத்தின் அடக்கத்தலப் பதியான காட்டுபாவா பள்ளியில் சந்தித்து பேசியபோது ஏற்பட்ட வாழ்க்கையின் புதிய கோணம், பாபா நாயகத்தைப் பற்றிய வரலாற்றை எழுதத்தூண்டியது.

என்னுடைய அறிமுக குருவும் பாட்டனாருமான கூத்தூர் முகம்மத் அலீ சாஹிப் காதிரி அவர்களின் பாட்டனார் நாகூர் அலீயார் சாஹிபு அவர்கள் பாபாநாயகத்தின் நான்காம் தலைமுறை பேரர் என்று எங்கள் குடும்பத்தில் இருந்த தகவல் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

உரிமையோடு அவர்களின் வாழ்க்கை தொடரை எழுத தொடங்கியபோது பல தகவல்கள் வெளிவந்தன. பாரதத்தின் பல பகுதிகளில் அவர்கள் பெயரால் கபுர் சரீஃபுகளும் உள்ளன, ஃகாய்பு ஆகி மறைந்தார்கள் என்று நினைவிடங்களும் உள்ளன. நூற்று கணக்கில் உள்ளன.

அப்படி உள்ள இடங்களில் பாபாவின் சந்ததிகள் என்றும் பாபாவின் துஆவினால் பிறந்த சந்ததிகள் என்றும் கூறப்படுபவர்கள் வாழ்கிறார்கள். கன்ஜுல் கராமத்தைப் போன்று புதைந்து கிடக்கின்ற பொக்கிஷத்தை எடுத்து உலகின்முன் கொண்டுவருவது எனது கடமையாகிவிட்டது.

இந்த நூல் முழுமையாக என்னால் எழுதப்பட்டாலும் கட்டுரைகளின் கருத்தமைவில் எனது முரீதுமகளாரும் பாபா நாயகத்தின் சந்ததியினருமாகிய அத்தீன் கதிஜாவின் பங்களிப்பு குறிப்பிட தக்கதாகும். தமிழ் தெரியாதவர்களுக்கும் பயன்படும் வகையில் எனது மகள் டாக்டர் ஃபாத்திமுத்தின் கணவர் ஜனாப். எம்.ஜே. அலீ அபுதாஹிர் ஐந்து பக்கங்களில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் பாபா நாயகத்தின் அருமை பெருமை நிறைந்த வரலாற்றை ஆங்கிலமாக்கி தத்துள்ளார்.

பாபா நாயகத்தின் பேரரான நாகூர் அலீயார் சாகிபின் மைந்தர் ஏ. சாயபு மாலிமார் அவர்கள் பரங்கிப்பேட்டையில் பதினைந்து ஆண்டுகாலம் வாழ்ந்து கப்பலோட்டும் மாலுமியாக பணிபுரிந்து இல்லறம் பேணி வாழ்ந்து அவருடைய குலவழியில் ஜனாப் எம்.ஜே. அலீ அபுதாஹிர் பிறந்தாரென்பது மேலும் கிடைத்துள்ள தகவலாகும்.

பாபா நாயகத்தின் புனித உயிரணுக்களில் உதித்துள்ள பிள்ளை கனிஅமுதுகளான டாக்டர் மாஹேநூர், ஹைரியா, முத்துக்கனி, லைலா, சுல்தானா, ஃபஹிம், ஸனா, தாஹில், நூரி, அபிஜா, யூசுஃப், காதர், ஸையத், ஃபக்ருத்தீன், கௌதுன்னிஸா, தாஸின், தாமிரா, அஹ்மத் நிஸா, ஹபிபா, சிராஜ், ஹாஜி, அமீர், சிராஜ், ஃபாஷில், ஷகில், ரஸியா, ஹாஜா, சமீர், நிஜார், இர்ஃபான்,

எனது குருநாதர் எம்.ஜி. முகம்மது ஹுசைன் சாஹிபு நாதாவின் கண்குளிர்ந்த பிள்ளைகள் தௌபிகா, அஹமது, நூரியா, அப்துல் கரீம், சாதிகா.

எனது கலிஃபாக்களான அபுபக்கர் காதிரி, நஸீர் காதிரி, முஸ்தபா சூஷிஸ்தி எனது முரீதுகள் ரபீக், ரில்வான், அப்துல் காதர், சிராஜ், தஸ்தகீர், ஜாகிர்,யூசுஃப்,யாஸின் பீ, பீமா முகம்மத் ஜான், நூர் ஜான் இலியாஸ், உம்முல் பலுல், ஜீனத்முனவரா, பாத்திமா காதர், ஹாஜிராமா, பௌசியா, ராபி, மெஹர்நிசா,

ஆகிய அனைவரின் இகபர நல் வாழ்வுக்கும் துஆ செய்தவனாக பாபா நாயகம் அவர்களுடைய சன்னிதானத்தில் இந்நூலை சமர்ப்பணம் செய்கிறேன்.

உண்மையுள்ள

எம்.ஏ. ஹைதர் அலீ

கலீஃபத்துல் காதிரி ஷத்ததாரி சூஷிஸ்தி சர்கலிஃபா ரிஃபாயி

நெல்லிக்குப்பம்

*நீல வானின் ஒளிநிலவு*
*நீந்திச் செல்லும் நள்ளிரவில்*
*நீயும் நானும் ஒருயிராய்*
*நிறைந்திருக்கும் தனியறையில்*
*காலம் நேரம் தூரமெலாம்*
*கதையாய் முடிந்து போகாதோ*
*காயாபுரியின் செங்கோட்டை*
*கதவைத் திறவாய் மனோண்மணியே!*

*நிலவொளியின் நள்ளிரவில் நீயும் நானும் கலந்திருக்கும் தவயோகத்தில், காலம் தூரம் என்பதெல்லாம் கட்டுக் கதைதானே, உனது கோட்டையின் கதவை திறந்து உட்புகுந்து நான் உன்னோடு கலந்து இன்புற அருள் புரிவாய் எனது ஆன்மாவாகிய மனோண்மணியே.*

## பாராளும் பரி உலகம்

பிரபஞ்சம் ஒரு புதிர். பிரபஞ்சத்தில் வாழும் மனிதஜீவன் புதிரிலும் புதிர். “தன்னை அறிந்தவன் தன் இறைவனை அறிந்தான்” என்றனர் நபிகள் கோமான். ஆனால் அவர்களே பின்னொரு சந்தர்பத்தில் “ஞானம் வந்ததும் மனிதன் ஊமையாகிவிடுகிறான்” என்றார்கள். எனவே ஊமை மனிதனிடமிருந்து உண்மை வெளிப்படுவதில் பிரபஞ்சத்தையும் மனிதனையும் பற்றிய புதிர்விடுபடப்போவதுமில்லை. இந்த ஆத்மஞான அனுபவம் தனிமனித அனுபவமாக மட்டுமே இருக்க முடியும்.

பிரபஞ்ச இயக்கத்தை நடத்தாட்டி வருவது இரண்டே சக்திகள் என்று கண்டு பிடித்துள்ளனர். அவற்றில் எண்ணிலடங்காத நட்சத்திர மண்டலங்கள் பவனிவரும் எல்லையற்ற ஆகாச வெளியில் உணரப்படும் ஈர்ப்பு சக்தியையும், கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய அணுவில் உணரப்படும் அதிபயங்கர மின்சார சக்தியையும் இணைப்பது எது?

இவை இரண்டும் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணமாக ஏற்பட்ட ஆதிமூலசக்தியின் மாறுபட்ட தோற்றங்களே இவை என்னும் உண்மை புலப்பட்டுவிட்டது என்பது அறிவியல் கூற்று.

சிக்கலான இப்பிரபஞ்சத்தை வேற்றுமையற்ற கலப்பில்லாத ஒரே ஒருபொருள் அல்லது சக்தி என்று குறிப்பிடப்படுவது அப்பொளுடைய குணங்களின் கூட்டுத்தொகைதான். அக்குணங்களை உணருவது நமது புலன்கள் என்பதுதான் அதிசயம்.

நமது புலன்களை இயக்குவது மனம். ஆகவே நமது மனம்தான் வெளிப்பொருளைப் பற்றிய குணங்களின் இருப்பிடம். சக்தியும், பொருளும், அணுவும் அண்டமும் நிறைந்து காணப்படும் இப்பரந்த பிரபஞ்சம் முழுவதும் மனிதனின் சிருஷ்டி மனோவிகாரத்தை கலைந்து விட்டுநோக்கினால் இப்பிரபஞ்சம் இல்லை அது ஒன்றுமில்லாத சூன்யவெளி[1].

இப்பிரபஞ்சமே மனித மனத்தின் கற்பனை என்றாலும் கணித்து முடிக்க முடியாத இப்பிரபஞ்சத்தில் நமது அனுமானம் என்பது அற்பமானது. கற்றது கையளவு கல்லாதது கடலளவு என்ற பழமொழி பிரபஞ்சத்தைப் பற்றிய மனிதனின் அறிவுக்கு வெகுவாகப் பொருந்தும். இதை பகுத்தறிய முயன்றாலோ வேடிக்கைதான் விளைவு.

அணுக்கள் மூலக்கூறுகளை அடிப்படையாக கொண்ட தனிமங்கள் பௌதீக உலகம். மரபணு விலம் இவைகளை அடிப்படையாக கொண்ட நுண்ணுயிரிகள் ஊர்வன பறப்பன நடப்பனவெல்லாம் உயிரியல் உலகத்தை சேர்ந்தவை.

அண்டத்துக்கும் அணுவுக்கும் நடுவாந்திரமாக காணப்படுகிறான் மனிதன் என்று அறிவியல் கூறுகிறது. மனிதன் தன் புலன்களால் வானத்தையும், கிரகங்களையும் நட்சத்திரங்களையும் பார்க்கிறான். இதன் பெயர் அகிலம்.

அதே மனிதன் புலன்களை மூடி இதயகண்களைத் திறந்தால் சூக்கும உலகம் ஆத்ம உலகம் முதலிய அக உலகங்களை காண்கிறான். விஞ்ஞானிகள் மறுத்தாலும் இது மறைக்கமுடியாத உண்மை. வெளிபிரபஞ்சம் மனித மனத்தின் கற்பனை என்று முடிவுக்கு வந்துவிட்ட விஞ்ஞானம் அகப்புலன்களைப் பற்றிய செய்திகள் மனோவிகாரம் என்று கூறுவது விசித்திரமானது.

---

1. பார்வை : பிரபஞ்சமும் டாக்டர் ஐன்ஸ்டினும்
இந்தியா புக் ஹவுஸ் - சென்னை.

சூக்கும பரப்பிலேதான் தேவ கணங்கள் பூதங்கள், மலக்குகள் என்னும் வானவர்கள் ஜின்கள், பரிகள் இப்படி எண்ணற்ற அறிவு ஜீவிகள் வாழ்கின்றன. இந்த சூக்கும உலகங்களை அண்டத்துக்கும் அணுவுக்கும் நடுவாக நிற்கும் மனிதன் முயற்சி மேற்கொண்டால் இந்த ஜீவராசிகளை மனக்கண்ணால் தரிசிக்கலாம்.

காலத்தாலும் தூரத்தாலும் துவக்கத்தை தொட்டு பார்க்க முடியாதது இந்த பிரபஞ்சம். இது கால தூர நூல் இழைகளால் நெய்யப்பட்ட துகில் ஆடைப் போன்றது. பிரபஞ்ச வெளி என்ற தூர பரிமானத்தை தனியாகவும் காலம் என்பதை தனியாகவும் தான் நாம் பிரித்து உணர்கிறோம். நமது மனத்தின் இப்பிரிக்கும் மணப்பான்மை ஒரு தன்னிலை உணர்வு என்பது அறிவியல் விளக்கம்.

காலமும் தூரமும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் அற்றதாக கருதப்படுமானால் அவை நிழலாட்டம் போல் தோன்றி மறைந்து விடும். இரண்டையும் ஒருவாறு சேர்த்து பார்த்து அறியும்போது தான் இயற்கையின் தொடரோட்ட தோற்றம் நிலைநாட்டப் படுகிறது.

இயற்கையின் பின்புலம் என்பது காலதூர ஒருங்கிசைவு என்றிருக்கும் போது இயற்கை கடந்த நிகழ்வுகளின் பின்புலம் என்ன என்பதை மெய்ஞானிகள் மட்டுமே வர்ணிக்கிறார்கள். அதனை அவர்கள் காரணம் மாகாரணம் ஆத்துமம் சூக்குமம் தூலம் மனிதம் என்று வகைப்படுத்தி உள்ளனர்.

சடதத்துவ ஜீவிகள் அதாவது இயற்கை சக்தி மட்டுமின்றி சூக்கும உலக ஜீவிகளும் பிரபஞ்ச இயக்கத்துக்கு காரணமாக உள்ளன என்பது மெய்ஞானிகளின் கண்டுபிடிப்பு.

மாகாரணம் ஒரு மறைந்த பொக்கிஷம் அதை யாரும் அறிய முடியாது. அதிலிருந்து காரணம் தோன்றி ஆத்துமத்தை உற்பவிக்கிறது. ஆத்துமம் சூக்கும உடலோடு மனிதனில் புகுந்து ஜீவிதம் உண்டாக்குகிறது. இந்த மனித ஜீவிதத்தின் முடிவான நோக்கம் தன்னை அறிதலாகும்.

அதாவது ஆத்துமம் ஆகிய மனிதனில் உள்ள நான் தன்மை தூல சூக்கும உடல்களின் உதவியோடு தன் மூலமான காரண மாகாரண இருட்டில் ஊடுருவிப் பார்த்து தன்னை

இறைவன் என்று அறிந்துகொள்வதாகும். இதற்கு உபகரணங்கள் தேவைப்படுகிறது. உபகரணங்களில் முக்கியமானது காதல். தெய்வீகக் காதல்.

ஆத்துமா ஆகிய நான் தன்மை, இறைவன் என்ற சூரியனை நோக்கி தன் முகத்தை திருப்பி அதை நேசிக்கும் போது, சூரியனின் ஒளி அதில் பாய்ந்து பிறையைபோல வளர்ந்து முழுமதி நிலவாக பூர்ணம் அடைகிறது. அதாவது ஆன்மா முக்தி அடைகிறது. இவ்வாறு ஆத்மா இறைவனை சதாவும் வணங்கி நிற்க பூமியின் உதவி தேவைப்படுகிறது.

பூமியின் உதவி தேவையில்லையென்றால், பூமி என்பது படைக்கப் பட தேவையில்லை என்று ஆகிவிடும். ஆத்மா உலகில் காதலை தனக்கு உணவாக அருந்தி வாழ்கிறது. நிலவு கதிரவனிடமிருந்து ஒளியைப்பெற்றாலும் நிலவின் ஸ்திரத்தன்மை பூமியின் ஆகர்ஷன காதல் சக்தியை அடிப்படையாக கொண்டிருக்கிறது.

ஆன்மா ஆண்டவனின் ஒளியைப் பெற்று முக்தி நிலை அடைய லௌகீக காதல் அந்த ஆன்மாவுக்கு ஸ்திரத்தன்மையை தருகிறது. முகம்மது (ஸல்) அல்லாஹ்வை அடைவதற்கு கதிஜா என்ற மாதரசியின் காதல் ஆதாரமாக அமைந்தது. லௌகீகக் காதல் தெய்வீகக் காதலாக மலரும்போது ஆன்மா முக்தி பெறுகிறது.

எம்பெருமானாகிய முகம்மத் (ஸல்) பூமியில் அவதரித்து தன்நிலை உணர்ந்த நிலையில் பேசிய ஞானச்சிதறல்கள் விசித்திரமானவை. அவர்கள் “அவ்வலு மாக்கலல்லாஹு தஅலா நூரி - அல்லாஹ் முதல் முதலில் எனது ஜோதியை படைத்தான்” என்றார்கள். மேலும் “லௌலாக்க லமா ஹலக்துல் அக்வான் - முகம்மதே நீர் இல்லை ஆனால் பிரபஞ்சத்தை நான் படைத்திருக்க மாட்டேன்” என்பது ஹதீஸ் குத்ஸீ.

பெருமானார் (ஸல்) அவர்கள் அகண்டா கண்ட சுயஞ்ஜோதியும் சுயம்பிரகாசமும் சுயம்புமூர்த்தியும் பேரானந்த வடிவமும் ஆவார்கள். உலகில் தோன்றிய தீர்க்கதரிசிகள் அனைவரும் முகம்மதின் ஜோதிச் சுடர்களே என்று புர்தா ஷரீப் வர்ணிக்கிறது.

"முன்னவரும் பின்னவரும் நாமே" என்ற பெருமாரின் ஹதீஸ் மொழி நமக்கு முந்திய நபி மார்களும் நமக்கு பிந்திய ஒலிமார்களும் நாமாகிய முகம்மதே என்று பொருள்படும்.

நாகூரில் ஷாகுல் ஹமீத் பாதுஷா நாயகத்தின் ஜோதிச் சுடராக தோன்றிய சையது முகம்மது யூசுபு தாதா என்ற பூர்ணச் சந்திரனின் ஒளி வெள்ளமாக பாபா ஃபக்ருத்தீன் ஒலியுல்லா மாதரசி சுல்தான் பீவி உம்முசாகிபா அவர்களின் கருவில் தரித்தார்கள். ஹிஜ்ரி 968 கி.பி. 1560 ஆம் ஆண்டில் ஒரு வசந்த கால காலை பொழுதில் முகம்மதெம் பெருமானின் ஜோதிச் சுடராக பூமியில் உதித்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் ஏவல் பரியான மைமூன் ஹத்தும் அலீ ரலி எம்பெருமானின் பரிஉலக இளவரசி மும்தாஜும் பாபா ஃபக்ருத்தீன் என்ற பாலரின் முன் தோன்றினார்கள். "பாபா ஃபக்ருத்தீனாகிய அற்புத மைந்தரே பரந்த இந்த பாரத பூமியின் மெய்ஞானத் தென்றலாக நீர் விளங்குவீர். உமது பாதம் படும் இடங்களில் எல்லாம் மக்களை காத்து இரட்சிக்கும் மகோனமான ஞான மகான்கள் தோன்றுவார்கள். உமது பணிகளுக்கு பரி உலக அரசிகளாகிய நாங்கள் உதவி கரமாக இருப்போம்" என்று ஆசீர்வதித்தார்கள்.

*நித்திலங்கள் கோடியடி*
*நிலவு கதிரின் ஜோதியடி*
*பத்தினிமார்கள் சுற்றத்தில்*
*பவுர்ணமி நான்நீ பூமியடி*
*முக்திநிலை நான் கண்டறிய*
*முடிவை உணர தூர்சினா*
*அத்தி மரமே நானேமெய்*
*அறிவைத் தருவாய் மனோண்மணியே!*

*கோடி கோடி நட்சத்திரங்கள் சுற்றினாலும் கிரகங்கள் துணை நின்றாலும் முழு நிலவாகி நான் முக்தி பெற, சூரிய ஒளியை தெய்வீக ஒளியை கிரகிக்க நீயே துணை நிற்கிறாய் என் ஆன்மா ஆகிய மனோண்மணியே.*

*ஷாஜகானின் மஞ்சத்தில்*
*சாய்ந்தாய் வாழி பத்மினியே*
*போஜராஜன் நெஞ்சத்தில்*
*புகுந்தாய் வாழி அத்தினியே*
*ராஜராஜன் சன்னிதியில்*
*நடந்தாய் வாழி சித்தினியே*
*மாயா ஜால காமினியே*
*மறுக்காமல் வா மனோண்மணியே!*

*காமசூத்திர நூல்கள் வர்ணிக்கும் பத்மினி அத்தினி சித்தினி காமினி ஆகிய நான்கு வகைப் பெண்களிலும் மோகினியாகிய நீயே நின்று சல்லாபம் செய்கிறாய் என்பதை நானறிவேன். மாயாஜாலக் காரியாக இந்த பிரபஞ்சத்தை நடத்தி மறைந்து நிற்கும் மனோண்மணியாகிய தெய்வமே மறுக்காமல் வந்து என் மனதில் குடி கொண்டுவிடு!*

## நாகூர்பதியில் நடமாடும் பரஞ்சோதி

மாலை கருக்கிருட்டு வானிலிருந்து கீழிறங்கி வந்தது போல பூமியைத் தழுவிக் கொண்டிருந்தது. அதோ அருகில் நெருங்கிவரும் இரவின் அழகு முகத்தைப் போல முழுநிலவு மேலை வான் முகட்டில் முளைத்து எழுந்தது.

வங்க நெடுங்கடலின் ஓரமாய் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நடந்து கொண்டிருந்த அந்த பதினான்கு வயது சிறுவர் நிலா வெளிச்சத்தில் ஒளிரும் வைரமணி நீரலைகளைப் பார்த்தபடி நின்று நிதானித்தார்.

திடீரென அவர் எழுப்பிய கூக்குரல் தொடுவானின் எல்லை வரை சென்று எதிரொலிப்பது போல தோன்றியது. “எங்கு சென்றீர்கள் காதிர் ஒலி நாயகமே! தாதா ஷாகுல் ஹமீத் நாதரே! எங்குதான் மறைந்திருக்கிறீர்கள்?”

ஷாஹெ யூசுபின் தலைச்சனாகிய மைந்தர் பாபா ஃபக்ருத்தீனின் குரல் நிமிடத்துக்கு நிமிடம் ஓங்கி ஒலித்தது. கடலலைகளின் ஓச்சத்தையும் தாழ்த்தி மேலோங்கிய குரலைக் கேட்டு இரவும் இருளும் நடு நடுங்கியது.

“எனது பாட்டனாரே ஆண்டவனின் குத்பாகிய இறை ஆட்சியாளரே! அறியா பாலப் பருவத்திலேயே என்னுள் ஆண்டவனை அறிய வேண்டும் என்ற வேட்கைக்கு வித்திட்டவர்களே! தங்களை இழந்து அனாதை போல் அலையும் என்னை எங்கிருந்தாவது எட்டி பார்ப்பீர்களா?

“தந்தையே எனக்கு தாங்களன்றி அறிவு புகட்டுவோர் யார் இருக்கிறார்கள்? இதயத்தின் அடி ஆழத்திலிருந்து காலையும் மாலையும் கேட்கும் அந்த குரல், நபி பெருமானின் இனிய ஹதீஸ் மொழி மன் அரஃப நஃப்ஸ ஹு பகத் அரப ரப்பஹு - தன்னை அறிந்தவன் தன் தலைவனை அறிவான் என்ற அந்த நாதத்துக்கு எனக்கு தெளிவான விளக்கம் தருபவர் யார்?

“நிலாவின் ஒளியிலும், நீல வானத்திலும், மேக ஊர்திகளிலும், அதோ கேட்கிறதே அந்த பொங்கு மாங் கடலின் பரப்பிலும், பட்டுப் பாய் விரித்தது போல் படர்ந்து கிடக்கிறதே அந்த மணல் விரிப்பிலும், அதோ தெரிகிறதே தாங்கள் வாழ்ந்த மண்டபத்தின் மணிவிளக்கு அதன் ஒளியிலும்!

“அங்கெல்லாம் தேடுகிறேன் உங்களை! என் ஆத்மா வருடித் தழுவும் தங்கள் திருப்பாதங்கள் எங்கு சென்றதோ? என் நினைவுகளின் வேதனைகளுக்கு விடிவே கிடையாதா? எந்தையே ஏன் தாங்கள் கிலிறு நபி போல இந்த பேரனின் பாசத்திற்காக இறவாதிருந்திருக்க கூடாதா? என் கண்களை விட்டும் மறையாதிருந்திருக்க கூடாதா?

“துருக்மினிஸ்தானின் காடுகளிலிருந்து இரவோடிரவாக இரண்டாயிரம் மைல் கடந்து மாணிக்கப்பூர் வரை தோழர்களையும் அழைத்துக் கொண்டு சாதனங்கள் ஏதும் இன்றி இராட்சதப் பறவைகளைப் போல வானில் பறந்து வந்து அற்புதம் புரிந்தீர்கள்!

“நானூறு தோழர்களுக்கு முப்பது ஆண்டு காலம் பஞ்சமின்றி கிஸ்தியில் அறுசுவை உணவை விளையச்செய்து பசியாற்றி வந்தீர்கள்!

“மன்னர் அச்சுதப்பரின் தந்தையை மரணத்திலிருந்து மீட்டு வந்து பல்லாண்டு காலம் வாழ வைத்தீர்கள். கடல் கொண்டு சென்ற பட்டணமாரி பரவதர்களை உயிரோடு மீட்டு கொடுத்தீர்கள்!

“கௌது முகியித்தீனின் காரண வாரிசு நானே என்று சொல்லாலும் செயலாலும் இப்பாரெல்லாம் புகழ கராமத் என்னும் அற்புதங்கள் ஆற்றி மனுகுலத்துக்கு சேவை செய்தீர்கள்!

“புதுமையிலும் புதுமையாய் எந்தை யூசுபு நாயகத்தை, மரியம்மையின் மைந்தர் ஈசாவை வல்ல இறைவன் தன் உத்தரவால் உண்டாக்கியது போல் “உண்டாகும்!” என்ற உத்தரவால் எழுப்பி உங்களுக்கு பகரமாய் இருந்து, உங்கள் வாசலில் அமர்ந்து, நாடி வந்தோருக்கெல்லாம் நல்லருள் பாலிக்க செய்தீர்கள்!

“அடியேன் நாவறண்டு கூப்பிடும் குரல் மட்டும் உங்களுக்கு கேட்கவில்லையா பெருமானே?

*புரிந்தும் புரியாத பூதங்களாய் நின்ற*
*புவியின் மேற்பரப்பிலோ*
*புதுமை விதங்கொண்ட பேரண்டமாகிய*
*பூரணம் அதன் மீதிலோ*
*அறிதற்கு ஒன்னாத தாத்திலோ சிஃபத்து*
*அதுவான வெளிப் பண்பிலோ*
*ஆன்ம வெளியான ஆலம் மலக்கூத்திலோ*
*அகண்ட சூக்குமம் அதனிலோ*
*குறிகுணா தீத வட்டாங்க யோகத்திலோ*
*கோடானு கோடி மறையால்*
*கூறரிய சிவராஜ யோகத்திலோ அருள்*
*குறையாப் பெருங்கடலிலோ*
*தருமதயா அருளாளரே நீரிருக்குமிடம்*
*தனயனக் கருள் செய்குவீர்*
*நற்குணங் குடி கொண்ட பாத்துஷா வானகுரு*
*நாதன் முகியித் தீனே*
*சற்குணங் குடி கொண்ட ஷாகுல் ஷமீதரசரே*
*சர்தாரே முகியித்தீனே!”*

எம்பெருமான் முகியித்தீனின் திருநாமத்தையும் ஏந்தல் காதிர்ஒலி நாதரையும் ஒருமைப்படுத்தி பாலகர் பாபா ஃபக்ருத்தீன் குரலெழுப்பிய மறுகணம் அந்த கடற்கரை பிரதேசம் கிடுகிடுத்து நடுங்கியது.

பாலகர் கண்ணெதிரே ஜகஜ் ஜோதியாய் தோன்றி நின்றார்கள் காருண்ய ஜோதி கருணைக்கடல், கன்ஜபக்ஸ் கன்ஜ் சவாயி குத்புஜ் ஜமான் குத்புல் அக்தாப் ஃபர்துல் அஹ்பாப்! ஷாகுல் ஹமீது பாதுஷா காதிர் ஒலி ஆண்டவர்கள். அருமை பேரர் பாபா ஃபக்ருத்தீனின் சிரசை தன் மார்பில் அணைத்து பரிவுடன் தடவி ஆசிர்வதித்து,

"மைந்தரே நான் அழியாமல் இருக்கிறேன் என்ற உண்மையை முன்றாண்டுகளுக்கு முன் சட தத்துவ உடலை துறந்த மூன்றாம் நாளில் உமது தந்தையாரின் சலாத்துக்கு மண்ணறையிலிருந்து பதில் கூறி தெளிவு படுத்திவிட்டேனே!

"எதற்காக நீர் பதறுகிறீர்?

"மைந்தரே அறிந்து கொள்ளும், ஆண்டவனை அறிந்து கொள்ள ஆன்மாவை அறிந்து கொள்ள வேண்டும். ஆன்மாவை அறிய நீர் ... மைந்தரே நீர்...

"மைந்தரே சுல்தான் இபுறாஹீம் இபுனு அதுஹம் அவர்களின் கதையை உமக்கு கூறியிருக்கிறேனே நீர் மறந்து விட்டீரா?"

அடுத்த கணம் எஜமான் காதிர் வலி ஆண்டவர்கள் மறைந்து போனார்கள், கடலோர காற்றில் கரைந்து போனார்கள். அவர்கள் உயிரோடிருக்கும் போது கூறிய அரச ஞானியின் கதை இப்போது பேரரின் கண் முன் ஒளிஒலி காட்சியாய் விரிந்தது.

- - - - - - -

ஆம்! சுல்தான் இபுறாஹீம் இபுனு அதுஹம் அவர்கள் பல்க் இராஜியத்தின் அரசராக இருந்தார்கள். பரமனின் பாசம் இதயத்தில் மேலோங்கியதால் மனோ விசாரம் அடைந்தார்கள். ஒரு நாள் கவலையோடு அந்தப்புர கட்டிலில் படுத்திருந்த அவர்கள் உப்பரிகையில் யாரோ உருட்டுவது போல கேட்டு அதிர்ந்தார்கள்.

"யாரது? யாரடா அங்கே?" என்று அவர்கள் அதட்டிய போது உப்பரிகை முகட்டில் ஏகாலியைப் போல் ஒருவன் நின்று கொண்டிருந்தான். "என் கழுதையைக் காணவில்லை" என புலம்பி கொண்டிருந்தான்.

சிரிப்பை அடக்கி கொண்டு அரசர் கர்ஜித்தார். "கேடுகெட்டவனே உனது கழுதை எனது அந்தப்புரத்தின் உப்பரிகைக்கு எப்படி வந்தது? கிறுக்கனே உடனே கீழே இறங்கி ஓடி உயிர் பிழைத்துக்கொள்" என்று உத்தரவிட்டார்கள்.

மேலே நின்ற கோமாளி மேலும் நகைத்தான், விழுந்து விழுந்து சிரித்தான். "அரசே தாங்கள் அகிலமெலாம் அடைய வளைந்து கிடக்கும் மகா பெரிய இறைவனை உமது இல்லத்துக்குள் படுத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து அறிந்து அடைய முயலலாம். என் கழுதையை, அந்த சின்னஞ் சிறு விலங்கை உமது இல்லத்துக்குள் நான் தேடக் கூடாதா?" அடுத்தகணம் அந்த கோமாளி ஏகாலி மறைந்து போனான்.

அரசர் இபுராஹீம் இபுனு அதுஹம் அவர்களின் மனம் மறுகணமே விழித்து கொண்டது. அந்தப் புரத்தின் கதவை திறந்துகொண்டு வெளியே வந்தார்கள். வெறிச்சோடிய வானத்தைப் பார்த்தார்கள். பெருமூச்செறிந்தார்கள். மாலை கருக்கிருட்டில் மற்ற யாரும் அறியும் முன் அரண்மனையை விட்டு வெளியேறினார்கள். ஆட்சி அதிகாரம், மாளிகை மணி மண்டபம், அந்தப்புரம் அழகிய கன்னியர் தரும் இன்ப சுகம் எல்லாம் துறந்து நடந்தார்கள். காடோ செடியோ என்று கடந்தார்கள். படைத்தவனை தேட பரதேசி கோலம் பூண்டார்கள்!

- - - - - -

நிஜ கோலமாய் தன்முன் தோன்றி மறைந்த பாட்டனார் காதிர் ஒலி நாயகம், உயிரோடிருக்கும் போது முன்னர் கூறிய கதையை நினைவில் கொண்டுவந்தார்கள், பதினான்கு வயது பாலகர் பாபா ஃபக்ருத்தீன். ஆழிய சிந்தனை கடலில் மூழ்கினார்கள்!

மறுநாள் அதிகாலை "ஃபக்ருத்தீன் எங்கே? எங்கே?" என்று நாகூர் கிராம மக்கள் வலை போட்டு தேடி கொண்டிருந்தார்கள். அன்னை சுல்தான் பீபியும் வேதனையோடு வீட்டில் உட்கார்ந்திருந்தார்கள்.

தாதா சையித் முகம்மத் யூசுப் நாயகமோ, வடக்கே இந்துஸ்தானத்தை தாண்டி ஆப்கனின் எல்லையில் உள்ள அரசர் இப்னு அதுஹமின் தலை நகரமான பல்க் நகரை சென்றடையும் நோக்கத்துடன், சோழ மண்டல கடற்கரை ஓரமாக நெஞ்சில் ஆத்மீக தாபம் தீப்பற்றி எரிய, அடங்காப் பெரும் புயலாய் பாய்ந்து போய் கொண்டிருக்கும் தன் மூத்த மைந்தர் பாபா ஃபக்ருத்தீனை தூரதிருஷ்டியால் பார்க்கிறார்கள்.

இல்மு ல துன்னி என்னும் மெய்யொளியில் முன்னிரவில் நாகூர் கடற்கரையில் நடந்த சம்பவத்தை அறிந்து பெருமூச்செறிந்தார்கள். கன்னங்களில் வழிந்தோடிய வேதனை கலந்த ஆனந்த கண்ணீரை இரு கரங்களாலும் துடைத்துக்கொண்டார்கள்.

அறியாப் பருவத்தில் தன் ஆன்மாவின் தந்தை காதிர் ஒலி நாதாவைத் தேடி லாகூரிலிருந்து தனிமையில் புறப்பட்டு கடலும் மலையும் கானகமும் பாலையும் கடந்து தான் அரபகம் நோக்கி பறந்தோடியதை எண்ணிப் பார்த்தார்கள். அமைதி கொண்டார்கள்.

*எனது மனதை கொன்றுவிட்டேன்*
*எனக்குள் தெய்வம் கண்டுவிட்டேன்*
*தனது அல்ல என் காதல்*
*தலைவன் இஷ்டம் அறிவாயே*
*உனது மடியில் என்மரணம்*
*உயிர்தியாகம் ஷஹீதாமே*
*மனது நிறைந்த மாதவியே*
*மடியை தாராய் மனோண்மணியே!*

*எனது நான் என்னும் ஆனவத்தை கொன்றுவிட்டேன். ஆன்மாவாகிய மனோண்மணியே உன் மீது நான் கொண்ட காதல் இறைவனின் நாட்டமே அன்றி சுயநலமானதல்ல. உன் மடியில் மரணமடைந்து ஷஹீதாவதே என் விருப்பம்.*

*நித்திலம் மறைந்தது தாய்ஊரில்*
*நிலவு உதித்தது குப்பத்தில்*
*சத்திரமானது என் வாழ்க்கை*
*சாந்தி தந்தது மெய்ஞானம்*
*தத்துவமானது அத்திமரம்*
*தாயின் மடியில் சொர்க்கம் தான்*
*முத்தே மணியே மரகதமே*
*முடுகி வாராய் மனோண்மணியே!*

*வழிகாட்டும் துருவ நட்சத்திரமாக வந்த ஷெய்கு என் தாயின் ஊரில் மறைந்து போனார். குப்பையும் கூலமும் நிறைந்த குப்பமாகிய வெளியூர்களில் தான் நான் முழுநிலவாகிய நிலவை கண்டேன். சத்திர வாசியாகிய நான் மெய்ஞானத்தில் அமைதி கண்டேன். மூசா நபிக்கு அழைப்பு வந்தது போல் அத்தி மரத்தின் உச்சியிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. நான் தாயாகிய முகம்மதை உன்னிடம் கண்டுகொண்டேன். என் ஆன்மாவாகிய மனோன்மணியே முடுகி வந்து என்னை அணைந்துகொள்.*

## பாலகுமாரர் செய்த பரமோபதேசம்

அது பௌர்ணமி இரவின் அதிகாலை பொழுது. திருவண்ணாமலை குன்றத்தை கிரிவலம் வந்து காலோய்ந்த பக்தர்கள் அண்ணாமலையார் திருக்கோவிலின் அருகமைந்த சத்திரத்தில் ஓய்வு கொண்டிருந்தனர். பனியை விலக்கி பகலவன் கீழ் திசையில் எழுந்தான்.

வள்ளாள ராஜன், பிரவுட தேவராஜன் என்ற சோழர் குலத்து சிற்றரசர்களின் ஆட்சிக்குப் பிறகு, தஞ்சை அரசர் அச்சுதப்ப நாயக்கர் கோயில் திருப்பணி முடித்து மகாமக குளத்தைப் புதுப்பித்து திருவண்ணாமலையின் சிறப்பை நாடறியச் செய்தார்.

தனது அமைச்சர் கோவிந்த தீட்சிதரும் தாய் மூர்த்தியாம்பாளும் பட்டத்து தேவியர் மூவரும் காவல் படையினரும் தொடர முழுமதி நாளில் அருணாசலேஸ்வரரை தொழுது பணிந்து தூப தீபமேற்றி ஆராதனை புரிந்து, மன்னர் அச்சுதப்ப நாயக்கர் பரவசத்தோடு கோயிலுக்கு வெளியில் வந்தார்.

சோனாசலம், சோணகிரி, அருணகிரி, அனற்கிரி, திருவருணை, சிவயோகம் என பல பெயர்களால் அலங்கரிக்கப்படும் திருவண்ணாமலை, சிவப்பு பழுப்பு சாம்பல் நிறப்பாறைகள் நிறைந்து வானுயர நிமிர்ந்து நிற்கிறது. அதன் உச்சியில் கம்பீரமாக ராஜாளிப் பறவைகள் பறந்து சுற்றி கொண்டிருந்தன.

வானளந்த மாமலையின் பல வண்ண கோலங்களில் மனம் லயித்து நின்ற மன்னரின் கவனத்தை சத்திரத்திலிருந்து எழுந்த வினோதமான இதோபதேச சொற்பொழிவு ஈர்க்கிறது.

அங்கு யார் உட்கார்ந்து பேசுவது? யாரோ சிறுவரைப் போலல்லவா தெரிகிறது ஏன் அவரை சுற்றி இத்தனை கூட்டம்? பலாச்சுளையை ஈமொய்த்தது போல் அப்பாலகரின் சொற்பொழிவின் சாரத்தில் மது குடித்தவரைப் போல் மனம் மயங்கி நின்றார் மன்னர்.

இஸ்லாத்தின் வேதநூலான திருகுர்ஆனின் வசனங்களையும் இந்துக்களின் ஆராதனைப் பாடல்களையும் இணைத்துப் பேசும் வினோதமான அந்த குரல் யாருடையது? அரசர் ஆச்சர்யத்துடன் கூட்டத்தை ஆராய முற்பட்டபோது, கூட்டத்தின் நடுவாய் ஒரு பாறையின் மீது பச்சை தலைப்பாகையும் வெள்ளை சட்டையும் சராயும் அணிந்து தெய்வீகக்களையுடன் நின்றிருந்த பதினான்கு வயது பாலகரின் முகம் மன்னரை திகைப்புக்குள்ளாக்கியது.

“குல்ஹுவல்லாஹு அஹத் சொல்லுவீராக அல்லாஹ் இறைவன் ஒருவனே! அவன்
வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
யானென தென்றவரை கூத்தாட்டு வானாகி
கோனாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே!

என்ற தேவாரப் பாடலை போன்று யாவுமானவன்! நண்பர்களே அந்த இறைவனை தேடி அடைவதில் ஆர்வம் கொள்ளுங்கள்.”

அரசர் தனது அமைச்சரிடம் தாழ்ந்த குரலில் வினவுகிறார். “அமைச்சரே அங்கு இஸ்லாமிய மதப்பிரச்சாரமா நடைபெறுகிறது? அண்ணாமலையார் கோயில் சத்திரத்திலா? ஏதும் பாமினி சுல்தானியத்திலிருந்து ஊடுருவலா?”

கோவிந்த தீட்சிதர், மேலும் தாழ்ந்த குரலில் பேசினார், "இல்லை மன்னவா யாரோ ஒரு சிறுவர் உரத்த குரலில் மெய்ஞ்ஞானம் பேசுகிறார். குரானிலிருந்து மட்டுமல்ல தேவாரப் பாடல்களையும் இணைத்து பாடுகிறார் போல் தோன்றுகிறது."

மன்னர் சத்திரத்தின் படிகளில் ஏற முயலவே கூட்டம் விலகி வழிவிட்டது. அச்சுதப்பர் பாறையின் மீது நின்று கொண்டிருந்த பாலரின் முகத்தைப் பார்த்ததும் பரவசமாகி விட்டார்.

பாலராகிய பாபா ஃபக்ருத்தீனின் குரல் சிற்பியின் உளி ஓசை போல் வார்த்தைகளை செதுக்கி ஒலி எழுப்பி கொண்டிருந்தது. "நண்பர்களே! உங்களுக்குள்ளிருக்கும் நான் என்பதை அறிந்து கொள்ள முயலுங்கள். அரபகத்தில் தோன்றிய நபி பெருமானாகிய மகான் தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிந்தான் - மன் அரப நப்ஸஹூ ஃபகத் அரப ரப்பஹூ என்று நவின்றுள்ளார்கள்!

"நண்பர்களே! தன்னை பற்றிய அறிவுதான் மனிதர்களுக்கு கை கொடுக்கும். உலக சுகமெல்லாம் மரணமென்னும் மண்வீட்டின் வாசலில் ஒன்றுமில்லாமல் போய்விடும். உலகின் கவனத்திலிருந்து விழித்தெழுங்கள் மறுமையைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.

"நண்பர்களே! உங்களில் இருக்கும் நான் என்னும் நினைவுதான் உங்களுக்குள் முதலில் தோன்றிய நினைவாகும். இதை தொடர்ந்துதான் மற்ற எண்ணங்கள் உங்களுக்குள் சங்கிலித் தொடர் போல வளர்கின்றன. உங்களை அந்த எண்ணங்களின் சங்கிலித் தொடர், பாசவலைகளில் கட்டிப் போட்டு விடுகின்றது.

"நண்பர்களே! நான் என்ற எண்ணம் எங்கிருந்து புறப்படுகிறது என்று உங்களுக்குள் உசாவிப்பாருங்கள். "இருளாகிய மூன்றாம் கண்ணுக்குள் ஊடுருவிப்பாருங்கள். அந்த இடத்தை காப கௌஸைன் என்று ஸூஃபிகள் வர்ணிக்கிறார்கள். சிவபெருமானை முக்கண்ணன் என்பதெல்லாம் அவர் அந்த மூன்றாம் கண்ணால் பார்க்கும் தூரதிருஷ்டியுடையவர் என்பதால்தான்.

"நண்பர்களே! மரணமென்னும் இருள் சூழும் முன்னர் ஞானமென்னும் ஒளி வீட்டுக்குள் வந்து புகுந்து கொள்ளுங்கள். உங்களை ஆண்டவனின் பெயரால் எச்சரிக்கிறேன். உலக இச்சைகளின் நச்சரிப்புக்கு இரையாகி நாசமாகிப் போகும்முன் ஆண்டவனின் பாதத்தில் அழியா நிலையடைந்து நித்திய அமைதியில் நிலைகொள்ளுங்கள்!"

இளவலின் பேச்சு மழைகால காவிரி போல கரை கடந்து புரண்டோடி கொண்டிருந்தது.

"நண்பர்களே! உங்களுக்குள்ளே நீங்கள் அண்ணார்ந்து பார்த்தால் அங்கே மலை தோன்றும். அது கல்லினால் ஆன மலை அல்ல. தெய்வம் குடிகொண்டிருக்கும் ஆனந்தமலை. உற்றுற்று பார்த்தால் ஒளிதுலங்கும். ஆத்மா அருட்பெருஞ்சோதியாக விரியும். பூரண சந்திரனாக புருவமத்தியில் பிரகாசிக்கும். சித்தர்களின் பாடலை நீங்கள் கேட்டதில்லையா? உச்சிக்கு நேராய் உண்ணாவுக்கு மேல்நிதம் வைத்த விளக்கு எரியுதடி அச்சுள்ள விளக்கு வாலையடி அவியாமல் எரியுது வாலைப் பெண்ணே!

"ஆத்ம விசாரணை செய்யுமாறு உங்களை அழைக்கிறேன். கொழுந்து விட்டெறியும் உலக ஆசையின் எண்ணங்கள் உங்கள் இதயத்தில் தொடர்ந்து உண்டாகியுள்ளன இதை ஏன் என்று விசாரிக்க வேண்டும்.

"அப்படி நீங்கள் அந்த யார் ஆகிய நான் என்கின்ற உங்கள் மனத்தை ஊடுருவி கவனிக்க முனைந்தால் அதுதன் பிறப்பிடத்தை நோக்கி பின்வாங்கும். எந்த எண்ணம் எழுந்தாலும் அதை பின் தொடராமல் இந்த எண்ணம் யாருக்கு உண்டாயிற்று என்று கவனிக்க வேண்டும்.

"எனக்கு உண்டாகியிருக்கிறது என்றால் அந்த எனக்கு என்பவன் யாரென்று நீங்கள் ஆராய வேண்டும். மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்பினால் அது ஓய்ந்து ஒடுங்கும். அந்த எண்ணம் ஒதுங்கி ஓயுமிடம்தான் மனம்."

பாலர் பாபா ஃபக்ருத்தீனின் குரலிலிருந்து திடீரென ஒரு சமஸ்கிருதப் பாடல் ஒலிக்கத் தொடங்கியது.

*"பல்ஸ்தாவத் க்ரிதா சக்தா*
*ஸ்தாருநஸ்தாவத் தருணி சக்தா*
*வ்ருதஸ்த்வாத் சிந்த சக்தா*
*பரே ப்ரமணி கோபினா சக்தா*

*பால பருவத்தில் பொழுதும் விளையாட்டு*
*பருவம் வந்தோலோ மங்கைமேல் காதல்*
*காலன் வரும் முதுமையில் கவலைகள் கோடி*
*கடவுளை எப்போதுநீ கண்டுகொள்ளப் போகிறாய்?"*

ஆதி சங்கர பகவத்பாதரின் பஜகோவிந்தம் பாடலை சொற்சோரம் இன்றி பாடி பொருள் விளக்கும் இந்த வினோத பாலகர் யார்தான்? யார்தான்? அச்சுதப்பரின் சிந்தையில் பொறி தட்டியது.

ஆகா! இவர் நாகூரில் வாழ்ந்த மகானும் தஞ்சையில் தனக்கு ஞான தீட்சை தந்தவருமான காதிர் ஒலி ஆண்டவரின் பேரர்! ஆகா அதே அருள்முகம் ஒளி சிந்தும் கண்கள் துடிக்கும் அதரங்கள் அகன்ற மார்பு அலைகடல் போல் படர்ந்த தலைமுடி!

ஆகா! அச்சுதப்பர் உள்ளம் புல்லரித்தது. இந்த பாலகர் எப்படி இங்கு வந்தார். இந்த இளம் வயதில் ஏன் இல்லத்தை விட்டு வெளியேறினார்? சிந்தித்த அவரது செவிகளில் அந்த சிறுவர் எழுப்பிய வேத வசனவரிகள் கலகலத்தன.

*“பல் தூதிருனல் ஹயாத்த துன்யா*
*வல் ஆகிரத்து ஹைருன் வ அப்கா”*

“இந்த உலக வாழ்க்கை பறக்கும் தூசியை போன்றது. உணர்ந்து கொள். மரணமிலா பெருவாழ்வோ உனக்குரியது! என்பது திருக்குர்ஆன் வார்த்தைகள்.

“எண்ணங்கள் தோன்றுமிடத்தில் இறைவனை வை, லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமா மந்திரத்தை கூறி உங்கள் உலக கவனங்களை இலேசாக்கி கொள்ளுங்கள்! என்பது நபிமொழி.

“நண்பர்களே! உங்கள் உள்ளத்தில் எண்ணங்கள் பொங்கப் பொங்க அதிகமதிகம் சொற்கள் பிறப்பெடுத்து வருகின்றன. ஆனால் உங்கள் எண்ணங்களின் சொற்களை இறைவனின் பெயர்களாக மாற்றுங்கள்.

“இறைவனின் பெயர்களில் மனம் ஒருமைப்படும் போது அது அக உலகை, ஆன்மீக உலகை திறக்கும் மந்திரமாக மாறுகிறது.

*“ஹுவல்லாஹுல்லதி லாயிலாஹ இல்லல்லாஹு ஆலிமுல் ஹைரி வஸ்ஸஹாதத்தி ஹுவ ரஹ்மானுர் ரஹீம்.*

*“இறைவனைத் தவிர இறைவனில்லை. அவன் இரகசியம் பராசியமும் அறிந்தவன். அருளாளன் அன்புடையோன்!*

“பஜகோவிந்தம் பஜகோவிந்தம் பஜகோவிந்தம் மூஃடமதே
சம்ப்ரோ சாந்திஹிதே காலே நஹி நஹி ரக்ஷதி துக்ரன் கரணே!

பாடுமனமே பாடு பரமன் நாமம் பாடு
கூடுவிட்டு ஆவி ஓடும் முன்னே பாடு
தேடு மனமே தேடு தெய்வத்தின் முகத்தை தேடு!
அரபி மொழியிலும் சம்ஸ்கிருத மொழியிலும் தமிழிலுமாக

இளவல் ஆவேசமாகப் பொழிந்த வார்த்தைகளை கேட்டு கூட்டம் புரிந்தும் புரியாமலும் பேதலித்து நின்ற போது, இளவல் பாபா ஃபக்ருத்தீனின் முகத்தை சுற்றி தோன்றிய ஒளிவட்டத்தை கண்களால் கண்ட மன்னர் அச்சுதப்பர் ஓடோடி சென்று பாலகரை அணைத்து ஆசு வாசப்படுத்தினார்.

“மைந்தரே நீர் நாகூரார் ஞான கோமான் காதிர் ஒலி பேரர்தானே?” வினாவிடுத்த மன்னரின் முகத்தைப் பார்த்து மௌனமாக ஆம் என்றார்கள் பாலகர்.

“இல்லம் துறந்து இவ்வளவு தூரம் எங்கு வந்தீர் மைந்தரே?”

மன்னரின் கவலை படர்ந்த கேள்விக்கு பாலகர் தந்த பதில் மாமன்னரை அழவைத்தது.

“மறைந்து போன என் பாட்டனாரின் உபதேசம் ஆண்டவனை தேடு என்பதுதான். நான் ஆண்டவனை தேடி வீட்டை விட்டு வெளியேறிவிட்டேன்!” தன் குருநாதரின் பேரரை இறுகத்தழுவி அழுது கண்ணீர் உகுத்த அரசரை மக்கள் கூட்டம் வியப்போடு பார்த்து கொண்டிருந்தது.

பதினான்கு வயது பாலகரின் பால் உடலை மேலும் இறுகத் தழுவி கொண்ட மன்னர் முணுமுணுத்தப்படி “வேண்டாம் மகனே வேண்டாம் நீர் எங்கும் போக வேண்டாம் தஞ்சைக்கு வந்து விடும் என்னோடு !” என்றார்.

எல்லாம் உனக்கு சம்மதமா
எனக்கு எதுவும் சம்மதமே
அல்லா நான்தான் எனசொல்வேன்
ஆசை கிளிநீ தான்என்பேன்
கல்லால் என்னை அடிப்பார்கள்
கழுவில் ஏற்றி கொல்வார்கள்
நில்லா வாழ்க்கை நிஜமில்லை
நீயே நிஜமாம் மனோன்மணியே!

மனோண்மணியே! நான் அல்லா என்றும் என் ஆசை கிளி நீயே என்றும் பகிரங்கமாக நான் சொல்வதற்கு தயங்க மாட்டேன். மன்சூர் ஹல்லாஜை கல்லால் அடித்தது போலும் ஏசு பிரானை கழுவில் ஏற்றியது போலும் என்னை கொன்றுவிடுவார்கள். இந்த வாழ்க்கை நிஜமானது அல்ல எனது நிஜமும் காதலும் உன்மீது கொண்ட நேசமே ஆகும்.

*எத்தனை எத்தனை நாட்களடி*
*ஏக்கத் தனிமையில் நான் வாழ்வேன்*
*சத்திய மாக சொல்கின்றேன்*
*சாவு வரினும் மேலென்பேன்*
*முக்தியின் பீடம் சென்றடைய*
*முச்சுடரை நான் தரிசிக்க*
*இத்தரைமீது எனக்கு துணை*
*இனிஎவராம் சொல் மனோண்மணியே!*

*எத்தனைக் காலங்கள் உன் அருகாமை என்ற இன்பமில்லாத ஏக்கத் தனிமையில் நான் வாழ முடியும்? இந்த ஏக்கத்தை விட சாவு மேலானது. நான் முச்சுடரை தரிசிக்கவும் முக்தி அடையவும் எனக்கு நீ மட்டும் தானே துணை. அறியமாட்டாயா மனோண்மணியே.*

## தஞ்சை மாமன்னர் அச்சுதப்பர் சரணம்

பெரும் புயல் அடித்து ஓய்ந்தது. பேய் மழையும் நின்று போனது. திருவண்ணாமலையிலிருந்து மூன்று நாள் பயணத்தின் முடிவில் கொள்ளிடம் கரைக்கு வந்தடைந்த அச்சுதப்ப நாயக்கரின் படைபரிவாரத்தினர் திருவையாற்றில் கூடாரமிட்டனர்.

மழையும் புயலும் தடுத்ததால் ஓரிரு நாட்கள் அங்கேயே தங்கி மூன்றாம் நாளில் ஆற்றை கடக்க முயன்றனர். அகன்று பரந்த கொள்ளிடம் ஆற்றின் வெள்ளம் இருகரையையும் தொட்டு பிரவாகமாக புரண்டோடிக் கொண்டிருந்தது.

படை வீரர்களுடன், பரிகளும், ஆயுதங்களும், படகுகளில் ஏற்றப்பட்டன. மன்னரும், முதன்மந்திரியும், மன்னர் தம் குடும்பத்தினரும் நடுப் படகில் பயணிக்க, முன்னும் பின்னும் பாதுகாப்பு படகுகள் கடலென விரிந்த கொள்ளிட வெள்ளத்தில், சூழ்ந்து பயணம் புறப்பட்டன.

அச்சுதப்பரின் அன்பை மீற முடியாமல் பாலகர் பாபா ஃபக்ருத்தீன் மன்னரோடு படகில் தஞ்சையை நோக்கி சென்று கொண்டிருந்தார்கள். “மைந்தரே நாம் தஞ்சையில் சென்று சில நாட்கள் ஓய்வெடுத்துவிட்டு நாகூருக்கு சென்று வரலாமா?”

மன்னரின் கேள்விக்கு மௌனம் சாதித்தார் பாலகர். சீறிவந்த ஒரு சுழற்காற்று மீண்டும் பெரும் புயலுக்கு அறிகுறியாகப் படவே அப்போதைக்கு மன்னர் பாலகரை மேலும் வலியுறுத்தாமல் விட்டுவிட்டார்.

படகு நதியின் நடுவில் சென்ற போது சுழற்காற்றின் தீவிரம் அதிகரித்தது. படகோட்டிகள் மிகவும் சிரமப்பட்டு பயணம் தொடர்ந்தனர்.

ஆற்று வெள்ளத்தின் வேகம் படகை கிழக்கு நோக்கி இழுத்தது. படகை தெற்கு நோக்கி செலுத்த முயன்றனர் படகோட்டிகள். புயலோ படகை மேற்கு நோக்கி தள்ளப் பார்த்தது. சிக்கி கொண்ட படகோ மிதந்த இடத்திலேயே சுழலத்துவங்கியது.

திடீரென வானில் கார்முகில் கூட்டம் விரைந்து எழுந்தது. காரிருள் பூமியை சூழ்ந்தது. எதிர்பாராத இயற்கை சீற்றத்தால் மன்னரும் வீரர்களும் மற்றவர்களும் அச்சத்தின் பிடியில் சிக்கினர்.

என்ன செய்வதென்று யாருக்கும் புரியவில்லை. படகை வடக்கு கரைநோக்கியே திருப்பிவிடலாமா? மன்னர் சிந்தனையில் ஆழ்ந்தார். அவர் முகத்தில் கவலை படர்ந்தது. இக்கட்டான அத்தருணத்திலும் அவர் பாலகரை கைவிடவில்லை.

பாலகர் பாபா ஃபக்ருத்தீனை இறுகத் தழுவிக் கொண்ட அவர் "மைந்தரே அஞ்ச வேண்டாம்" என்று செவிகளில் ஆறுதல் மொழி கூறினார். பாலகரோ அவர் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு படகின் சுக்கானை நோக்கி ஓடினார்கள்.

*"அல்மதத் யாஷெய்க் அல்அமான்!*
*ஓ குருவே கருணை செய்யுங்கள். காப்பாற்றுங்கள்!"*

இளவலின் கூக்குரல் இருளை கிழித்து கொண்டு வான் நோக்கி உயர்ந்தது. அடுத்த நொடிப் பொழுதுகளில்...

வானில் சூழ்ந்த கரிய கார்மேகங்களினூடே ஓர் ஓட்டை விழுந்தது. அந்த ஓட்டையினுள் கதிரவன் கண்ணாடி துண்டைப் போல் பளபளத்து ஒளியை உமிழ்ந்தது. சூறை காற்று, சுற்றிய பம்பரம் நின்று கவிழ்ந்தது போல் ஓய்ந்தது. சுழன்ற படகும் ஒருநிலைக்கு வந்து அமைதி கொண்டது.

பெருகி வந்த வெள்ளம் பின் வாங்கவே ஏதோ அசாதாரண சம்பவம் நிகழ்ந்து முடிந் தது போல் அனைத்தும் சில நொடிகளில் சகஜ நிலைக்கு வந்தது.

எதற்கும் அஞ்சாத மாவீரரைப் போல் சுக்கானின் அருகே நின்றிருந்த பாபா ஃபக்ருத்தீன் மன்னரை திரும்பி பார்த்தார்கள். மன்னர் அச்சுதப்பர் பாலகரைப் பரவசத்தோடு நோக்கினார். படகில் இருந்த மந்திரிப்பிரதானிகளும், மன்னரின் உறவினர்களும், சுற்றி சூழ்ந்த பாதுகாப்பு படகுகளில் நின்ற வீரர்களும் பாலகரை ஆச்சர்யத்தோடு பார்த்து பரவசப்பட்டார்கள்.

அச்சுதப்பர் பாலகரை அருகிலழைத்து நெற்றியில் முத்தமிட்டு உச்சி முகந்தார். தன் முதலமைச்சரிடம் பெருமையுடன், “இவர் என் குருநாதரின் பேரர், ஈ சின்ன பிள்ளடு நா குரு மனமுடு” என்று கூறினார். மகிழ்ச்சியால் பனித்த தன் கண்களை அங்கவஸ்திரத்தால் துடைத்து கொண்டார்.

நாழிகைப் பொழுதில் படகுகள் அனைத்தும் எவ்விதப் பங்கமுமின்றி பாதுகாப்பாக தெற்கு கரையை அடைந்தன. பொழுது விடிந்தது போல் சூரியன் பிரகாசமாக உச்சியில் பிரகாசித்ததால் அரசப் பெண்டிர்கள் பல்லக்குகளிலும், மன்னரும் பிரதானிகளும் பரிவாரங்களும் பரிகளிலும் குதூகலமாக தஞ்சை நோக்கி புறப்பட்டனர்.

- - - - - -

அரண்மனையின் உப்பரிகையில் நின்றிருந்தார் அச்சுதப்பர். தஞ்சை மாநகரிலிருந்து வெளியேறிச் செல்லும் மூன்று பிரதான வீதிகளை அவர் பார்வையிட்டு கொண்டிருந்தார். அவற்றில் ஒன்று கொடும்பாளூர் வழியாக இராமேசுவரம் செல்லும் சாலை, இன்னொன்று உறையூர் வழியாக தென்பாண்டி செல்லும் சாலை, மற்றொன்று கரூருக்கும் சேர நாட்டுக்கும் செல்லும் நெடுஞ்சாலை.

இந்த மூன்று வழியாகவும் முன்னொரு காலத்தில் சோழர் படைகள் ரதகஜதுரக பதாதைகளில் புறப்பட்டு சென்று தமிழகத்தை முழுமையாக வென்ற சம்பவங்கள் வரலாற்றில் பலமுறை நடந்திருக்கின்றன. புலி உருவம் பொறித்த கொடிகள் பறக்க படை நடத்திய சோழ மன்னர்கள் அவர் நினைவில் அணி வகுத்தனர்.

ஆகா இந்த அற்புதமான நகரத்தை முழுமையாக உருவாக்கியவர்கள் ராஜராஜசோழனும் இராஜேந்திர சோழனும் ஆவார்கள். இந்த நகரத்தை மட்டுமா உருவாக்கினார்கள் அதோ தெரிகிறதே அந்த கலைகோயில் தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம் என்னும் சிவன்கோயில் அதுவும் அவர்களின் கலை படைப்புதான்.

அச்சுதப்பநாயக்கர் வைஷ்ணவர்தான் எனினும் அவர் சிவபெருமானிடம் கொண்ட பக்தி கொஞ்சமும் குறைவானதல்ல. "அரியும் சிவமும் ஒன்னு அரியாதவன் வாயில் மண்ணு" என்ற பழமொழியை அவர் பெரிதும் மதிப்பவர்.

கிருஷ்ணதேவராயரின் காலத்துக்குப்பின் கொஞ்சம் கொஞ்சமாக பலமிழந்த விஜயநகர சாம்ராஜ்யத்தின் மறு தோற்றமாகவே செஞ்சி மதுரை தஞ்சைபதிகளில் நாயக்கர் ஆட்சி தோன்றியது. காஞ்சி, நாகை, நெல்லை ஆகிய நகரங்கள் சிறப்புற்றிருந்தன.

விஜயநகர சாம்ராஜ்ய ஆட்சியிலும் நாயக்கர் ஆட்சியிலும் வடக்கில் கர்நாடகம் ஆந்திரம் ஆகிய நிலப்பரப்பிலிருந்து கன்னடார்களும் தெலுங்கர்களும் தமிழகத்தில் குடியேறினர். மெய்ஞ்ஞானம் சார்ந்த இலக்கியம் இக்காலகட்டத்தில் தமிழில் பெரிதும் வளர்ந்தது.

சைவர்களோ, ஸ்மார்த்தர்கள், பாசுபதத்தினர், வீரசைவர்கள் ஆகிய முப்பிரிவாகப் பிரிந்திருந்தனர். வைணவ சமயத்தில் வடகலை தென்கலை என்று இருபிரிவுகள் தோன்றின. வடகலையினர் தன் முயற்சியாலேயே இறைவனை அடைய முடியுமென்றும் தென்கலையினர் இறைவனே நம்மை காப்பான் என்றும் கூறினர்.

இக்காலகட்டத்தில் தான் சங்கைக்குரிய ஷாகுல்ஹமீது பாதுஷா நாயகம் இஸ்லாமியத்தையும், ஸூஃபி ஞானமார்கத்தையும் பிரச்சாரம் செய்தவர்களாக தமிழகம் முழுதும் சுற்றினார்கள். இருசுப்பகண்ட நாதர் காஞ்சியில் சமணதுறவியாக வாழ்ந்தார். செயின்ட் ஃபிரான்சிஸ் சேவியர் கிறிஸ்துவ மார்க்கத்தை பிரச்சாரம் புரிந்தார்.

தமிழகத்தின் தற்கால நிலையை சிந்தித்தபடி நின்றிருந்த மன்னரின் பார்வை தஞ்சை பெரிய கோயில் விமானத்தின் மீது விழுந்தது. அதோ தெரிகிறதே உச்சிப் பொற்கவசம் அது கதிரவனின் பொன்னொளியில் தகத்தகாயமாய் பிரகாசித்தது. அவருக்குள் உணர்வு ஒன்று திடீரெனப்பாய்ந்தது.

இதோ இந்த தஞ்சைப் பெரியகோயிலில் விமானத்தை அலங்கரிக்கும் பொற்கவசம் போன்றதொரு எழிற்கவசத்தை நாகூரில் தன் குருநாதரான நாகூர் ஆண்டவரின் அடக்கத்தலத்துக்கு மேல் அமைத்து அழகு பார்க்க வேண்டும். தஞ்சை கோயிலின் உச்சியைப்பார்க்கும் போதெல்லாம் தன் குருநாதரின் நினைவு தனக்கு வரவேண்டும்.

சிறிதுநேரம் சிந்தித்தபடியே அரசர் அச்சுதப்பநாயக்கர் நின்றிருந்தார். தூரத்தில் காவிரி கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. தென்னந்தோப்புகள் மௌனமாக நின்று கொண்டிருந்தன. காலை பறவைகள் மரக்கூடுகளிலிருந்து வெளிவந்து பாடிப்பறந்தன.

“ஆண்டவரே நாகூராரே! என் ஆசையை நிறைவேற்றுங்கள்!” என்று அவர் நாவசைத்து முணுமுணுத்தபோது பின்னாலிருந்து குரல் கேட்டது. “ஆகா அற்புதமான முடிவு!” உப்பரிகையின் உச்சிக்கு படியேறி வந்த பாலர் பாபா ஃபக்ருத்தீனின் வார்த்தைகள் அவரை திடுக்கிடச்செய்தது.

இந்த வயதிலேயே இத்தனை அற்புதங்களா இச்சிறுவரிடம்? தன் எண்ணத்தை எப்படி இவர் படித்தார். அடுத்தவர் சிந்தனைகளை உய்த்துணர்வது அஷ்டமா சித்துகளில் ஒன்றல்லவா! இவ்வாறு சிந்தித்து அதிசயமாகத் தன்னைப் பார்த்த மன்னரை நோக்கி அந்த பாலகர் புன்னகைத்தார்.

“குருநாதரின் மண்ணறை மண்டபத்துக்கு ஒரு பொற்கலசம் அமைக்க வேண்டுமென்ற முடிவு அற்புதம்” என்றார் பாலகர்.

அவரருகில் விரைந்த மன்னர் அந்த அற்புத பாலகரை தூக்கி தன் தோளில் ஏற்றி கொண்டார். ஆலோசனை மணிமண்டபத்துக்கு விரைந்த அவர் அங்கு அமர்ந்திருக்கும் இராஜப்பிரதானிகளின் கவனத்தை கவருமளவுக்கு திருமூலநாயனாரின் பாடலை சப்தமாக பாடிக்கொண்டு வந்தார்.

*“தெளிவு குருவின் திருமேனிகாண்டல்*
*தெளிவு குருவின் திருநாமம் செப்பல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குருஉரு சிந்தித்தல்தானே!”*

தனது அரச இருக்கையில் பாலகரை அமர்த்தி பாதபூஜை செய்யத்தொடங்கினார். தங்க தாம்பளத்தில் பாலகரின் பாதத்தை ஊன்றச்செய்து வெள்ளி சொம்புகளிலிருந்து பன்னீரும் தண்ணீரும் ஊற்றச்செய்து,

*“குருகுரு ஜப்னா ஜகத்அவுர் சப்னா*
*குருகுரு என்று ஜபம் செய் குருவே உனக்கு பிரபஞ்சம்!”*

என்று மன்னர் சமஸ்கிருத மொழியில் ஜபித்து கொண்டே கண்ணீருகுத்தபடி பாலகரின் பாதங்களை கழுவி, தன்பட்டு பீதாம்பரத்தால் துடைத்து முத்தமிட்டார்.

அதற்குள் மணிமண்டபத்தில் பிரதான அமைச்சரான கோவிந்த தீட்சிதரும் மற்ற அமைச்சர்களும் வந்தமர்ந்தனர். மத்வ ஆசாரியரான விசயீந்தர தீர்த்தரும் மற்றோர் அறிஞரான அப்பய்ய தீட்சிதரும் ஆச்சர்யத்தோடு அமர்ந்திருந்தனர்.

பட்டத்தரசிகளான திருகமலாம்பா, உதயமங்கை, வரதாம்பிகா ஆகியோரும் தோழியரும் வந்து கூடினர். இப்போது மன்னர்பிரான் பாலர் பாபா ஃபக்ருதீன் முன் எழுந்து நின்று பக்தி பரவசத்தோடு பாடத்தொடங்கினார்.

*“அல்லா எனும் அந்த ஆதிப்பிரம்மம் நீயே - இந்த*
*அகிலத்தின் ஆனந்த சோதிமுகம்மதும் நீயே*
*சொல்லும் பிரம்மா பார்புகழ் சிவசக்தி நீயே - அந்த*
*சுந்தரன் கோவிந்தன் காரெழில்கண்ணன் நீயே*
*கல்லை உருக்கும் காவியராமன் சீதையும் நீயே - எந்தன்*
*கண்கள் குளிரும் முருகன் விநாயகன் நீயே*
*எல்லைஇல்லா பரம்பொருளே என் குருவே - என்னை*
*ஏற்றுக் கொள்வீரே காதிரே ஷாகுல் ஹமீதரசரே!”*

யாருமறியாமல் தன் மனதில் பல வருடங்களாய் பாடிவரும் தன் சொந்த குருவணக்கப் பாடலை, மன்னர் வாய்விட்டு உருக்கமாகப் பாடக்கேட்டு, தெள்ளத்தெளிந்த அவர் உள்ளத்தின் நிலை அறிந்து அதிசயித்தனர் அவையோர். அச்சுதப்ப நாயக்கரின் அரண்மனை தூண்களும் அவர் துதிப்பாடலை கேட்டு உள்ளம் குளிர்ந்தன.

சுயநலம் என்று சொன்னாலும்
சொல்லறு தியாகம் என்றாலும்
கயவன் காதகன் என்றாலும்
காமுகனோ நான் காதலனோ
உயிரும் உனக்கு சீதனமாய்
உடல்உன் மடியில் சங்கமமாய்
புயலில் சிக்கிய கோயில்புறா
புகுந்தேன் பாதம் மனோண்மணியே!

மனோண்மணியே உன்மீது நான் கொண்ட காதல் சுயநலம் என்று சொன்னாலும் இறைவழியில் தியாகம் என்று எடுத்துக்கொண்டாலும், கயவன் காதகன் காமுகன் என்று நான் கருதப்பட்டாலும், தெய்வீக காதலன் என்று பேசப்பட்டாலும், எனது இறுதி முடிவு உன் மீது கொண்ட காதலினால் முக்தி பதம் அடைவதாகும். நான் புயலில் சிக்கிய கோயில் புறாவைப்போன்று உன் பாதத்தில் சரண் அடைகிறேன்.

*ஒருமையா தெய்வம் ஒன்பதா*
*உலகில் நடக்குது மதச்சண்டை*
*உருவம் உண்டா உருவிலியா*
*உடையுது மனிதர்தம் மண்டை*
*மர்மம் அவிழ்ப்பாய் மாதவியே*
*மதங்கள் உன்கால் பரல்தண்டை*
*தர்மமா இதுஉன் மர்மமா*
*தாயே பேசு மனோன்மணியே!*

*தெய்வம் ஒன்றா பலவா என்று ஒரு போராட்டம்! தெய்வத்துக்கு உருவம் உண்டா இல்லையா என்று ஒரு போராட்டம்! இப்படி உலகெங்கும் பல மதங்களின் போராட்டம் நடந்தாலும் அனைத்தும் உன் கால் சலங்கையின் ஓசை என்பது எனக்கு புரிகிறது. ஆனால் மதத்தின் பெயரால் இப்படி மனிதர்களின் மண்டை உடைவது என்பது நியாயமா மனோண்மணியே?*

## ஏகத்துவ சட்டமும் ஏகாந்த தத்துவமும்

“மைந்தரே ஃபக்ருத்தீன் அதிகாலை தொழுகை முடித்துவிட்டீரா. வாரும் என்னோடு குதிரையில் ஏறி காவிரி கரை ஓரம் சென்று வரலாம்.”

அச்சுதப்ப நாயக்கரின் அழைப்பை ஏற்று அரசரும் பாலகரும் இரு கருநிறப் பரிகளில் காவிரியை நோக்கி புறப்பட்டனர். அரண்மனையிலிருந்து பொன்னி ஆற்றங்கரைக்குப் போய்ச்சேர ஒரு சிறிய பாதை அமைக்கப் பெற்றிருந்தது. அப்பாதையின் இருபுறமும் அழகிய மலர்செடிகள் வளர்த்து விடப்பட்டிருந்தது.

சில மணித்துளிகள் பயணத்திற்கு பிறகு சலசலத்து ஓடிய ஆற்றின் கரைமேட்டை அந்த பாதை சென்று தொடுமிடத்தில் ஓங்கி உயர்ந்த சிவலிங்கமொன்று அமையப் பெற்றிருந்தது. அதன் அருகில் சில சவுக்கை மரங்கள் வானளாவ உயர்ந்து நின்றன.

சவுக்கை மரங்களில் முற்றிக் காய்ந்த சவுக்கங் காய்கள் சரம் சரமாக தொங்கி கொண்டிருந்தன. முனிவர்கள் கழுத்து நிறைந்த உத்திராட்ச மணிமாலைகள் அணிந்து கொண்டு யோக நிஷ்டையில் உட்கார்ந்திருப்பது போன்ற தோற்றம் உண்டாகியிருந்தது.

இந்த வினோதமான காட்சிகளை ரசித்தபடி சென்ற மன்னர் அச்சுதப்பர் பாலகரை பார்த்து கேட்டார், "மைந்தரே சிவனுக்கென்று ஒரு உருவமிருக்க ஒரு சிவலிங்கத்தை ஏன் சிவனாக வடித்தார்கள். என் மனதில் இது நீண்ட கால வினா!" என்றார்.

"மன்னவா என்னிடம் நீங்கள் விளக்கம் கேட்பதா? என்ன மன்னவா? நீங்கள் வயதாலும் அறிவாலும் முதிர்ந்தவர் ஆஸ்திகரான இந்து. நானோ முஸ்லிம் சிறுவன்!" என்றார்கள் பாலகர் ஃபக்ருத்தீன்.

"போதும் மைந்தரே உமது திருவிளையாடல்களை எல்லாம் பத்து நாட்களாய்ப் பார்த்துகொண்டு தானே வருகிறேன். உமது இரத்தம் மைந்தரே அது என் குருநாதர் நாடறிந்த மகான் காதிர் ஒலியின் இரத்தம். அது மத பேதம் கடந்த தெய்வீக இரத்தம்.

"உமது தந்தையை உங்கள் ஊரில் உள்ள சில குளறுபடிகள் நாகூராண்டவர் வளர்ப்பு மகன் என்று சொல்கிறார்களாம். எனக்கு உமது தந்தை உமது பாட்டனாரின் பிரார்த்தனையால் பிறந்த பிள்ளை மட்டும் அல்ல அவர்களின் அற்புத தெய்வீக வாரிசு என்றே தோன்றுகிறது. உமது முகத்தில் எனது குருநாதர் காதிர் ஒலி ஆண்டவரின் நிலவு முகத்தை அப்படியே நான் பார்க்கிறேனே.

"மைந்தரே தெலுங்கு மொழியில் ஒரு கவிதை உண்டு, ரோஜா நுஅந்தம் நூக்கு தெரிலேது - ரோஜா மலரே உன் அழகு உனக்கு தெரியாது" என்பது அந்த கவிதை. உம்மை பற்றி உமக்குள் இருக்கும் உன்னதம் பற்றி உமக்கு தெரியாது ஆனால் அது எனக்கு தெரிகிறது. சரி சொல்லுங்கள் இந்த லிங்கவடிவத்தை ஏன் வடித்திருக்கிறார்கள்?"

“மன்னவா மும்மூர்த்திகள் என்று இந்துக்கள் கொண்டாடினாலும், மூவருக்கும் வடிவங்கள் தந்திருந்தாலும் வடிவமற்ற இந்த லிங்கத்தில் நீங்கள் எந்த மூர்த்தியை வேண்டுமானாலும் சிந்திக்கலாமே! அதற்காகத்தான்.”

“மைந்தரே அற்புதம் உமதுவிளக்கம். ஆமாம் இந்த அறிவையெல்லாம் சிறு வயதிலேயே எப்படி நீர் கற்றீர். எங்கிருந்து கற்றீர் யார் சொல்லி தந்தார்கள்? இஸ்லாமிய சன்மார்க்க ஞானங்களை நீர் பெற்றிருப்பது இயல்பு! ஆனால் இந்துமத சாத்திரங்களை கரைத்து குடித்ததுபோல் பேசுகிறீரே எப்படி?”

பாலகர் சிரித்தார்,

“மன்னவா தங்களுக்கு மட்டுமல்ல எனது பாட்டனார் காதிர் ஒலி எனக்கும் குருவானவர் தான். மூன்று வயதில் அவரிடமிருந்து ஞானோபதேசம் பெற்றேன். எம்பிரானாகிய ஆண்டவர் காலமாவதற்கு சில மாதங்களுக்கு முன் தம்மிடமுள்ள பதினான்கு ஞானபாட்டைகளின் நபிவழி பிரதி நிதித்துவத்தை கலீஃபா என்னும் பொறுப்பை எனக்கு வழங்கினார்கள்.

“எனக்கு அறிவு கண் திறந்த காலத்திலிருந்து நான் எனது பாட்டனாரின் அருகில் தான் அமர்ந்திருந்தேன். அவர்களை நாடி நாள்தோறும் நூற்று கணக்கான மக்கள் சோழ நாட்டின் எல்லைகளிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் வந்து கொண்டேயிருப்பார்கள்.

“நோய் நொடி நெரம்பலம் நீங்க பரிகாரம் தேடிவருவோர், செய்வினை சூன்ய பாதிப்பிலிருந்து விடுதலை வேண்டுவோர், ஏழ்மை வறுமையிலிருந்து வாழ்க்கையின் வளம் தேடி வருவோர். இப்படி சமுகத்தின் பல்வேறு பாமர மக்களோடும், ஞானம் தேடி முஸ்லிம்கள் மட்டுமல்ல இந்துக்களில் சைவ வைஷ்ணவர்களும் கிறிஸ்துவர்களும் கூட வருவார்கள்.

“இந்து சன்னியாசிகளும் முனிவர்களும் ஆண்டவர்களின் எதிரில் நின்று இடுப்பில் கச்சையைக் கட்டிக்கொண்டு கண்ணீர்மல்க பக்தி பாடல்களைப் பாட நான் கேட்டிருக்கிறேன். ஆண்டவர்கள் யாரையும் தடுக்கமாட்டார்கள்.

“நான் ஏழு வயதில் திருகுர்ஆனை மனப்பாடம் செய்துவிட்டேன். காதால் கேட்கும் எந்த தமிழ் பாடலையும் ஒரு முறை கேட்டால் எனக்கு மனனமாகிவிடும்.

“எப்படி என்றால் எனது பாட்டனார் காதிர் ஒலி ஆண்டவர்கள் அனுதினமும் என் நெஞ்சில் கைவைத்து ஓதிமுகத்தில் ஊதுவார்கள். அதன் விளைவுதான் எனக்குள் நீங்கள் காணும் உன்னதம் என நான் நினைக்கிறேன்.”

மன்னர் அந்த மரியாதைக்குரிய பால ஞானியின் அர்த்தமுள்ள வார்த்தைகளை கேட்டு அதிசயித்து நின்றார். இளவல் தொடர்ந்தார்.

“மன்னவா எனது பாட்டனார் என்னை பாபா என்று தான் அழைப்பார்கள். எனக்கு இட்ட பெயர் ஃபக்ருத்தீன் என்பது மட்டும் தான். என் பாட்டனார் என்னை செல்லமாக பாபா என்றுதான் அழைப்பார்கள். நீ தமிழ் நாட்டில் பிறந்தவன் தமிழை நன்கு கற்று கொள். உன் சந்ததிக்கு தமிழ்தேவை என்பார்கள்.

“மன்னவா எனது பாட்டனார் அமர்ந்திருந்த இடம் ஒரு பெரிய புளியமரத்தின் நிழல். அவர்கள் ஆசனத்தில் இல்லாதபோது அங்கு வரும் அறிஞர் பெருமக்களும் ஞானிகளும் என்னிடம் அன்போடு பேசுவார்கள்.

“நானும் அவர்களிடமிருந்து கற்று கொள்வேன். ஆழ்வார்களையும் நாயன்மார்களையும் இந்து ஞானிகள் பலரையும் நான் நன்றாகவே அறிந்திருக்கிறேன்.

“சிவலிங்கத்தைப் பற்றி என்னிடம் வினா விடுத்தீர்களே. நீங்கள் தானே நேற்று, தெளிவு குருவின் திருமேனி காண்பது! என்று திருமந்திரத்தைப் படித்தீர்கள். மேற்கொண்டு தாங்கள் படிக்கவில்லையா மன்னவா?

*“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்*
*வள்ளல் பிரானார்க்கு வாய்க் கோபுர வாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனனைத்தும் காலா மணிவிளக்கே*

“மன்னவா உங்கள் கேள்விக்கு திருமந்திரத்தில் தெளிவான பதிலிருக்கிறதே. தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம். உள்ளில் உயிராய் உறைந்த பரஞ்சோதிதான் சிவலிங்கம். உயிருக்கு உருவமில்லை என்பது போலத்தான் சிவலிங்கத்துக்கும் உருத்தோற்றமில்லை.”

பாலகரின் அற்புதமான பதிலை கேட்டு மன்னர் பரவசமடைந்தார்.

“என் சிந்தைக்கினிய சின்ன எஜமானே! எனக்கொரு விளக்கம் தேவை. இசுலாம் இறைவனுக்கு உருவம் இல்லை என்கிறது. இந்து மதத்தின் ஒவ்வொரு பிரிவிலும் உருவத்தை வணங்குவதே இறைவழிபாடு. ஏனிந்த பேதம் மகனே? மதப்பகை இங்கு தானே ஆரம்பமாகிறது.”

“மன்னவா கலிமா திருமந்திரத்திலுள்ள இலாஹ் என்ற சொல்லுக்கு வணக்கத்திற்குரிய இறைவன் என்பது தவிர உள்ளப் பொருள் அனைத்தும் இறைவனே என்ற பொருளும் உண்டு. இஸ்லாமிய மதம் குறிப்பற்றதை குறிப்பற்றதாக அறிந்து வணங்கு என்று சொல்கிறது. இந்து மதமோ குறிப்பற்றதை குறிப்பைக் கொண்டு அடைந்து கொள் என்று சொல்கிறது.

“ஆனால் குறிப்பானது குறிப்பற்றது என்பதை தாண்டி அருவம் உருவம் என்பதெல்லாம் கடந்து, கலிமா வாக்கியத்திலுள்ள இலாஹ் என்று குறிப்பிடும் இருக்கும் பொருள், நமக்குள் இருக்கும் நான் அல்லது நாம் என்பதாக மட்டுமே இருப்பதை கவனியுங்கள்.

*“நட்ட கல்லை தெய்வமென்று*
*நம்பி புஷ்பம் சாற்றியே*
*சுற்றி வந்து முணுமுணுத்து*
*சொல்லும் மந்திரம் ஏதடா*

*நட்டக் கல்லும் பேசுமோ*
*நாதன் உள்ளிருக் கையில்*
*சுட்டசட்டி சட்டுவம்*
*கறிச் சுவை அறியுமோ*

“மன்னவா இது சித்த சிவ வாக்கிய பாடலல்லவா? இதுதானே கலிமா திருமந்திரம். பேதம் எங்கே இருக்கிறது? ஓரிரற கொள்கை ஏகத்துவம் என்பது இஸ்லாமிய மதத்தில் சட்டம், இந்துமதத்தில் தத்துவம் எதற்கு வீண்விவாதம்?

“நாம் அல்லது நான் என்பது நிச்சயமாக நமக்குள் இருக்கிறது. மற்றபடி நமக்கு அன்னியமான பிரபஞ்சத்தின் அனைத்து பொருள்களும் இருப்பது போல் தோன்றுகிறது இது உங்களுக்குப் புரிகிறதா மன்னவா? இந்த நிச்சய வஸ்துவான நாம் அல்லது நான் என்பது தான் ஆன்மா என்பதாகும். இது மதங்களின் சட்டதிட்டங்களுக்கு அப்பாற்பட்டது.

“மதங்களில் சமுதாய சட்டங்கள் உள்ளன. இதை இஸ்லாத்தில் ஷரியத் என்கிறார்கள். இந்து மதத்தில் சரியை என்கிறார்கள். ஒவ்வொரு மதமும் ஒரு சட்டம் வைத்திருக்கிறது. உனது சட்டம் சிறந்தது, எனது சட்டம் உயர்ந்தது இதெல்லாம் முட்டாள்தனமான போராட்டம்.

“ஆன்மாவை அறிந்து கொள். ஆண்டவனை அடைந்து கொள் என்பது தான் மதங்களின் அந்தரங்கமான வலியுறுத்தல். மன்னவா ஆன்மா அழியாதது. மாற்றத்துக்கு உரியது. நம் உடல் அழியும் நாம் அழியமாட்டோம்.

“நாம் நம்மை அறிந்து கொண்டு விட்டால் நம்முடைய மாற்றங்களில் நாம் தெளிவோடு இருப்போம். தன்னை அறியும் இந்த ஞானம் குரு முகமானது.

“நானென்றும் தானென்றும்
நாடினேன் நாடொறும்
நானென்று தானென்று
இரண்டில்லை என்று
நானென்ற ஞான
முதல்வனே நல்கினான்!
நானென்று நானும்
நினைப் பொழிந்தேனே!
உருவன்றியே நின்று

*உருவம் புணர்க்கும்*
*கருவன்றியே நின்று*
*தான் கருவாவதும்*
*மருவன்றியே நின்ற*
*மாயப் பிரானார்க்கு*
*குருவன்றி யாவர்க்கும்*
*கூட ஒன்னாதே!*

"குருவின்றி கண்டறிய ஒன்னாத கருவை கண்டறியத்தான் நான் புறப்பட்டேன்" என்றார்கள் இளவல்.

"மைந்தரே நீர்தான் உமது பாட்டனாரிடமிருந்து குரு உபதேசம் பெற்று அற்புதம் விளையும் தலமாக விளங்குகிறீரே. நீர் ஏன் வீட்டை விட்டு வெளியில் புறப்பட வேண்டும். வேண்டாம் மைந்தரே. நாம் நாளை நாவலூர் புறப்பட்டு செல்லலாம் தங்கள் தாயும் தந்தையும் தங்கள் பிரிவால் வருந்துவார்களல்லவா?"

பாலரின் முகத்தை மன்னர் அமைதியாக பார்த்து கொண்டிருந்தார். அவர் பதிலென்ன என்று அறிய முயன்றார்.

காவிரி ஆறு கரை புரண்டு ஓடி கொண்டிருந்தது. அதன் இருகரைகளிலும் பசுமை கொஞ்சும் தென்னை பலா வாழை மாமரத் தோப்புகள் அமைதி கொண்டிலங்கின. வழி தவறிய புறா ஒன்று தோப்புகளிடையே புகுந்து அங்குமிங்கும் அலைந்தது.

"அற்புதங்கள் நடக்கலாம் மன்னா! அஷ்டமா சித்துக்கள் விளையும் தலமாக நான் விளங்கலாம் மன்னவா! ஆனால் விசுவாசியின் நிம்மதி படைத்த இறைவனின் சந்திப்பில் என்பது நபிமொழி. படைத்த இறைவனை நான் இன்னும் பார்க்கவில்லையே மன்னவா?" பாலகரின் வினோதமான பதில் மன்னரை திகைப்படையச் செய்தது.

- - - - - - -

மறுநாள் அதிகாலை பாலரின் சயன அறைக்குள் நுழைந்த மன்னர் அலமலர்ந்தார். “ஃபக்ருத்தீன் எங்கே?” மன்னர் இட்ட கூச்சல் அரச மாளிகையை அலற அடித்தது. நாகூரில் தாய் தந்தையரையும் தாயதிகளையும் தவிக்க விட்டது போல் தஞ்சை மன்னரையும் தவிக்க விட்டுவிட்டு வெளியேறிவிட்டார்கள் பாலகர் பாபா ஃபக்ருத்தீன்.

“அன்னை பிதாவுமென்னை ஆதரிக்கும் பந்துக்களும் உன்னை நான் காதலிக்க ஒப்பார் மனோண்மணியே!”

என மனமுருகியவராக உறையூரை கடந்து நடைநடந்த பாலகரை திருச்சியில் தமது தர்பாரின் கதவைத்திறந்து கொண்டு ஆன்ம கோலத்தில் வெளிப்பட்டு நின்ற தப்லே ஆலம் பாதுஷா நத்தர் ஒலி “மைந்தரே விரைந்து வாரும்!” என்று அழைத்து கொண்டிருந்தார்கள்.

*ஐயகோ ஏனடி வதைக்கின்றாய்*
*அகத்தீ வளர்க்கும் மலைதேனே*
*கொய்யாப் பழமே குடிபோதை*
*கொடுக்கும் மோன பலாச்சுளையே*
*பொய்யாம் உலகம் உன்னைநான்*
*புரிந்து கொண்டதால் பேரின்பம்*
*மெய்யே உன்னை கைதொழுதேன்*
*மேலாடி வாராய் மனோண்மணியே!*

*மலைத்தேனைப் போலும் கொய்யாப் பழம் போலும் பலாச்சுளைப்போலும் இனிப்பானவளே! இந்த உலகம் பொய் என்னுள் இருக்கும் உன்னை நான் புரிந்து கொண்டதால் அது பேரின்பம். மேலாடி வருவாய் மனோண்மணியே.*

*கைலாசத்தில் பனிலிங்கம்*
*கஅபா காட்சி அற்புதமாம்*
*உல்லாசமாய் உன்னோடு*
*உவந்து கண்டேன் பேரின்பம்*
*ஒயிலாட்டம்தான் இறையின்பம்*
*உலகறியுமோ உன் வண்ணம்*
*மயிலேகுயிலே வனமானே*
*வணங்கினேன் உனை மனோண்மணியே!*

*கைலாசத்தில் காணும் பனி லிங்கமும் காபாவின் காட்சியும் அற்புதமானது என்று சொல்வார்கள். ஆனால் மனோண்மணியாகிய என்னவளே உலகமறியாத உன்னோடு நான் உவந்து காணும் இன்பமே இறையின்பமாகும்.*

## திருச்சி நகரில் தெய்வீக கஅபா

காவிரி நதியின் கரையோரமாகவே நடந்து போய் கொண்டிருந்த பாலகரின் முன் தோன்றிய தப்லே ஆலம் பாதுஷாவின் நேர்முக ஒளிவடிவ காட்சி தெளிவான ஞானத்தை அவர்களுக்கு உணர்த்தியது. கண்ணுக்கு தெரிகின்ற இந்த சடலோகப் பிரபஞ்சத்துக்கு உள்ளீடாக உள்ள சூக்கும ஆத்தும உலகங்களைப் பற்றிய அறிவு கிடைக்காதவனுக்கு உண்மை புலனாகாதவரை மனிதனின் பிரபஞ்ச அறிவு பூர்த்தியாகாது, அவனது நம்பிக்கைகள் முழுமையடையாது.

கோமலச் சூரியன் குடதிசையில் சாயும் நேரம். மரம் செடி கொடிகளெல்லாம் மஞ்சள் குளித்து சீதளத் தென்றலில் சிகை உலர்த்த தொடங்கும் சமயம். அந்த இனிய மாலைப் போதின் பொன்னொளிப் பூச்சிலே பளபளத்து, மென்னிளங் காற்றிலே படபடத்த தென்னை மரத்தோப்புகள் அற்புத காட்சி தந்தன.

பாத்துஷாவின் அடக்கத்தலத்தை பாலகர் ஃபக்ருத்தீன் சென்றடைந்தபோது அருகில் அமைந்திருந்த பள்ளி வாசலிலிருந்து மாலை கருக்கலின் தொழுகைக்கான பாங்கோசை எழுந்தது. விரைந்து உள்நுழைந்து (ஜமாத்) கூட்டதுடன் வழிபாட்டில் கலந்து தொழுதுவிட்டு தர்காவினுள் நுழைந்தார்கள்.

ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் இராசேந்திர சோழ மன்னரால் அடித்தளமிட்டு கட்டப்பட்டு கால ஓட்டத்தில் கோட்டை போல் வியாபித்த அந்த தர்காவினுள் பாலகர் புகுந்த போது கருவறையின் வாசலை அகல் விளக்குகள் அலங்கரித்திருந்தன. சந்தன ஊதுவத்திகளின் வாசம் தர்கா வளாகமெங்கும் பரவியிருந்தது.

கருவறையைச் சுற்றிய தாவாரங்களில் ஆங்காங்கே உடல் உளப் பிணியாளிகள் படுத்தும் அமர்ந்துமிருந்தனர். பட்டு பீதாம்பரத்தால் மூடப்பட்டிருந்த (கபர் ஷரீஃப்) சமாதியை சிறிது நேரம் பார்த்து கொண்டிருந்துவிட்டு கண்களை மூடி அமர்ந்தார்கள் பாலகர். கதவுகள் மூடப்பட்டன. ஓதுவார்கள் சாகிபுமார்கள் வெளியேறினர். நேர்ச்சைக்கு தங்கியிருந்த ஆண்களும் பெண்களும் பாய்விரித்து படுத்து உறங்கினர்.

நள்ளிரவுக்குப்பின் பாலகரின் சூக்கும உடல் சட உடலைவிட்டு வெளியில் வந்தது. தப்லே ஆலம் பாதுஷாவின் கதவை திறந்துகொண்டு உள்ளே நுழைந்தது. அரியாசனத்தில் சூக்கும உடலோடு அமர்ந்திருந்த நத்தர் ஒலியுடைய பாதங்களில் சென்று பணிந்தார்கள் பாலகர்.

பாதம் பணிந்த மைந்தரை எழுப்பி நெற்றியில் முத்தமிட்டு அரவணைத்தபடி தனது சமாதியின் அருகில் சென்று, சுரங்கப் பாதை வழியே போய் கீழிறங்கிப் படிகளில் பாலகரை அழைத்து சென்றார்கள் தப்லேஆலம். கீழிறங்கிய பாலகர் திகைத்தார்கள். இப்போது இருவரும் இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் அரபகத்திலுள்ள மக்கமாநகரில் இறை இல்லமான கஅபத்துல்லாவின் அருகில் நின்றிருந்தார்கள். ஆனால் இது சூக்குமமல்ல நிஜ உலகம் சடஉலகம்.

\- \- \- \- \- \- \-

உயர்ந்த கருப்பு நாற்சதுக்க ஆலயமான புனித இறை இல்லத்தை இடம் சுற்றி பாதுஷாவும் பாபாவும் நடந்து கொண்டிருந்தார்கள். நீண்ட நேர அமைதிக்குப்பின் தப்லே ஆலம் பாத்துஷா பேச ஆரம்பித்தார்கள்,

“மகனே சூக்கும உலகம் என்பது சட உலகத்தின் உட்பக்கம். மனிதனின் ஜட உடலுக்குள் இருக்கும் சூக்கும உடல் தவயோக முயற்சி பயிற்சியாலோ அல்லது மரணகாலத்திலோ உடலை விட்டு வெளிப்படும். மரணத்தில் அது வெளிப்படும் போது ஏற்படும் கைசேதமான நிலையைத்தான் எம்பெருமான் (ஸல்) அவர்கள் “மனிதர்கள் உறங்குகிறார்கள் மரணம் வந்ததும் விழித்து கொள்வார்கள்” என்று கூறியுள்ளார்கள்.

மரணம் வரும்வரை காத்திருந்து சூக்கும உடலை இழந்து கைசேதப்படாமல் (தரீக்கா) ஞான பாட்டையில் நுழைந்து (தரீக்கத்தின்) குருகுல சட்டதிட்டங்களான பயிற்சிகளில் ஈடுபட்டு “மரணிக்கும் முன் மரணித்துவிடுங்கள்.” மூத்த கப்ல அந்த மூத்து அதாவது சூக்கும உடலை கைவசப்படுத்துங்கள் என்று பெருமானார் (ஸல்) உபதேசத்திருக்கிறார்கள்.

ஆனால் மனித குலம் உலக மயக்கமென்னும் உறக்கத்திலேயே ஆழ்ந்து கிடக்கிறது. உலகை விட்டு நீங்கும் போது உலகையும் உலக சுகங்களையும் விட பன்மடங்கு வியாபித்து பேரின்பம் காத்துகிடக்கிறது என்றால் மனிதர்கள் புரிந்து கொள்வதே இல்லை. உலகத்தின் சிற்றின்பம் என்ற வலையில் சிக்கி மறுபிறவி எடுக்கிறார்கள்.

லாயிலாஹ் இல்லல்லாஹ் என்ற வாக்கியத்தில் லா என்பது (இல்முல் யக்கீன்) அறிவார்ந்த நிர்ணயம் ஆகும். இலாஹ் என்பது (ஐனுல்யக்கீன்) கண்பார்த்த நிர்ணயம். இல் என்பது (ஹக்குல் யக்கீன்) என்னும் நிச்சய நிர்ணயம். அல்லாஹ ௴ என்பது (கமாலுல் யக்கீன்) சம்பூர்ண நிர்ணயம் ஆகும்.

(இல்முல் யக்கீன்) அறிவார்ந்த நிர்ணயம் என்பது மக்கமா நகரம் உண்டென்று கல்வி கேள்விகளால் அறிந்து ஒப்பு கொள்வதுபோல் அல்லாஹ் என்கிற ஆண்டவனை கல்வி கேள்வி திருஷ்டாந்தங்களால் அறிதல்.

(ஐனுல் யக்கீன்) என்பது மக்கமா நகரத்தை கண்ணால் கண்டு மகிழ்தல் போல் ஆண்டவனை அகக்கண்ணால் தெரிதலாகும். (ஹக்குல் யக்கீன்) என்பது மக்கமா நகரினுள் சென்று கஅபத்துல்லாவுக்குள் புகுந்து தொழுது வலம் சுற்றி ஆனந்தம் அடைவதுபோல் ஆண்டவனுடைய கருணையங் காட்சியில் திளைத்து இறைநேசத்தில் நிலை பெற்று பேரானந்த சுகவாரியில் மூழ்குவதாகும்.”

தப்லே ஆலம் பாதுஷா அவர்கள் அளித்த பிரபஞ்ச விளக்கம் பாலகர் ஃபக்ருத்தீனின் ஞானத்தை மேலும் ஒளிமயப்படுத்தியது. "இறைவனின் சந்திப்பிலன்றி மனிதனுக்கு நிரந்தர நிம்மதி கிடையாது" என்ற நபி மொழி இப்போது அவர்களுக்கு மேலும் தெளிவாக புரிந்தது.

கஅபத்துல்லாவின் தென்கிழக்கு மூலையில் உள்ள ஹஜ்ருல் அஸ்வத் என்ற கல்லின் அருகில் இருவரும் நின்றிருந்தார்கள், பாதுஷாவை தொடர்ந்து பாலகர் அதை முத்தமிட்டார்கள். பாதுஷாவிடம் பாபா வினா தொடுத்தார்கள். "பாபா அந்த ஆண்டவனை நான் சந்திப்பது என்பது எப்போது?"

பாபா தப்லே ஆலம் சிரித்தார்கள். கஅபாவின் கருப்பு திரைச்சிலையை கைகளால் பற்றிக் கொண்டு, "மகனே இதோ பாரும் எம்பெருமானாகிய முகம்மத் நபி (ஸல்) அவர்கள் தமது அந்திமக் காலத்திலும் இந்த திரைச்சீலையைப் பற்றி பிடித்து கொண்டு, இறைவா! உன்னை அறிய வேண்டிய அளவுக்கு நான் அறியவில்லையே! என்று கண்ணீர் உகுத்திருக்கிறார்கள்.

"ஆண்டவனை அறிந்து அடைவது சந்திப்பது என்பதெல்லாம் ஒவ்வொரு மனிதப் பிறவிக்கும் பிறப்புரிமை அதை தேடுவது அவன்மீது கடமை இல்லல்லாஹ் என்ற கலிமா வாக்கியத்தை கொண்டு சகல காலங்களிலும் மூச்சோட்டப் பயிற்சியில் ஈடுப்பட்டு அமர்ந்தால் தான் இந்த அனுபவம் மெல்ல மெல்ல வெளிப்படும்" என்றார்கள் பாதுஷா.

"மகனே அருகில் வாரும்" என்று பாலகரை அணைத்து அவரது கண்களில் முத்தமிட்டார்கள் பாபா . முத்தமிட மூடிய இமைகளை திறந்தபோது தான், தான் தனிமையில் நின்றிருக்க கண்டார்கள் பாலகர். லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை மூச்சில் முழங்கியவராக பாலகர் அக்கானகத்தில் பல நாட்கள் சுய உணர்வின்றி அலைந்தார்கள்.

தான் புகுந்திருப்பது புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள திருமயம் என்கிற காடு என்பது பல நாட்களுக்கு பிறகுதான் பாலகருக்குப் புரிந்தது.

தாயே என்று அழைத்திடவா
தாரம் என்று நினைத்திடவா
பாய்தான் என்று படுத்திடவா
பக்தை என்று மகிழ்ந்திடவா
மாயா மயக்கம் தந்தென்னை
மடியில் தூங்க வைத்தவளே
தூயவளே எனை பிரிந்தாயோ
தொலைந்தேன் அறிவாய் மனோண்மணியே!

அன்பே மனோண்மணியே உன்னை தாயென்று மதிப்பதா தாரம் என்று மகிழ்வதா அறியமாட்டேன். உலகமயக்கமென்ற மாயையில் என்னை உரங்க வைத்திருக்கிறாய். உன் மடியிலிருந்து என்னை அகற்றுவாயோ நான் தொலைந்து போவேன் அறிந்துக்கொள்வாயே.

*புலி பதுங்கி பாய்ந்ததடி*
*புதுகை காட்டு பள்ளியிலே*
*அலீ பாதுஷா கொலுவேறி*
*ஆடுகிறார் தெய்வ பாட்டையிலே*
*குலவழி தேவநேசமடி*
*கொம்பில் அத்தி பூத்ததடி*
*களவல்ல தீன்தீன் காதலடி*
*கண்ணே கனியே மனோன்மணியே!*

*புதுகோட்டை காட்டு பள்ளியில் அலீ பாதுஷாவான பாபா நாயகம் புலிபோல பதுங்கி கிடந்து இன்று பாய்வதை பாருங்கள். தேவநேசமான காதர் ஒலியின் குலவழியில் அத்திப் பூத்தது போல் அதிசயமாக பூத்து தீனின் மீது காதல் கொண்டு இன்று அகிலமெங்கும் அறியப்படும் இறைநேசமாக சத்தியம் வெளிப்படுவதை கண்டு மகிழ்கிறேன் மனோண்மணியே.*

## கானகத்தில் கன்னி இளமான்

காமமும் தியானமும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள். காமம் என்ற பக்கத்தை மட்டுமே பார்த்து கொண்டிருக்கும் மக்கள் தங்கள் உடலுக்கு துணையாக ஒரு ஆண் ஒரு பெண்ணையும் ஒரு பெண் ஒரு ஆணையும் தேடுகிறார்கள்.

தியானத்தில் தெளிந்த ஞானி ஆணாயிருந்தால் தன் ஆன்மாவை பெண்ணாக அறிகிறான். பெண்ணானால் தன் ஆன்மாவை ஆணாக அறிகிறாள். இது மதம்கடந்த மெய்ஞ்ஞானப் பாதையின் உச்சநிலை.

இது ஒரு யோக யுக்தி இந்த யோக யுக்தியானது இறைவனிடமிருந்து உள்ளொளியாக உணர்த்தப் படவேண்டும். இந்த யுக்தியை அடையும் முன் மனிதன் தன்னிச்சை என்னும் நஃப்சை பரிசுத்தப்படுத்த வேண்டியுள்ளது.

“எவன் தன் இச்சையை நப்ஃசை பரிசுத்தப்படுத்திக் கொண்டானோ அவன் ஜெயமடைந்தவன். எவன் அதை அசிங்கப்படுத்தி மண்ணில் புதைத்து விட்டானோ அவன் தோல்வியடைந்தான்” என்றும் அருள்மறை திருகுர்ஆனில் கூறப்பட்டுள்ளது. பரிசுத்தப்படுத்தபட்ட தன் இதயத்தில் மனிதன் மெய்ப்பொருளை காண்கிறான் இந்த அனுபவமே தெய்வ தரிசனம்.

தெய்வ தரிசனம் பெற தப்லே ஆலம் பாதுஷா அவர்கள் கூறிய மூச்சுப் பயிற்சியை லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மத் ரசூலில்லாஹ் என்ற கலிமாவை ரேசகம் பூரணம் கும்பகம் செய்தவராக பாலகர் பாபா ஃபக்ருத்தீன் கோரை மலை காடுகளில் பல வருட காலம் அலைந்து திரிந்தார்கள்.

கானகங்களில் காய்ந்த காய்கனிகளைப் பறித்து உண்டு ஆங்காங்கே தேங்கி கிடக்கும் சுனை நீரை அருந்துவது அவர்களின் அன்றாட ஜீவனோபாயம் ஆகிவிட்டது. பரிதாபப்பட்டு வழிப்பயணிகள் தரும் உணவையும் அவர்கள் வேறுபாடின்றி வாங்கி போஜித்தார்கள்.

பாட்டனார் காதிர் ஒலியுடன் இருந்த காலத்தில் பாபா கற்று கொண்ட தரிக்கின் சுலூரக்கு முறைகள் இப்போது அவர்களுக்கு கைகொடுத்தன. பாட்டனாரின் மறைவுக்குப் பின்னர் நாகூரில் தங்கியிருந்த மூன்றாண்டுகளிலும், வருடத்தில் மூன்றுமாத காலம்வரை தர்காவில் தங்கியிருக்கும், ஃபக்கீர்மார்களோடு நெருங்கிப் பழகி வந்தார்கள்.

பாட்டனாரின் கலிஃபாக்கள் ஹலரத் சைகு முயினுத்தீன், ஹலரத் ஹசன் ரூமி, ஹலரத் இபுறாகிம் ஜான்பூரி, ஹலரத் செய்யத் முபாரக்கி, ஹலரத் ஷாஹபுல் சத்தாரி, ஹலரத் வஜீஹுத்தீன், ஹலரத் கன்ஜுல் அஸ்கரி ஆகியோரிடமிருந்து யோக சாதனைகளை அறிந்திருந்தார்கள். புனித கலிமா வாக்கியத்தின் சுயார்த்தப் பொருளை சுபுஹானி மஅநமஸானி - நான் பரிசுத்த மானவன் என்னுடைய நிலை மகாவலுப்பமானது என்று மனனிக்கும் அப்பியாசங்கள் அவர்களிடம் ஆன்மீக கலையாக வளர்ந்திருந்தது.

“நான் அரூபமாயிருக்கின்றேன் என்னுடைய செயல்களனைத்தும் இறைவனுடைய செயல்களாகும். என்னிடம் தீமைகள் எதுவுமில்லை. என்னை எந்த தீங்கும் வந்தணுகாது. என் செயல் நன்மையானது. என்னிடம் எல்லா நன்மைகளும் வந்து சேரும்.

“நான் அகண்டமாயிருக்கிறேன். என்னுடைய காரியங்கள் யாவும் இறைவனுடைய காரியங்கள். எனக்கு சங்கடமில்லை பிணியில்லை வறுமையில்லை துக்கமில்லை. எல்லா வளமும் நலமும் சுகமும் சந்தோஷமும் என்னுடையதே.

“என்னில் பரம்பொருள் இருக்கிறது. பரம்பொருளில் நான் இருக்கிறேன். நானே பரம்பொருள் நானே காலம் நானே தூரமும் நேரமும் ஆவேன். சகல ஜீவன்களும் நானே.”

இவ்வாறு சிந்தித்து சிந்தித்து மனவளம் வளர்த்தவர்களாய் தன் உடலையும் உலகத்திலுள்ள அனைத்து பொருள்களையும் அறிவைக் கொண்டு அழித்து ஆகாயமாகிய வெட்டவெளியாய் தன்னை உணர்ந்து, உணவும் நீருமின்றி பல மாதகாலம் ஜீவித்தார்கள்.

தன் மனதில் பொங்கிவரும் எண்ணங்கள் உருவங்கள் அனைத்தையும் நாசம் செய்து, தன் செவிகளில் எழும் பிரணவ தொனியிலும் தன் பார்வையில் பிரகாசிக்கும் ஜீவஜோதியிலும் தன்னை ஆழ்த்தி, அசைவற்ற சடலம் போல் சில மாதகாலம் ஒரு குகையில் சாய்ந்திருந்தார்கள்.

இத்தகைய பயிற்சிகளின் முடிவில் அவர்களுக்கு இருபத்தியொரு வயது நடக்கும் காலகட்டத்தில் ஒரு விடிகாலைபொழுதில் தான் படுத்திருந்த குகையின் அருகில் பெருத்த ஓசை கேட்டு எழுந்தார்கள்.

குகையிலிருந்து இளவல் பாபா ஃபக்ருத்தீன் எட்டிப் பார்த்தபோது ஓர் இளம் பெண் கூச்சலிட்டவண்ணம் ஓடி கொண்டிருந்தாள். அவளைத் தொடர்ந்து ஒரு பயங்கரமான கரடி விரைந்தது. பார்த்துகொண்டிருக்கும்போதே கரடி மேலும் மேலும் அந்த இளம்பெண்ணை நெருங்கி கொண்டிருந்தது.

இளவல் குகையிலிருந்து வேகமாய் வெளியில் வந்தார்கள். குகைக்கருகில் இருந்த முனீஸ்வரார் சிலையின் கையில் இருந்த பட்டாகத்தியைப் பிடுங்கி கொண்டு வேகமாக ஓடி கரடியை பின் தொடர்ந்து சென்று அதன் உடலில் பாய்ச்சினார்கள்.

ஓடியப் பெண்ணை விட்டுவிட்டு கொலை வெறிகொண்ட கரடி இளவலின் மீது பாய்ந்தது. அவருக்கும் கரடிக்கும் நடந்த நீண்டநேர போராட்டத்தின் முடிவில் கரடி செத்து வீழ்ந்தது. அவருடைய தேடிய கண்களில் தூரத்தில் கரடியிடம் தப்பித்து ஓடிய அப்பெண் பார்வையில் மிரட்சியுடன் நின்றிருப்பது தெரிந்தது.

ஒரு மாமரத்தின் அடியில் நின்று கொண்டிருந்த அவள் கண்களில் வியப்பும் முகத்தில் மகிழ்ச்சியும் குடிகொண்டிருந்தன. ஆனால் அவள் காட்டில் வாழும் பெண்ணல்ல. அவள் உடுத்தியிருந்த உயர்ந்த ஆடைகள் அவளை ஓர் இளவரசி போல் சுட்டி காட்டியது.

அருகில் கானகக்குளம்! அது அழகிய காட்சி. இளங்காலை சூரியன் குளத்தின் தெள்ளியநீரை வெள்ளித் திரவமாக மாற்றியிருந்தது. தென்றலென நடந்த காற்றில் அலைந்த சிற்றலைகள் கண்ணாடிகளெனப் பளிச்சிட்டன.

இளவல் அவளை நெருங்கி வந்து பார்த்து விட்டு "நீ யார்?" என்று கேட்கும் போதே. அவள் யாரென்பது அவர்களுக்கு புரிந்துவிட்டது. ஆறு ஆண்டுகளுக்கு முன் தஞ்சையில் அச்சுதப்பநாயக்கரின் அரண்மனையில் பார்த்தப் பெண். மேலும் இவள் பாட்டனார் காதிர் ஒலியின் கைகளில் மழலையாய் தவழ்ந்தவள். அவர்கள் ஆசிபெற்ற அரசிளங்குமரி. அவள் வேறுயாறுமில்லை அச்சுதப்பரின் பதினெட்டு வயது மகள் சந்திரமதி.

இளவல் அலமலர்ந்தார்கள். "இளவரசி சந்திரமதி, அச்சுதப்பரின் மகள் தானே நீ? ஏன் எப்படி இங்கு வந்தாய்?" இளவலின் கேள்விக்கு அவள் புன்னகையால் பதில் தந்தாள். "உங்களை யாரென்றும் எனக்கு புரிகிறது. நீங்கள் நாகூரில் என் தந்தையின் குருநாதருடைய பேரர் தானே? எனக்கு புரிகிறது. உங்களை தேடிக்கொண்டுதான் என் தந்தை இங்கு வந்துள்ளார்."

"என்ன சொல்கிறாய் சந்திரா புரியும்படி சொல்." "தாங்கள் இந்த கானகத்தில் மறைந்து திரிவதாக எமது தந்தை ஒற்றர்கள் மூலம் கேள்விப்பட்டார். உமது தந்தையாருக்கு தகவல் அனுப்பிவிட்டு எனது தந்தையார் திருமயத்தில் பாளையமிறங்கி உள்ளார்.

“கானகத்துக்குள் உங்களை தேடி வீரர்கள் பலதிசைகளிலும் புகுந்துள்ளார்கள். என் பங்குக்கு நானும் உங்களை தேடி காட்டுக்குள் வந்துவிட்டேன். இறைவன் சித்தம் உங்களை கண்டு கொண்டேன். வாருங்கள் என்னோடு. என் தந்தையிடம் போவோம்.”

கிருதாவும் அடர்ந்த தாடியும் கந்தலாடைகளுமாகத் திறிந்த அந்த வாலிபர் பாபா ஃபக்ருத்தீனை சந்திரமதி வற்புறுத்தி அழைத்தாள். இளவல் பாபா மறுக்க முடியாமல் அவளை பின் தொடர்ந்து சில நாழிகை பொழுது கடந்து திருமயம் வந்தடைந்தார்கள்.

பாடியிறங்கியிருந்த வீட்டின் வாசலில் அச்சுதப்பர் இருவரையும் கண்டு பரபரத்தார். இளவலின் தெய்வீக ஒளிவீசும் கண்கள் அவர்கள் யாரென்று காட்டி கொடுக்கவே விரைந்து சென்று அவரின் கைகளைப் பற்றியிழுத்து மவுனமாக பாசறைக்கு கொண்டு வந்தார்.

“மைந்தரே என்ன கோலம் இது? போதும் நீர் செய்த தவம். என் சொல்லை கேளும். இரவும் பகலும் உமது சிந்தனையில் எனது நாட்கள் கழிகின்றன. நீர் நாகூருக்கு கூட செல்ல வேண்டாம். என்னோடு தஞ்சைக்கு வாரும். என் மகளை மணமுடித்து கொண்டு ஆட்சிகட்டிலில் அமரும்.”

இளவல் அரசரை ஆச்சர்யத்தோடு பார்த்து கொண்டு நின்றார்கள். அவருடைய பார்வை இளவரசி சந்திரமதியை நோக்கி திரும்பிய போது அவள் மவுனமே சம்மதமாக தலைகுனிந்து நின்று கொண்டிருந்தாள்.

அவள் ஒரு முறை நிமிர்ந்து பார்த்தாள். அவள் பார்வை வானத்தில் ஓராயிரம் அழைப்புகளாய் நட்சத்திரங்களாய் ஜொலித்தன. தூரத்தே திருமாள் கோவிலிருந்து எழுந்த ஆண்டாளின் பாடல் சந்திர மதியின் உள்ளத்தை வெட்டவெளிச்சமாக்கி கொண்டிருந்தது.

மார்கழி மாதக் குளிரில் புலர்ந்த இளங்காலை சூரிய ஒளியில் நடந்த நிகழ்ச்சிக்கு வானகமும், திருமயத்தின் கானகமும் சாட்சியாயிருந்தன.

*சிற்றஞ் சிறுகாலே வந்துன்னை சேவித்தோம்*
*பொற்றாமரையடி யே போற்றும் பொருள் கேளாய்*
*பெற்றம் மேய்த்துண்ணும் குளத்தில் பிறந்து நீ*
*குற்றம்பல எங்களை கொள்ளாமற் போகாது*
*இற்றைப் பரை கொள்வான் அன்றுகாண் கோவிந்தா*
*எற்றைக்கும் ஏழேழு பிறவிக்கும் உன்தன்னொடு*
*உற்றோமே யாவோம் உமக்கே நாம் ஆட் செய்வோம்*
*மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்*

கொள்ளிடம் ஆற்றில் பொங்கி வந்த வெள்ளத்தை வென்று புயலை அடக்கி படைவரிவாரங்களையும் அழிவிலிருந்து காத்த அந்த நாளில், ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே சந்திரமதி இதய உலகத்தில் தான் அரசனாகிவிட்டதை அறிந்த இளவல் பாபா ஃபக்ருத்தீன் இப்போது என்ன செய்வது அரசு கட்டிலிலிருந்து தப்பியோடினாலும் இவளது காதல் சிறையிலிருந்து எப்படி தப்பிப்பது என்று புரியாமல் திகைத்து நின்றார்கள்.

*புவியில் பலருடன் வாழ்கின்றேன்*
*புதிராய் எனக்குள் இருக்கின்றேன்*
*குவியும் மலர்கள் கூட்டத்தில்*
*குறிப்பாய் உன்னை நினைக்கின்றேன்*
*தெய்வப் பணியில் உழல்கின்றேன்*
*தென்றல் காற்றாய் வந்தவளே*
*உய்வாய் என்று ஒருவார்த்தை*
*உதிர்ப்பாய் தாயே மனோண்மணியே!*

*தெய்வப்பணி என்ற கூரிய கத்திமேல் நடப்பது போன்ற பாதையில் வாழும் எனக்கு, நீதான் தென்றல் காற்றாக இருக்கின்றாய். பலமனிதர்களுக்கிடையில் நான் வாழ்ந்தாலும், என் மனதில் குறிப்பாக உன்னையே நான் நினைத்திருக்கின்றேன். நீ உய்வடைவாய் உன்னை விட்டு நான் பிரிய மாட்டேன் என்று ஒரு வார்த்தை கூறுவாய் மனோண்மணியே.*

*உன்னை தானே வணங்குகிறேன்*
*உன்னிடம் உதவி தேடுகிறேன்*
*என்னில் நீயே இருக்கின்றாய்*
*என்முன் தோன்றி மறைகின்றாய்*
*அந்நியம் ஏதும் நானறியேன்*
*அறிந்து கொள்வாய் மாதவியே*
*முன்னும் பின்னும் நிற்பவளே*
*முடிவே முதலே மனோண்மணியே!*

*என்னுள் இருக்கின்ற ஆன்மாவாகிய மனோண்மணியே உன்னையே நான் வணங்கி உன்னிடத்தில் தான் உதவி தேடுகின்றேன். எனக்கு முன்னும் பின்னும் முடிவும் முதலும் நீதான்.*

## ஊர் அறியுமோ உத்தமி மகளை

"ஹுப்பிய அலைய மினத்துன்யாக்கும் தலர்தத்துன் அன்னியாவு லத்தீபு வகுர்ரத்து ஐனி பிஸ்லாத்து உங்கள் உலகிலிருந்து பெண்களையும் நறுமணத்தையும் தொழுகையில் என் கண்கள் குளிர்வதையும் நான் விரும்புகிறேன்" என்றனர், எம்பிரானாகிய முகம்மது நபி (ஸல்) அவர்கள். தொழுகைக்கும் நறுமணத்துக்கும் மேலாக பெண்களைப் பற்றி பெருமானார் உயர்வாகப் பேசியதன் பொருள் தானென்ன?

பெண்களில் குடிகொண்டிருக்கும் தெய்வீக குணங்களை அவதானித்துப் பாருங்கள். ஆணின் மிருக இச்சை தணிவதற்கு அவள் ஒத்துப் போகும் தூய்மையைப் பாருங்கள். தனக்குள் உருவாகும் உலகமாகிய மனிதக் கருவை அவள் பத்துமாதம் சுமந்து நிற்கும் தாய்மையை கவனித்து உணருங்கள்.

ஏக தத்துவமாகிய வஹ்தத்துல் உஜுத் கொள்கையின் முன்னவர் சையிதினா முகிய்யித்தீன் இபுனு அரபி அவர்கள் "பெண் ஆணின் பங்காக இருக்கிறாள், ஆதமிலிருந்து அன்னை ஹவ்வா பிரிந்து வெளிப்பட்டார்கள் என்பதால் ஆணும் பெண்ணும் மூலத்தில் ஒன்றாயிருக்கும்" என்றார்கள்.

மேலும் வெளிப்படையான (ளாஹிர்) நிலையில் பிரிவாகத் தோன்றினாலும் பிரிந்தப் பங்காகிய பெண்மை தனது மூலமாகிய ஆணை தேடுவதும் முழுமையாகிய ஆண்மை தன்னில் பிரிவாகிய பெண்ணை தேடுவதுமாகிய இந்த தேட்டம் தான் (நஃப்ஸ் ஆகிய) இச்சையில் காமமாகவும் (ரூஹ் ஆகிய) ஆன்மாவில் காதலாகவும் பரிணமிக்கிறது.

ஆணிலும் பெண்ணிலும் பரம்பொருளாகிய இறைவனின் பண்பு அஸ்மா என்னும் பெயர்களாகவும் சிபத்துகள் என்னும் குணங்களாகவும் பிரிந்து கிடக்கிறது. மன் அரப நப்ஸஹூ ஃபகத் அரபரப்பஹூ - தன்னை அறிந்தவன் தன் இறைவனை அறிந்தான் என்ற தெளிவை அறிய நாடும் ஞானாந்தி தன்னில் பெண்ணை முதலில் ஒன்றுபடுத்த வேண்டும்.

மனிதனாகிய அவன் கடவுளுக்காக மனுஷியாகிய அவளோ அவனிலுள்ள கடவுளுக்காக என்றார்கள் ஏசுபிரானாகிய ஈசா (அலை). சையிதினா முகியித்தீன் இபுனு அரபி அவர்கள் கடவுள் கடவுளிலிருந்து வெளியபோந்த ஆடவனாகிய ஆதம் ஆடவனிலிருந்து வெளிவந்த பெண்டு ஆகிய ஹவ்வா மூன்றையும் உணர்ந்து ஒன்றுபடுத்துவது ஞானத்தில் முதல்படி என்றார்கள்.

முகியித்தீன் இபுனு அரபி அவர்களின் இந்த ஒப்பற்ற சித்தாந்தத்தை ஸூஃபித்துவம் அக்மலுல் சுஹூத் ஒருமித்து உய்த்துணர்தல் என்று அழைக்கிறது. இந்த நிலையில் ஆண்பெண் புணர்தல் என்பது சம்பூர்ணமாகி மோகமும் அன்பும் காமமும் காதலும் ஒன்றுபட்டு தெய்வீகமடைகிறது.

ஆணும் பெண்ணும் கலவியில் ஈடுபடுவதில் ஓர் ஆழ்ந்த உண்மை உள்ளது. இரண்டு உயிர்கள் உடல்மனம் ஒன்றித்து இணையும் போது இரு ஆன்மாவிலிருந்தும் ஆணவம் ஆவியாகிவிடுகிறது. அன்புக்கும் ஒன்றாதலுக்கும் மனதில் ஏற்படும் ஏக்கத்தை எவன் புரிந்துகொள்கின்றானோ அவன் வேறொரு ஒருங்கிணைதலை புரிந்து கொள்ளமுடியும்.

ஒரு யோகி, ஞானி, ஸூஃபி, தியானம் செய்யும் போது தெய்வத்தோடு சங்கமம் சமாதிநிலை அனுபவத்தில் இந்த முழுமையான பிரபஞ்சத்தோடு இணைந்து அத்துடன் ஒன்றாகிவிடுகிறான். ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான கலப்பு என்பது தற்காலிகமானது. ஆனால் முழு பிரபஞ்சத்தின் தெய்வ உயிரோடு ஒரு ஆன்மா இணைவதென்பது என்றென்றும் நிலைத்துவிடுவதாகும்.

இந்த உன்னத நிலையை எம்பெருமான் (ஸல்) அவர்கள் "இறைவனில் (ஷஹீத்) வெட்டுண்டவர்கள் மரணிப்பதில்லை" என்று மிகத் தெளிவாக வளியுறுத்தி இருக்கிறார்கள். "அமலுன்பின் நிய்யாத் - செயலின் விளைவு சிந்தனை நோக்கமானது" என்றனர் நபிகளார்.

வீரமும் காதலும் ஞானமும் மனித வாழ்க்கையின் பண்புகள். எந்த நிலையிலும் இறைவனுக்காக செயல்படுவது ஷஹீத் ஆகிய இறை தியாகத்தின் பிரதிபலிப்பாகும். இந்த தெய்வீக செயலுக்கான விளைவு நிலையான சொர்க்கமாகும்.

கோரை மலை பாறையின் அருகில் குளிர்ந்த தீர்த்தத் துறையில் பாபா ஃபக்ருத்தீனும் சந்திரமதியும் இரு குதிரைகளின் மீது அமைதியாக அமர்ந்திருந்தார்கள். அலை எழாத அல்லிக்குளம்அது. தடாகத்தைப் பார்க்கும் போதே ரம்மியம் இதயத்தை தொடுகிறது.

நீண்ட நேர அமைதிக்கு பிறகு பாலஞானி பாபா சந்திரமதியின் முகத்தை பார்த்து வினவினார்கள், "சந்திரா! உன்னுடைய முடிவு முடிவான முடிவா? நான் இல்லையென்றால் நீ சந்நியாசம் மேற்கொள்ளப் போகிறேன் என்று சொல்கிறாயே. அது உன் குடும்பத்தில் உனக்கு சாத்தியமாகுமா?"

சந்திரமதியின் முகம் தாமரை மலர் போல் மலர்ந்து பிரகாசித்தது. "என்னுடைய குடும்ப சூழ்நிலையைப் பற்றி உங்களுக்கு தெரியாது. எனது தந்தையராகிய அரசர் அச்சுதப்ப நாயகருக்கு பல மனைவியருண்டு. அவர்களில் எனது தாயார் சைவ வேளாளர் குளத்து பெண்ணாவார். தஞ்சைதான் எங்கள் தாயகம்.

"மெய்ஞ்ஞானத்தை தேடுவது இறைவனை அடைவது என்பதெல்லாம் எங்கள் குலத்தின் இயல்பான பண்பாகும். நாயன் மார்களில் பலர் எங்கள் குலத்தில் தோன்றியவர்கள் ஆவார்கள். முக்கியமாக திருஞான சம்பந்த சுவாமிகள். அவர் பாடிய கோளறுபதிகம் தாங்கள் அறிந்தது தானே?" மௌனம் காத்தார்கள் பால ஞானி. சந்திரமதி குயில் வெட்கும் இன்குரலில் பாடத் தொடங்கினாள்.

"மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்து மறையோது மெங்கள் பரமன் நதியொடு கொன்றைமாலை முடிமேல ணிந்தென் உளமே புகுந்த அதனால் கொதியுறு காலனங்கி எமனொடு தூதர் கொடுநோய்களான பலவும் மதிகுண நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே!

“உருவளர் பவளமேனி யொளி நீரணிந்து உமையோடும் வெள்ளை விடைமேல் முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந் தென் உளமே புகுந்த அதனால் திருமகள் அனைய தூர்த்தி செயமாது பூடுதிசை தெய்வமான பலவும் அருள்நிதி நல்லநல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே!”

இயற்கை அன்னையின் இனிய நாட்டியம் சந்திரமதியின் இசைக்கேற்ப அமைந்திருந்தது. பச்சென்று வானோங்கிய விருட்சங்களில் பட்சி ஜாலங்கள் சோடிகளுக்கு அழைப்பு விடுத்து கொண்டிருந்தன. பசுமையின் எழிலை பாடி பரப்பும் புள்ளினங்கள் ஸ்ருதிக் கேட்டு விலங்குகள் ஆனந்தலாகிரியில் திரிந்தன.

சந்திரமதியின் இனிய பாடலில் தன்னை இழந்த பாலஞானி நெடுநேரம் கண்ணை முடியவண்ணம் குதிரையின் மீதே அமர்ந்திருந்தார்கள். பிறகு மௌனமாக கீழிறங்கி இளவலை தொடர்ந்து அம்மங்கையும் தரையில் இறங்கினாள்.

இருவருமாக நடந்து சென்று கானகத்தின் நடுவில் குகைபோல் பசுமரங்கள் அமைத்திருந்த கூடாரத்துக்குள் புகுந்து ஒரு பாறையின் மீது அமர்ந்தார்கள். பால ஞானியை பிரிவது தன்னால் இயலாது என்ற தாப உணர்வுகளுடன் மங்கையர் அமர்ந்திருந்தார். மங்கையரின் பால் ஏற்பட்ட இரக்கம் நெஞ்சில் ஊடுருவ இளவல் மௌனித்தார்கள்.

ஆன்மிக அளவில் இணைகின்ற ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒரே முறை அவர்களின் ஆன்மாவால் இணைந்தால் போதும் அவர்கள் இனிவரும் பிறவிகளிலும் முடிவில்லாமல் இணைந்துவிட்டதைப் போல் உணர்வார்கள். இது ஆன்மீக பாலுணர்வு.

பெருமானார் (ஸல்) அவர்கள் உடல் சுகத்தைப் போன்று சொர்க்கத்தின் ஆனந்தம் நூறு மடங்கானது என்று சொன்னதை உலகம் ஆராய்ந்தறிய முடிவதில்லை.

ஆனால் சாதாரன மனிதன் மனம் இல்லா சமாதி நியையான அதி உணர்வு மெய்யுணர்வு நிலையை ஆண்பெண் உடல் உறவின் போது மட்டுமே அடையமுடிகிறது. ஆம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான காமம் விலையுயர்ந்தது. ஆனால் அந்த இன்பம் நிலைப்பது சில நொடிகள் மட்டுமே. கொஞ்ச நேர உச்ச பரவச நிலைக்கு பின் நாம் நமது பழைய நிலைக்கு மீண்டுவந்து வடுகிறோம். இது பேரின்பவாசலின் முதற்படி மட்டுமே.

இளவல் கண்திறந்து தன் எதிரில் அமர்ந்திருந்த காதலியின் முகத்தை நிமிர்ந்து பார்த்தார்கள். "சந்திரா உனக்கு நான் வேண்டும் என்கிறாய்? அவ்வளவுதானே?" என்றார்கள். "ஆம் நீங்கள் வேண்டும் உங்கள் சந்ததி என்னிலிருந்து உலகுக்கு வரவேண்டும்" மங்கையின் பதில் கேட்டு மீண்டும் மௌனித்தார்கள் இளவல்.

இளவலின் எழில் நிறைந்த கோலம் மங்கையின் மனத்தில் கடலலைகளாக காதல் பிரவாகத்தை ஏற்படுத்தியது. தேக்கு மரம் போன்ற தேகம். கார்மேகம் போன்ற படர்ந்த அடர்ந்த தலைமுடி அளவாக சிரைத்து நறுக்கப்பட்ட தாடிமீசை தாமரைபோன்ற முகம் அருவியென அருளொழுகும் விழிகள்.

ஒருவார காலத்துக்குமுன் இதே பாறையின் அருகில் காட்டு மனிதனை போல திரிந்த பாலகரை எழில் சிந்தும் இளவரசன் போல் மாற்றி உலகின் கவன வட்டத்துக்குள் அழைத்து வந்துவிட்ட தன்னை நேசிக்கும் அந்த பெண்ணின் அழகிய கோலத்தை முதன்முதலாக நிமிர்ந்துப் பார்த்தார்கள் இளவல்.

"சந்திரா என் பாட்டனாராகிய காதிர் ஒலி ஆண்டவர் என் தந்தையாகிய யூசுபு நாயகரை தன் கற்புநிலை மாறாமல் எப்படி உண்டாக்கினார்கள் தெரியுமா? எமது பாட்டியாரான் லாகூர் காஜி நூருத்தீன் அவர்களின் மனைவி பீபி ஜுஹரா அவர்களிடமிருந்து எங்கள் குலம் அவதரித்த விந்தையை நீர் அறிந்துகொள்ளும்."

தன் இதயத்தில் கைவைத்து அதனை சைகையாக அசைத்து உன் இதயத்துக்குள் என்று உணர்த்தினார்கள். சந்திரமதி அந்த சைகையால் மனம் குளிர்ந்து கண்மூடினாள். இளவலும் தன் கண்களை மூடிக் கொண்டார்கள்.

இளவலின் ஆன்ம ருபம் எதிர் அமர்ந்த மங்கையின் உள்ளும், மங்கையின் ஆன்மரூபம் இளவல் உடலுக்குள்ளுமாக ஒருசாம நேரம் நிலைகொண்டிருந்தது. அக்மலுல் சுஹூத் என்ற ஒருமித்து உய்த்துணர்ந்த பேரின்ப நிலையை இருவரும் உன்மத்தமாய் அனுபவித்து அமர்ந்திருந்தார்கள்.

- - - - - -

பரியின் மீதேறி இருவரும் திருமயம் பாளையப்பட்டை நோக்கி பயணித்த போது பாபா கூறினார்கள், "சந்திரா இனி நான் இங்கு தங்கியிருக்க முடியாது. மிஃராஜ் என்ற இறைவனின் சந்திப்பு எனக்கு இன்னும் சித்திக்கவில்லை. வடக்கில் கோவளம் என்னும் ஊருக்கு வருமாறும் நபிதோழர் தமீமுல் அன்சாரி என்பவரின் அடக்கத்தலத்தை அமைக்குமாறும் நான் அழைக்கப்படுகிறேன்."

சிறிது நேரம் மௌனித்த சந்திரமதியின் குரல் உறுதியாக ஒலித்தது, "உங்கள் பாட்டனார் விளைவித்த அற்புதம் போல் எனக்குள் உங்கள் சந்ததி உண்டாகியிருப்பதை இப்போதே நான் உணர்கிறேன். நீங்கள் எத்தனை காலம் கடந்து வந்தாலும் உங்களுக்காக நான் காத்திருப்பேன்."

- - - - - -

தஞ்சை பதியில் பத்துமாதம் கடந்து இளவரசி பெற்ற மழலையை அந்த நகரம் இழிவோடு பார்த்து கொண்டிருந்த நேரத்தில் அரசர் அச்சுதப்பரின் நிலை விநோதமாக இருந்தது.

"என் மகள் சகுந்தலை, என் மகள் ஈன்ற மகள் வழி சந்ததிகள் நாகூர் ஆண்டவரின் தொண்டர்களாவார்கள். ஆண்டவர்கள் சமாதி உள்ள காலம் வரை என்னுடைய சந்ததி தழைத்து வாழும். சமாதி மீது ஆண்டுதோறும் சந்தன போர்வை போர்த்தும் உரிமை அவர்களுக்கே உண்டு" என்று சிந்தித்து ஆனந்த கண்ணீர் உகுத்தபடி அரண்மனையில் உலவி கொண்டிருந்தார் அரசர்.

மணங்கமழ் குறைஷிகுல மலர் ஒன்றை ஈன்ற மாதரசி சந்திரமதி சில மாதங்களில் உயிர்நீத்து சூக்கும உலகில் புகுந்து பால ஞானி பாபா ஃபக்ருத்தீன் தம் தவவேள்வியை முடித்து கோரைமலை காடுகளுக்கு மீண்டும் திரும்பி வருவதை எதிர்பார்த்து காத்திருந்தார்.

*தோன்றும் ரோஜா தோட்டத்தில்*
*தூதரின் பாதப் பதாகைநான்*
*மூன்று பிறைகள் என் வாழ்க்கை*
*முப்பது பொழுது வேடிக்கை*
*ஈன்ற மகள்தாய் காதலியே*
*என்நிலை நீயே தானறிவாய்*
*ஆன்றடங்கும் அடியவருள்*
*அடியேன் புக அருள் மனோண்மணியே!*

*தெய்வீக தோட்டமென்னும் மஹரிபாவின் பாதையில் இறைத்தூதரின் காலடிப் பாதரட்சையாக நான் இருக்கின்றேன். மூன்று மௌலீது மாதங்களிலும் நான் மகிழ்ந்து வாழ்பவனாகவும் வருடத்தின் இதர நாட்களில் கம்பங் கூத்தாடிப் போலும் காட்சி அளிக்கிறேன். என்னுள் இருக்கும் ஆன்மாவாகிய காதலியே என்னிலை உனக்கே தெரியும். ஆன்றடங்கும் அடியார்கள் கூட்டத்தில் நான் சென்றடைய அருள் புரி மனோண்மணியே.*

*முஅத்தீன் முழக்கம் நான்கேட்டேன்*
*முகம்மதின் ஜோதி தனைகண்டேன்*
*தவத்தின் முடிவு நாகூரில்*
*தாதா வாசல் ஒளிகண்டேன்*
*சிவத்தின் ஜோதி ஃபக்ருத்தீன்*
*சிந்தை தெளிந்தால் தாஜுத்தீன்*
*அவத்தை நீக்கி அருள்புரிவாய்*
*ஆருயிரே என் மனோண்மணியே!*

*பள்ளிவாசலிலிருந்து பாங்கு மேடையில் ஒலித்த முஅத்தீனின் முழக்கம் கேட்டு முகம்மத் எம்கோமானின் ஜோதியை கண்ணில் பார்த்தேன். நாகூர் ஷாஹே தாதாவின் வாசலில் சர்தார் நபியின் ஒளியைக் கண்டேன். தாதாவின் ஒளியாக ஃபக்ருத்தீனாக இருப்பதையும் சிந்தை தெளியும்போது தாஜுத்தீன் ஆகிய கிரீடம் என் சிரசின் மீது அமரவும் கண்டேன். என் அவஸ்தைகளை நீக்கி அருள் புரிவாய் மனோண்மணியே.*

## கோவளத்தில் குடியேறிய சஹாபி

கோவளத்தின் கடற்கரையில் பாபா நின்றிருந்தார்கள். ஆர்ப்பரித்த கடலை அவர் பார்த்து கொண்டிருந்தபோது கொஞ்ச தூரத்தில் கரையேறி வந்த இரு கட்டுமரங்களில் பயணித்து வந்தவர்கள் கட்டுமரத்திலிருந்து ஒரு மனிதரின் இறந்த சடலத்தை கீழிறக்கி கிடத்தினார்கள்.

ஏதோ விபரீதம் நடந்திருப்பதை உணர்ந்து பாபா அந்த படகை சூழ்ந்திருந்த கூட்டத்தை நெருங்கியபோது கடற்கரை மணலில் கிடத்தப்பட்டிருந்த சடலம் உயிரோடிருப்பது போல அவர்களுக்கு தோன்றியது.

கடலானது பொங்கி மேலுயர்ந்து வானத்தின் மேலே வந்து கொண்டிருந்த மேககொண்டல்களை தொடுவது போல் தோன்றியது. கடலில் இருந்த படகுகள் எங்கேயோ ஆகாசத்தில் அந்தரத்தில் தொங்குவதுபோல் தண்ணீர் உச்சியில் காட்சிதந்தன. படகுகளின் பாய்மரங்கள் பேயாட்டம் ஆடி சுக்கு நூறாக கிழிந்தன.

எனினும் அங்கு கூடியிருந்த பரதவர்கள் கடலில் மிதந்துவந்த சவத்தை விட்டுவிட்டு ஓடுவதாக இல்லை. வெள்ளை துணியில் மூடப்பட்டு இஸ்லாமிய முறைப்படி கபனிடப்பட்ட மையித்தின் அருகில் குனிந்து பார்த்தார்கள் பாபா. ஒரு நொடி நேரம் அந்த மையித்தின் முகத்தில் இருகண்களும் இமைதிறந்து மூடியது.

அந்நேரம் கூடியிருந்த பரதவர்களில் ஒருவன் சவத்தை ஏந்திவந்த கட்டுமரத்தில் புதைந்திருந்த எலும்புத்துண்டை எடுத்து திருப்பி திருப்பி பார்த்துக்கொண்டிருந்தான். எலும்புத் துண்டின் மீது ஏதோ எழுதியிருந்தது. அதனை புரிந்து கொள்ள முடியாத அந்த மனிதன் அதனை பாபாவிடம் தந்தான்.

பாபா அதன்மீதிருந்த அரபுச்சொற்களைப் படித்தபோது வியப்புற்றார்கள். தமீமுல் அன்சாரி அஸ்ஹாபே ரசூலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் என்று எழுதப்பட்டிருந்தது. தஞ்சை திருமயத்தில் இருந்தபோதே இந்த விஷயம் அவர்களுக்கு உதிப்பாகி இருந்தது. சிறிது நேரம் அவர்கள் அங்கேயே நின்று நிதானித்தார்கள்.

அவர்களின் கஷ்ஃபு ஆகிய உள்ளொளியில் தெளிவு ஏற்பட்டது. தமீமுல் அன்சாரி என்ற நபித்தோழர் தான் மரணித்ததும் தன்னை கபனிட்டு ஒரு கட்டுமரத்தில் பிணைத்து தன் உடலை கடலில் மிதக்க விடுமாறு பணித்தார்கள். அவரது அச்செயலுக்கான அந்த நோக்கம் நபிகளாரின் ஹதீஸ் மொழியான "ஹிந்திலிருந்து தௌஹீதின் தென்றல் வீசுவதை காண்கிறேன்" என்பதின் பொருளை அறிய வேண்டுமென்னும் வேட்கைதான்.

ஹிந்திலிருந்து வீசிய தௌஹீதின் தென்றல்தான் நாகூரில் அடங்கியிலங்கும் ஷாகுல் ஹமீது பாதுஷா நாயத்தின் அவதார பிரவேசமாகும். பெருமானார் (ஸல்) அவர்களின் ஆன்மா மிஃஃராஜ் எனும் விண்ணேற்றம் புகுந்து வெளி வந்தபோது அது ஜமாலியத் என்னும் குளிர்ந்த நிலையில் அப்துல் காதிர் ஷாகுல் ஹமீது நாயகத்தின் ஆன்ம கோலத்தில் பரிணாம வெளிப்பாடு கொண்டது.

அந்த நிலையை நேரில் காண ஹலரத் தமீமுல் அன்சாரி நாயகம் யாசித்தார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவின் சோழ மண்டல கரையை அண்மித்த நபித்தோழரின் புனித உடலை ஜமாலியத்தான ஆன்மாவுக்குரிய ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகத்தின் பேரர் தம் கரங்களால் எடுத்து மண்ணறயிலிட்டார்கள்.

குகைவாசிகள் என்போர் உறக்கத்தில் முன்னூறு ஆண்டுகளை கழித்ததாக திருக்குர்ஆன் கூறுகிறது. மீனின் வயிற்றில் நபி யூசுபு (அலை) ஜீவித்திருந்ததையும் அருள்மறை விளக்குகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் கரை சேர்ந்த நபி தோழரின் சடலத்தை கடல் தன் அலைகரங்களால் கரை சேர்த்தது தெய்வீகமானது.

கஷ்ஃபு என்பது திரை அகலுதல் என்று பொருள்படும். மறைவாயுள்ள சூக்கும ஆத்தும காரணை மகாகாரண லோகங்களின் அந்தரங்கம் வெளிப்படுவதுதான் கஷ்ஃபு என்னும் ஞானதிருஷ்டி என்றும் கூறப்படுகிறது. ஞானதிருஷ்டி பலவகைப்படும்.

ஐம்புலன்களைக் கொண்டு சூக்கும உலக காட்சிகளைக் காண்பது ரூபதரிசனம் என்று கூறப்படும். காதால் கேட்பது இல்ஹாம் உள்ளொலி என்று அறியப்படும். வஹி என்னும் வேதவெளிப்பாடு இந்த வகையானது என்றாலும் இது நபி பெருமான் (ஸல்) அவர்களுடன் முடிவுற்றுவிட்டது.

சட உலகுக்கு அப்பாலிருந்து நாவை கொண்டு சுவைப்பது, நாசியைக் கொண்டு நுகர்வது, ஸ்பரிசம் கொண்டு உணர்வு கொள்வது ஆகிய சூக்கும நிகழ்வுகளை கால தூர பரிணாமங்களைக் கடந்து உணர்வதும் கஷ்ஃபு என்னும் ஞானதிருஷ்டியில் உண்டு.

இந்த கஷ்ஃபு கொண்டு உணர்ந்த நிலையில் தான் பரங்கிப்பேட்டையில் உக்காஷா என்ற நபித் தோழரின் யதார்தத்தையும் கோவளத்தில் தமீமுல் அன்சாரி நபித்தோழரின் யதார்த்தத்தையும் அறிந்து உலகுக்கு வெளிப்படுத்தினார்கள் பாபா ஃபக்ருத்தீன்.

பாபாவைப் போன்ற ஸூஃபிகளாகிய ஞானிகளின் செய்திகளை ஏன் மக்களில் பலர் உணரமுடிவதில்லை? ஏனென்றால் ஸூஃபிகளும் பகுத்தறிவாளர்களும் பேசுவது ஒரே மொழியென்றாலும் அவர்களிடையே பேசும் நோக்கத்திலும் உலகில் அவர்களின் தேட்டத்திலும் வேறுபாடு இருக்கிறது.

வியாபாரியின் மொழி விவசாயிகளுக்கும், விவசாயிகளின் மொழி வியாபாரிக்கும் விளக்கமாகப் புரிவதில்லை. நெசவாளிக்கும் புரியாது. தன்னை மறக்க விரும்பும் மனிதன் போதையான மதுவிலும் மருந்திலும் தன்னை ஆழ்த்திக் கொள்ள விரும்புகிறான் அவன் மயக்கத்தை பற்றி பேசுகிறான். தன்னை அறிந்துகொள்ளும் தேட்டத்திலுள்ள மனிதன் தன்னை மயக்கத்தில் வீழ்த்த விரும்பமாட்டான். அவன் தெளிவை பேசுவான்.

பொருள்தேடும் மனிதன் பொருள் சம்பந்தமான வார்த்தைகளை தேடுகிறான். அருள் தேடுபவனோ அதுசம்பந்தமான சொற்களை நாடுகிறான். மனிதனின் மொழி அவனது தேவையிலிருந்து ஆரம்பம்.

விஞ்ஞானியின் மொழி மெய்ஞானிகளுக்கும், மெய்ஞ்ஞானிகளின் மொழி விஞ்ஞானிக்கும் புரிவதில்லை. எனவேதான் லோகாயத தேட்டமுடைய மனிதர்கள் கடவுளைத் தேடுபவனையும் சத்தியத்தை தேடுபவனையும் பைத்தியகாரனாக நினைக்கிறார்கள். ஞானியாகிய ஸூஃபிகள் பகுத்தறிவாளனான உலக அறிஞனுக்கு முட்டாளாக காணப்படுகிறார்கள்.

ஸூஃபிகளின் விஷயங்களை லோகாதயக்காரர்களால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடிவதில்லை. அவர்கள் இயற்றும் அற்புதங்களையும் புரிந்துக்கொள்வதில்லை. ஆண்டவனைப் பற்றியும் மறுமையைப் பற்றியும் வெளிப்படையாகப் பேசி மதவாத சர்ச்சைபுரியும் மனிதர்களிடம் நிச்சயமாக யதார்த்தம் இல்லை. அவர்களும் மதத்தை வியாபாரமாக்கி கொண்டிருக்கிறார்கள்.

உனக்குள் ஆண்டவனைப் பற்றிய தாகம் ஏற்படுவதென்பது மகத்தான விஷயம். ஆனால் ஆண்டவனே உன்னை அவனை நோக்கி இழுக்காவிட்டால் உன்னால் அவனை நோக்கி பயணிக்க முடியாது. பாபா ஃபக்ருத்தீன் ஆண்டவனை நோக்கிப் பயணித்து கொண்டிருந்தார்கள். தன் பயணப்பாதையில் தன்னுள் இருக்கும் அற்புதங்களை ஆற்றும் இயல்பைக் கொண்டு பலருக்கு உதவினார்கள்.

அவர்களிலிருந்து பல்வேறு அற்புதங்கள் வெளிப்பட்டபோதும் பாபாவின் மெய்தேடும் வேட்கை தணியவில்லை. ஏனெனில் அற்புதங்களை கண்டு ஸூஃபிகள் மகிழ்ச்சியடைவதில்லை. மயங்குவதில்லை. கோவலத்தில் தமீமுல் அன்சாரி என்கின்ற நபித்தோழரின் யதார்த்தத்தை வெளிப்படுத்தி விட்ட பாபா அங்கு சிலகாலம் தங்கியிருந்தார்கள்.

அவர்களின் பாதையில் ஒரு தடைவந்தது. நாகூரில் தந்தையார் யூசுபு நாயகத்திடமிருந்து நான்கு தர்வேஷ்கள் கோவலத்துக்கு வந்தார்கள். மைந்தர் நாகூருக்கு திரும்பி வர வேண்டுமென்று தந்தை விரும்புவதாக அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

தயங்கிய பாபாவை அன்று நள்ளிரவில் தர்வேஷ்கள் கோலத்தில் வந்த ஜின்கள் கடத்திச் சென்றார்கள். கடத்திக் கொண்டு வந்த பல்லக்கில் நடுவழியில் விழித்துகொண்ட பாபாவுடன் மாயவரத்துக்கு அருகிலுள்ள விழுந்த மாவடியில் தரையிறங்கினார்கள்.

"உறங்கும் போது ஏன் என்னை கடத்தினீரகள்?" என்று பாபா வினவியபோது திகைத்த ஜின்களில் ஒருவரை பாபா அவர்கள் நின்றிருந்த மாந்தோப்பில் மாமரமாக மாற்றினார்கள். அந்த மாமரத்தில் ஒரு மாவடுவை உண்டாக்கி அதை தரையில் விழச்செய்து அதிலிருந்து அந்த ஜின்னை மீண்டும் உண்டாக செய்தார்கள். அந்த சம்பவம் நடந்த இடம் "விழுந்த மா வடு" பின்னர் விழுந்தமாவடியாகி இன்றும் உள்ளது.

இது என்ன சித்துவிளையாட்டு அல்லது சிறுபிள்ளை தனமான கற்பனை என்று பகுத்தறிவாளிகள் பேசலாம். ஆனால் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் புதுஹுல் கைப் பிரசங்கத்தில் இதன் யதார்த்தத்தை பின் வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்கள்.

"இறைவன் தனது முற்கால வேதத்தில் கூறியுள்ளான். மானுடா நீ என்னை ஒன்றுபடுத்தி வணங்கு. நீ என்னை மட்டுமே வணங்கும் போது "ஆகு" என்றதும் எதையும் உண்டாகச் செய்யும் என்னுடைய ஆற்றலைப் போன்று நீயும் ஆற்றல் பெற்றவனாக ஆகச்செய்வேன்."

இந்த நிலையை அடைவது பிரபஞ்சத்தில் உயிர்ப்புறும் எந்த ஆன்மாவுக்கும் சாத்தியமானது தான். முதலில் இதனை மனிதன் நகைக்காமல் நம்பவேண்டும். பிறகு அதை புரிந்து கொள்ளவேண்டும். புரிந்து கொண்டு ஞானவழியில் அடைந்தால் ஆகுக என்றதும் எதையும் உண்டாகச் செய்யும் ஆற்றலைமட்டுமல்ல அழியா இறைநேச நிலையை அடையவும் முடியும்.

- - - - -

ஒரு சாமமும் உன்னை நான்
உவந்திருப்பேன் உயிர் நிலையில்
இருசாமமும் உன்னோடு
இணைந்திருப்பேன் யோகத்தில்
அரியது நீதரும் ஆன்மசுகம்
அகிலம் அறியுமோ உனதுமுகம்
குருசின் அருசின் இரகசியம்
கூறுதல் முறையோ மனோண்மணியே!

மனோண்மணியே உன்னோடு நான் ஒரு சாம நேரமோ இரு சாம நேரமோ இணைந்து யோகத்தில் நிலைத்திருப்பது என்பது யாருமறியாத ஆன்ம சுகமாகும். இந்த யோக இரகசியத்தை நான் எப்படி பகிரங்கமாக உலகத்தில் பேசமுடியும்.

*ஜெய்லான் பதியின் அலீஃப் லைலா*
*தீன் இலாஹி தில்லி உலா*
*பொய்யில்லாத இல்லல்லாஹ்*
*புதைந்து புதைந்து தோன்றும் நிலா*
*கையில் வந்த உஜ்ஜாலா*
*கண்டெடுத்த தருகாவா*
*மெய்யில் வந்து மேலாடி*
*வெளிவருவாயா மனோண்மணியே!*

*ஜெய்லான் பதியில் தோன்றிய பேரின்ப லைலாவாகிய முஹ்யித்தீனே மெய்யான இல்லல்லாவாகும் - அது புதைந்து புதைந்து மீண்டு வரும் தீன் ஆகும். டெல்லியில் தோன்றிய சமதர்ம தீன் இலாஹி அதுவேயாகும். கையில் வந்த வெள்ளொளியும் கண்டெடுத்த தருகா என்ற காரணமும் நீயே மனோண்மணியே நீ வெளியில் வந்து நான் கூறும் உண்மையை உலகறிய பேசு.*

## வானளாவ வளர்ந்த ஆன்மஜோதி

அடுத்த இருதினங்களில் நாகூரை வந்தடைந்த மைந்தர் பாபா ஃபக்ருத்தீனிடம் தந்தையாகிய யூசுபு நாயகம் சில கோரிக்கைகளை முன்வைத்தார்கள்.

“நீர் உமது பாட்டனாரைப் போல் அற்புதங்களின் பொக்கிஷமாக விளங்குவதை நானறிகிறேன். எனினும் இந்த பூமியில் நமது சந்ததிகள் தழைப்பதற்கு நீர் திருமணம் புரிந்து கொள்ளவேண்டும். உமக்குப்பின் திருமணம் புரிந்து வாழவேண்டிய சகோதர சகோதரிகள் உமக்காக காத்திருக்கிறார்கள்” என்றார்கள் யூசுபு நாயகம்.

மௌனித்த பாபாவிடம் தந்தையர் தொடர்ந்து பேசினார்கள்,

“உமது பாட்டனாரைப் போன்று உடல் உறவில்லாமலே சந்ததிகளை உண்டாக்கும் உமது ஆற்றலை நான் அறிவேன். சோழ மண்டலத்தின் தலைநகர் தஞ்சையில், தலைமுறை பரிசுத்த சந்ததியான நாயகம் (ஸல்) அவர்களின் சாதி மத பேதமின்றி ஒவ்வொரு இனத்திலும் தழைக்க நீர் வித்தூன்றியிருப்பதும் எமக்கு தெரியும்.

“எனினும் நீர் கௌதுல் அஃலம் முகியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டவர்களுக்கு பெருமானார் உபதேசம் செய்தது போல “உமது ஞானம் சம்பூரணமடைய திருமணம் செய்துகொள்ளவேண்டும்” என்ற உத்தரவை ஏற்கவேண்டும். உமது பாட்டனார் காதிர் ஒலியின் பிரம்மச்சர்யம் பற்றிய சந்தேகம் எழலாம்.

“அது வேறு விஷயம். பாக்தால் இல்லறத்திலும் நாகூரில் துறவறத்திலும் வாழ்ந்தது இரண்டு ஆன்மா அல்ல ஒரே ஆன்மாதான். அது பெருமானார் (ஸல்) அவர்களுடைய ஆன்மாவேதான். நிழல் தரு குடையாக கருமேகம் சிரசின் மேல் வரக்கண்டு முஹ்யித்தீன் ஆண்டவர்கள் அதை தடுத்து தவிர்த்ததாக வரலாறு உண்டு.”

மௌனமே சம்மதமாய் நின்றார்கள் மைந்தர்.

- - - - - - -

பரிசுத்த சந்ததி அவ்லாதுல் அத்ஹார் என்று திருக்குர்ஆன் வர்ணிக்கும் நபி பெருமானாரின் புனிதமிகு ஆன்மீக வித்து உலகின் பல திசைகளிலும் பரவிச் சென்றிருக்கிறது. பரிசுத்தமென்பது சுபுஹானி மவுள மசானி. நான் பரிசுத்தமானவன் - என்னில் இறைவனை அன்றி எதுவுமே இல்லை என்று உணர்ந்து அடியானாகிய தவயோகி மகாமன் மஹ்முதா என்ற ஏகாந்த நிலையில் நிலை பெற்றுவிடுவதாகும்.

“ஐயன் குணங்குடியானை யன்றிவேறு உன்டென்றென்னுள் ஆய்ந்து பார்த்தேன். ஐயன் குணங்குடியானை அன்றி வேறொன்றும் என்னுள்ளாய்க் காணேன். ஐயன் குணங்குடியானே யானேயென்றறிந்தபின் யென்னறிவாய் நின்ற ஐயன் குணங்குடியானே அதிமோகத் திருநடனம் ஆடுவானே.”

குணங்குடியாரின் இந்த ஞானப் பாடலைப் போன்று தன்னுள் தெளியும் சுத்த அத்துவிதமாகிய பரம்பொருள் நிராமயம் கண்டு அந்த நிராமயம் மனோண்மணியாக தோன்றி நின்றாடுவதை தரிசிப்பது அவ்லாதுல் அத்ஹர் என்ற பரிசுத்த ஆன்மீக வித்திலிருந்து விளையும் பேரின்ப பரவசமாகும்.

இன்சானே காமில் என்கின்ற சம்பூரண சாந்தி நிறைந்த மனித ஜீவிதம் எல்லா இனங்களிலும் எல்லா மதங்களிலும் எல்லாவிதமான மொழிகளிலும் தோன்றவேண்டுமென்ற நோக்கம் இறைவனின் ஜமாலியத்தான பரவசநிலையில் தோன்றிய காதிர்ஒலியின் கல்பமாகிய மனதில் ஸையிது முகம்மது யூசுபு நாயகம் என்ற கனியாக தோன்றியது ஆற்றல் மிக்க முதல் வித்துதான் பாபாவாகும்.

பாபா தோன்றி மறைந்த இடங்கள் பரந்த இந்தியாவின் பல்வேறு பகுதிகளான இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபால், பர்மா, மலேசியா, சிங்கப்பூர், அந்தமான், ஸ்ரீலங்கா, முகல்லதீவு நாடுகளிலும் உள்ளன.

பாபா பத்தாண்டு காலம் நாகூரில் தங்கி தங்கள் தந்தை தாயாருக்கு தொண்டுழியம் புரிந்தார்கள். அவர்களின் விருப்பப்படியே மேலவாஞ்சூரிலிருந்த வணிகர் ஸையிதினா பஹாவுத்தீன் சுஹ்ரவர்தி என்பவரின் மூத்தமகள் பீபி ஹலிமா என்ற பெண்ணை மணமுடித்தார்கள்.

பாபாவுக்கும் பீபி ஹலிமாவுக்கும் ஒரு ஆணும் இரு பெண்களுமாகப் பிறந்த பிள்ளைகள் சாஹிபுமார்கள் சமுதாயத்தின் முன்னவர்கள். இல்லறத்தை நல்லறமாய் நடத்தி வந்த பாபாவின் வாழ்வில் நாற்பத்தி ஓராம் ஆண்டில் ஒரு கனவுகண்டார்கள். அரபகம் சென்று ஹஜ்ஜு செய்ய வேண்டுமென்று முடிவெடுத்தார்கள்.

- - - - - -

பலமாத கால பயணத்துக்குப்பின் கடல் வழியாகவும் கரைவழியாகவும் அரபு நாட்டிலுள்ள மக்க நகரத்தை சென்றடைய வேண்டும் என்ற சூழ்நிலையில் ஹஜ் செய்வதென்பது அரிதான செயல். அந்த அரிதான மார்க்க கடமையை நிறைவேற்ற பாபா புறப்பட்டார்கள்.

உடன் பிறந்த தங்கைகளுக்கும் தம்பியருக்கும் தனது மாமனாராகிய பகாவுத்தீன் சுஹ்ரவர்தி அவர்களுடைய குடும்பத்திலேயே மணவினை புரிந்தார்கள். தமது தந்தையரான யூசுபு நாயகம் அவர்களுக்கு சுமை தெரியாமலிருக்க அவர்களுடைய அனைத்து காரியங்களையும் முன்னின்று செய்தார்கள்.

அன்னை சுல்தான் பீவி தந்தையர் யூசுபு நாயகம் அவர்களிடமும் மனைவி மக்களிடமும் சகோதர சகோதரிகளிடமும் விடைபெற்ற பாபஃபக்ருத்தீன் தனது பிரயாணத்தின் முன்னிரவில் தமது பாட்டனாராகிய நாகூர் ஆண்டவர்களின் தர்கா வாசலிலிருந்து சொற்பொழிவாற்றினார்கள். கூடியிருந்த பெரும் கூட்டத்தில் அனைத்து சாதிமத சமய மக்களும் உட்புகுந்து கலந்திருந்தார்கள்.

பாபாவின் சொற்பொழிவு கூடியிருந்தவர்களின் இதயங்களைக் கிளர்ந்தெழச் செய்தது.

“மதசார்பான ஆலயங்கள், கோயில்கள், பள்ளிவாசல்கள், மாதாகோயில்கள் நினைவிடங்களாகவும் ஆத்மீகப் பயிற்சி கூடங்களாகவும் இருக்க, தர்கா என்கின்ற நல்லோரின் சமாதிகள் நித்திய ஜீவிகளான தெய்வீக புருடர்கள் மறைந்து வாழும் சன்னிதானமாக இருப்பதுதான் இந்த தலங்களின் மதபேதமற்ற நிலைக்கு காரணமாகும்.

“மதபேத கொள்கைகளிலிருந்து நீங்கள் மீண்டு வெளியில் வராதவரை நித்தியசத்தியத்தை தரிசிக்க முடியாது. செய்யிதினா அலீ (ரலி) அவர்கள் “உலகில் எப்பொருளையும் நான் காண்பதில்லை அதில் இறைவனின் உள்ளமையக் கண்டே ஒழிய” என்று கூறியுள்ளார்கள்.

“தவ்ஹீத் என்கின்ற இறைவனின் ஒருமைப்பாடு உலகில் உள்ள அனைத்து மதங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ஞானமாகும். இஸ்லாம் இதனை சட்டமாக்கி உள்ளது. ஒரே இறைவன் என்ற நிலைக்கு இணையாக கொண்டுவரப்படும் எந்த ஒரு அகப்பொருளையும் புறப்பொருளையும் நிராகரிக்க வேண்டும் என்று போதிக்கிறது.

“இஸ்லாம் சட்டமாக்கியுள்ள ஓரிறை கொள்கையை இந்துமதம் தத்துவமாக கொண்டிருக்கிறது. ஒவ்வொரு இந்துவும் மெய்ஞ்ஞான வழியில் முன்னேறும் போது ஓரிறை உணர்வுக்கு உயர்ந்துவிடுகிறான். எனவே தான் அருள்மறை ஃபுர்கான் லகும் தீனுகும் வலியதீன் என்று கூறுகிறது.

“உங்களுடைய மார்க்கம் உங்களுக்கு எங்களுடைய மார்க்கம் எங்களுக்கு என்று கூறப்படும் இந்த மறையின் வரிகளில் உங்களுடைய மார்க்கம் இறைமார்க்கம் அல்ல என்று சொல்லப்படாததை கவனிக்க வேண்டும். ஒவ்வொரு மதமும் இறைமதமே என்று உணரப்படவேண்டும்.

“அவ்வலுத்தீனி மஅரிபத்துல்லாஹ் மார்க்கம் அல்லது மதம் இறைவனைப்பற்றிய அறிதலிலிருந்து ஆரம்பமாகிறது” என்று எம்பெருமான் (ஸல்) போதித்திருக்கிறார்கள். தன்னையறிவது மனிதனின் மீது கடமை என்றும் தன்னையறியும் ஞானத்தை கற்றுத்தரும் குருவை தேடுவதும் அத்தகைய அறிஞர் சிரியாவிலிருந்தாலும் சீனாவிலிருந்தாலும் அவரை தேடி அலைவதும் மனிதனின் மீது கடமை என்றும் கூறியுள்ளார்கள்.

“எனவே குருவை தேடுவது அந்த குருவின் மூலம் ஞானம் தேடி இறைவனை அறிந்து அடைவது என்பது ஒவ்வொரு மனிதனின் மீதும் கடமை. அவன்எந்த மதத்தை சேர்ந்தவனாக இருந்தாலும் மனிதன் மீது இதுகடமையாகும்.”

இவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது அங்கு கூடியிருந்த பெருங்கூட்டத்தின் மூலையிலிருந்து ஒரு மனிதன் எழுந்து நின்றான். அவன் கூப்பாடு அங்கிருந்த கூட்டத்தை வியப்பலாழ்த்தியது.

“ஐயனே குருவை தேடி அடைவது மனிதனின் மீது கடமை என்கிறீர்கள். எனது குரு தாங்களே தான். எனக்கு குரு உபதேசம் செய்யுங்கள். நான் இந்து. ஞானத்துக்கு பேதமில்லை என்று கூறியதாங்கள் என்மீது இரக்கம் காட்டி எனக்கு உய்வு பெறும் உபதேசம் தாருங்கள்.” கூட்டத்தில் இருந்த மக்கள் பேரார்வம் கொண்டு வியப்புடன் பேசத் தொடங்கினர். எங்கும் சலசலப்பு.

பாபா என்ன செய்யப் போகிறார்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்று அறிய அந்த பெரும் கூட்டம் பரபரத்தது. இந்துவாகிய அந்த மனிதனுக்கு குரு உபதேசம் பாபா தருவார்களா.

எனினும் பாபா தன் குரலை உயர்த்தி திருகுர்ஆனிலிருந்து ஒரு பாராவை ஆயத்தை ஓதத் தொடங்கியபோது கூட்டம் அமைதி கொண்டது.

*“அல்லாஹ ு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ளி*

“ஆண்டவனாகிய அவன் வானம் பூமி ஆகியவைகளின் ஜோதிப் பிரகாசமாக இருக்கிறான். அந்த பிரகாசத்தின் அடையாளம் விளக்கு வைக்கப்படும் ஒரு மாடக்குழிக்கு ஒப்பானதாகும்.

“அந்த ஜோதி விளக்கு ஒரு பளிங்கு கிண்ணத்தில் வைக்கப்பட்டுள்ளது. அந்த கிண்ணமோ முத்தாலாகிய ஒரு நட்சத்திரத்தைப் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

“அந்த விளக்கு பாக்கியம் பெற்ற ஜெய்த்தூன் மரத்தின் எண்ணெயால் எரிக்கப்படுகிறது. நெருப்பு தீண்டாமல் பிரகாசிக்கும் அந்த ஜோதியின் எரிபொருளாகிய எண்ணெய் கிழக்கு நாடுகளையும் மேற்கு நாடுகளையும் சேர்ந்தது அல்ல.

“ஜோதிக்குமேல் அதிஜோதியாக பிரகாசிக்கும் அந்த தெய்வீக ஜோதியை நோக்கி தான் நாடிய மனிதர்களை இறைவன் ஏவி அதனை தரிசிக்குமாறு பணிக்கிறான்.”

கம்பீரமான அரபு வசனமும் தெளிவான தமிழ் விளக்கமும் அந்த கடற்கரை பிரதேசத்தில் அமானுஷ்யமான சூழ்நிலையை உண்டாக்கி கொண்டிருந்தது. இந்துக்களும் முஸ்லிம்களும் கிருஸ்துவர்களும் இன்னும் நாகையிலிருந்து வந்த பௌத்தர்களும் சேர்ந்த அந்த பெரும் கூட்டம் ஆர்ப்பரித்த பெருங்கடல் அடங்கியது போல அமைதி கொண்டது.

நீலவானில் நட்சத்திரங்கள் மின்னி கொண்டிருந்தன. அது சித்திரை மாதத்தின் வளர்பிறை நாட்களின் முன்னிரவு. கிழக்கிலிருந்து வந்த கடல் காற்று கோடையின் வெப்பத்தை விரட்டி கொண்டிருந்தது.

“ஆத்மம் ஸ்வயம் ப்ரகாசம் - ஆத்மா தானே ஜோதி மயமானது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

“புத்தி முதலிய ஐம்புலன்களையும் ஆத்மாவாகிய அதுவே பிரகாசிக்கச் செய்கிறது. எனினும் குடம் குடத்தின் மேல் வைத்த விளக்கு போன்ற எதுவும் ஆத்மாவைப் பிரகாசப் படுத்துவதில்லை.

“ஆத்மா அவபாஷி யத்தியேகோ புத்த தாதினி நித்ராயான்யா தீபோ கடாதிபத் ஸ்வாத்மா ஜாஹி தைனவிமாஷ்யதி

“எதன் ஒளியால் சூரியன் போன்றவை பிரகாசிக்கின்றதோ ஆனால் எது இவற்றால் பிரகாசம் அடைவதில்லையோ எதனால் அனைத்தும் ஒளிர்கின்றனவோ அதுவே பிரம்மத்தின் ஜோதி என உறுதிகொள்.

“யத் பாஷா பாடயதி அர்காதி பாஷ்யைஹி யத்தா னபாஷயதி

ஏன் சர்வம் இதம் பாத்தி தத்ய ஹிருயேத் எவதாரியத்

“எங்கும் உள்ள சச்சிதானந்த பிரம்மத்தை ஞானக்கண்ணுடையவன் நன்கு பார்க்கிறான். ஆயினும் அஞ்ஞானியோ ஒளிவீசும் கதிரவனைக் குருடன் காண இயலாததுபோல் பிரம்மத்தை காண்பது கிடையாது.

*சர்வகம் ஸச்சிதானந்தம் தான க்ஷக்ஸ ஹ நீரீச்சாதே*
*அஞ்ஞான க்ஷச்சுஹ நிச்சித பாஷ்சந்தம் பானு அளிதயம்*

ஆதி சங்கரரின் ஆத்ம போதத்திலிருந்து சில சுருதிகளை உச்சரித்து பொருளுரைத்த பாபாவின் போதனையைக் கேட்டு உள்ளமும் உயிரும் குளிர்ந்து நின்றது கூட்டம்.

தூரத்தே கடலோசை மட்டும் எழுந்து சன்னமாக ஒலித்துக் கொண்டிருந்தது. அரசோச்சிய அமைதி நிறைந்த வானக் கூரையின் கீழ் நின்று பாபா உரக்க உச்சரித்தார்கள்.

“அன்பர்களே நீங்கள் யாராயிருந்தாலும் இந்துகள் முஸ்லிம்கள் கிருஸ்துவர்கள் யாராயிருப்பினும் உங்கள் இருகண்களையும் இருகமூடி இருளினுள் உற்று மூடியகண்களின் உள்ளே நோக்குங்கள்.”

பாபாவின் கட்டளையை ஏற்று அந்த பெருங்கூட்டத்தின் அங்கங்களான அந்த மனித கோடிகள் அனைவரும் தங்கள் இருகண்களையும் மூடினார்கள்.

கூடி நின்ற அனைவரின் கண்களிலும் பேரொளி பிரகாசிக்கத் தொடங்கியது. செவிகளில் கிண்கிணி மணியோசை மெல்ல தொடங்கி மேவியது ஒளிஒலி வெள்ளத்தில் மக்கள் கூட்டம் மிதந்தது.

சிறு சிறு மணிகளை போலும் மின்னி பிரகாசிக்கும் நட்சத்திரங்களைப் போலும் பெருகிய விழி ஒளிப்பரப்பு வானமும் பூமியும் தொடும் பிரகாசமாய் வியாபித்தது ஒலிவெள்ளமாக கடல் போல் பெருகியது.

காதிர் ஒலி ஆண்டவரின் வாசலில் கூடியிருந்த அந்த பெருங்கூட்டம் அதனை தரிசித்து ஆர்ப்பரித்தது. அடுத்தசில நொடிகளில் திகைத்து தத்தளித்து தடுமாறி “பாபா பாபா” என்று கூச்சலிட்டபடி கூட்டத்தினர் கண்விழித்தபோது எதிரே பாபா நின்றிருந்த மேடை காலியாகவிருந்தது.

- - - - - -

வடக்கே தெலுங்கானாவிலுள்ள பெனுகொண்டாவை நோக்கி முன்னேறிய வெண்புறவி ஒன்றின் மீது பாபா பறந்து போய் கொண்டிருந்தார்கள். அந்த குதிரையின் முதுகில் காதிர் ஒலி ஆண்டவரின் கிஸ்தி என்னும் அற்புத கொப்பரையும் தந்தை யூசுபு நாயகத்தின் யோகநிலை அசாக்கோலும் இருந்தது.

இருபதாண்டுகளுக்கு முன் ஊரைவிட்டு ஓடிய தன்மைந்தரைப் பற்றி கவலையுற்ற யூசுபு நாயகம், இப்போது முதுபக்கில் தனது அறையினுள் நுழைந்து கண்மூடி அமர்ந்து மைந்தர் பாபா பஹ்ருத்தீன் பரிமீது பறந்து செல்வதையும் உள்ளொளியில் உணர்ந்து அவரது அருமை பெருமைகளையும் உணர்ந்து ஆனந்த கண்ணீர் சிந்தினார்கள்.

*சுத்தம் சுத்தம் பரிசுத்தம்*
*சுத்த திருமயம் உன்சித்தம்*
*அத்தன் உறவு தாமுத்தம்*
*ஆஎன் ரத்தம் உன்ரத்தம்*
*புத்தனா நான் பித்தனா*
*புலிஅலீயா நான் பேரொளியா*
*உத்தமியே நீ வெளியில்வா*
*உலகில் சொல்நீ மனோன்மணியே!*

*உத்தமியாகிய மனோண்மணியே நீ வெளியில் வந்து என் உண்மை நிலையை உலகுக்கு உணர்த்து. நீ பரிசுத்தமானவள் உனக்கு நான் அத்தன் உறவு உனது சக்தியே எனது சக்தி நான் புத்தனா அல்லது பித்தனா என்று உலகறிய நீ சொன்னால் தான் மக்கள் உணர்வார்கள்.*

*என்னை நீயே தானறிவாய்*
*எனக்குள் நீஇதை நீயறிவாய்*
*உன்னை தாயாய் நான்கண்டேன்*
*உன்மடி மழலை நானானேன்*
*முன்னும் முதலும் முடிவும்நீ*
*முத்துப் பெண்ணும் நீதானே*
*அந்நியப் படுத்திப் போகாதே*
*அடியேன் அடிமை மனோண்மணியே!*

*மனோண்மணியாகிய என் தாயே நீயே என்னை ஈன்றெடுத்தாய், உலகின் முதலும் முடிவுமான நீ எனக்குள்ளும் இருந்து உன் மடிமழலையாயும் என்னை காப்பாற்றுகிறாய். என்னை அன்னியப்படுத்தி விட வேண்டாம் தாயே.*

## பரங்கிப் பேட்டையில் ஃபகீர் மாலிமார்

“யார் அந்த மாலிம்? எதற்காக அவர் பெயரைச் சொல்லி கட்டுமரங்களை கடலில் தள்ளுகிறீர்கள்?” பரங்கிப்பேட்டை கடற்கரையில் வேடிக்கைபார்த்து கொண்டு நின்றிருந்த போர்த்துகீசிய மாலுமிகள், பரதவ மீனவர்களிடம் வினாவிடுத்தனர்.

வாஸ்கோடகாமா கடல் நெடும்பயணம் மேற்கொண்டு ஐரோப்பாவுக்கும் இந்தியதுணை கண்டத்துக்குமிடையே வழிகண்டு பிடித்த நாள்முதல் போர்த்துகீசியர் கூட்டம் கூட்டமாக கேரள கரையிலும் சோழமண்டலக் கரையிலும் வந்திறங்கிய வண்ணமிருந்தனர்.

சோழ மண்டல கரையில் நாகப்பட்டினம், தரங்கம்பாடி, பரங்கிப்பேட்டை முதலிய இடங்களில் அவர்கள் ஊருக்குள் புகுந்து மக்களின் மீது அதிகாரம் செலுத்த தொடங்கினர் போர்ச்சுகள் வாசிகளின் வெள்ளை நிறமும் நீலநிற கண்களும் நாகரீகமான ஆடைகளும் பாமர மக்களை வசீகரித்தன.

கோட்டைகள் கட்டப்பட்டன, சர்ச்சுகள் நிறுவப்பட்டன. போர்ச்சுகள் அரசின் பெயரால் வரிவசூல் செய்யப்பட்டது. ஐரோப்பியரின் கூரிய ஆயுதங்களும் துப்பாக்கிகளும் மக்களை அச்சமூட்டின. வெள்ளை நிறத்தவருக்கு கருப்புநிற மக்கள் மெல்ல மெல்ல அடிமைகளாகி வந்தனர்.

இரவெல்லாம் வலைவீசி அலைகடலில் வெகுதூரம் பயணித்து உயிரை பணயமாக வைத்து உழைத்துப் பெற்ற ஆழி அறுவடையான மீன் கூடைகளோடு வந்திறங்கும் பரதவரிடம் கடற்கரையிலேயே வரிவசூலிப்பது வழக்கமாகிவிட்டது. பரதவர்கள்வேறு வழியின்றி கடலில் வாரிவந்த மீன்களில் வரிப்பங்கு கொடுத்தனர்.

போர்ச்சுகல் மிலேச்சர்களின் ஆதிக்கம் ஓங்கி வளர்ந்தது. அந்த நாட்களின் ஒரு அதிகாலைப் பொழுதில்தான் பரங்கிப்பேட்டை கடற்கரையில் கூட்டமாக நின்றிருந்த வெள்ளையர்கள் படகு தள்ளும் பரதவர்களிடம் விசாரித்தார்கள்.

“யார் அந்த மாலிம்? அவர் பெயரைச் சொல்லி படகு தள்ளுவதால் உங்களுக்கு என்ன நன்மை விளைகிறது?”

ஒரு வாலிபமான பரதவன் மிலேச்சர்களுக்கு பதில் கூறினான்.

“அதோ தெரிகிறதே பறக்கும் ஒரு பச்சை கொடி. ஆடும் அந்த கொடியருகில் ஒரு குடிசை இருக்கிறது. அதில் தங்கியிருப்பவர்தான் ஃபகீர், மாலிம்! அவரது முழுப்பெயர் ஃபக்ருத்தீன் பாபா சாஹிப். அவர் இங்கு பத்தாண்டுகளுக்கு முன்னர் வந்தார்.

“அவர் பத்துவருட காலமாக இங்கு தங்கி மக்களுக்கு இஸ்லாம் என்கின்ற மதத்தை பிரச்சாரம் செய்து வருகிறார். அவரிடம் காலையிலும் மாலையிலும் மந்திரித்து கொள்வதால் மக்களின் பிணிகள் நீங்குகிறது. அவருடைய வழிபாட்டு முறைகளில் மக்கள் கலந்து கொண்டு, அவரை பலர் பின்பற்றி வாழ்கிறார்கள்.

அவருடைய வணக்க வழிபாடுகளில் கலந்து கொள்ளாவிட்டாலும் வெள்ளிகிழமைகளில் அவர் ஆற்றும் அற்புதமான சொற்பொழிவுகளை கேட்க மக்கள் அவருடைய வழிபாட்டு தளத்தில் கூடுகிறார்கள். அவரை சென்று தரிசிப்பதால் கஷ்டங்கள் விலகுவதாக மக்கள் நம்புகிறார்கள். அவர் பெயரைச் சொல்லி கட்டுமரங்களை தள்ளி கடலோடுகிறோம். நல்லபடியாக கரை திரும்புகிறோம். இது எங்கள் பழக்கம்.

ஆச்சர்யத்தோடு கேட்டு கொண்டிருந்தார்கள் போர்ச்சுகீசிய வீரர்கள்.

“அவரிடமும் சென்று நாம் வசூலிக்கலாமே. ஓராண்டு காலமாக நாம் இங்கிருக்கிறோம் நமக்கு அவரைப் பற்றி தெரியவில்லையே?”

சிரிப்பும் களிப்புமாக நின்றிருந்தனர் போர்ச்சுகீசியர். திடீரென வானம் இருண்டது மேகங்கள் வானில் சூழ்ந்து வந்தன. அது கார்த்திகை மாதம். ஆண்டுதோறும் அச்சுறுத்தும் புயலும் மழையும் ஒருவாரகாலமாக ஓய்ந்திருந்ததால் கடலோடிய மீனவர்கள் அனைவரும் கரைசேரும் முன்னர் கடல் கொந்தளிக்கத் தொடங்கியது.

கரை சேர்ந்துவிட்ட மீனவர்கள் கடலில் வெகுதூரம் சென்று திரும்பவந்து கொண்டிருந்த கரைசேராத கட்டுமரங்களைப் பற்றி கவலைப்படத் தொடங்கினார்கள். திடீரென ஏற்பட்ட புயலில் வெகுதூரம் சென்ற பரதவர்கள் சிக்கி கொள்வார்கள் என்று கைசேதப்பட்டார்கள்.

நேரம் ஆகஆக அலைகளின் சீற்றம் அதிகரித்தது. காற்றும் வீசத் தொடங்கியது. அதிகாலையிலேயே கரைசேரவேண்டிய பல படகுகள் முற்பகல்வரை வந்து சேராததால் மீனவர் குடிசைகளில் ஓலமெழுந்தது.

கூக்குரலிட்டபடி குழந்தைகளும் பெண்களும் பாபாவின் குடிலை நோக்கி ஓடியபோது தான் அதனை புரிந்து கொள்ள முடியாத போர்ச்சுகீசிய வீரர்கள் பலரும் பாபாவின் குடிசையை நோக்கி விரைந்தனர்.

கூக்குரலிட்ட மக்களை அமைதிபடுத்தி கொண்டிருந்தார் அந்த முப்பது வயது இளைஞர். “பதறாதீர்கள் மக்களே ஆண்டவன் உங்கள் ஆடவர்களை காப்பாற்றுவான்!” பாபாவின் ஆறுதல் மொழி மக்களை அமைதி படுத்தும் போதே தூரத்தே கடலோசையும் படிப்படியாக குறையத் தொடங்கியது. பாபாவின் விசித்திரமான செயல் அங்கு நின்றிருந்தவர்களை ஆச்சரியப்படுத்தியது.

அவர் நிறுவியப் பள்ளிவாசல் மற்றும் உக்காஷா ஒலி நாயகம் என்ற நபிதோழரின் அடக்கத்தலம் அருகில் அமைக்கப்பட்டிருந்த பாங்கொலி மேடையில் பாபா ஏறி நின்றார். தன் கையிலிருந்த கண்ணாடி ஒன்றை கடலுக்கு நேராக காட்டி அங்குமிங்குமாக அசைத்தார்.

அந்த கண்ணாடியிலிருந்து ஒரு ஒளி கற்றையாக வெளியே இருண்ட கடல்நோக்கி வால்நட்சத்திர ஒளிவீச்சைப்போல் ஊடுருவதை அனைவரும் பார்த்து கொண்டிருந்தார்கள். பாபாவின் விசித்திர குரலையும் அவர்கள் கேட்டார்கள். “இந்த பக்கமாக வாருங்கள் உங்களோடு ஆண்டவனிருக்கிறான் அச்சப்படாதீர்கள்.”

பின்னர் பாபா தன் அறைக்குள் புகுந்து நிஷ்டையில் அமர்ந்துவிட்டார். குடிசை அறையின் திரைக்கு வெளியே மக்கள் கூடியிருந்தனர். கடல் அமைதி கொள்வது தெரிந்ததும், கடலோடிகள் மீள்கிறார்களா என்ற ஆர்வத்தோடு ஒவ்வொருவராக கடற்கரையை நோக்கி செல்ல தொடங்கினர்.

எல்லோரும் கலைந்த பின்னரும் அங்கேயே நின்றிருந்த போர்த்துகீசியப் பெண் நதியா, பாபா புகுந்திருந்த அறையின் திரையை நீக்கி கொண்டு உள்ளே பார்த்தாள். சலனம் உணர்ந்து பாபா கண்திறந்தார். நதியா பாபாவின் கடல்போல் விரிந்த கண்களின் பிரகாசத்தை பார்த்தவாறு தன்னை மறந்து அமர்ந்தாள்.

ஒருசாம நேரத்துக்குப்பின் குடிசையின் வாசலில் பெரும் ஆனந்த கூச்சல் எழும்வரை பாபாவின் தியான அறையில் அமைதி நிலவியது.

- - - - - -

மக்கள் பாபாவின் குடிலை நோக்கி திரண்டு வந்தனர். புயலில் சிக்கி தவித்த பதினோறு படகுகளின் மீனவர்கள் அவர்களோடிருந்தனர்.

“பாபா எங்கள் படகில் நடுக்கடலில் திடீரென தோன்றினார். புயலின் நடுவே சுக்கானைப் பிடித்து கொண்டு நின்றிருந்தார். புயலும் மழையும் ஓயும்வரை அவரை எங்கள் கண்களால் உண்மையாகவே கண்டோம்.”

பதினோறு படகுகளில் இருந்தவர்களும் ஒரே விதமான தகவலை கூறியதால் குழப்பம் கலந்த ஆனந்த கூச்சலுடன் பாபாவின் குடிசையை விரைந்த மக்கள் குடிசை கதவுகள் உட்பக்கம் தாழிட்டிருக்க கண்டு தாமதித்து நின்றனர்.

கதவுக்கு வெளியே போர்த்துகீசிய மங்கை நதியாவின் விலைஉயர்ந்த கால்சோடு அனாதை போல் கிடந்தது. அதை பார்த்துவிட்ட மிலேச்ச வீரர்கள் படபடத்தனர்.

“இது எங்கள் படைத்தலைவரின் மகளின் சோடு. கடற்கரையிலிருந்து மக்கள் இங்கு திரண்டு வந்த போது அவளும் இங்கு வந்திருக்க வேண்டும். உள்ளே சென்றிருக்க வேண்டும். எல்லோரும் கடற்கரைக்கு திரும்பிய பிறகு அவள் ஏன் குடிசையின் உள்ளே தாமதித்தாள்?”

குடிசைக்குள் ஏதோ தவறு நடந்திருப்பதாக மிலேச்சர்கள் குழம்பத் தொடங்கினர். குடிசை கதவுகளை உடைத்து திறக்க வேண்டுமென்பது அவர்களது வாதம்.

பாபாவின் அற்புதத்தால் தான் நாங்கள் புயலிலும் பேரலைகளிலிருந்தும் தப்பி கரை சேர்ந்தோம். அப்படிப்பட்ட மகானை சந்தேகிப்பது தவறு. பொறுத்திருப்போம் அவரே கதவை திறக்கட்டுமென்பது பரதவர்களின் கூற்று.

- - - - - -

வெகு நேர சச்சரவுக்குப்பின் குடிசை கதவு உடைக்கப்பட்டது. பரதவர்களும் மிலேச்சர்களும் ஆண்களும் பெண்களுமாக கூச்சலிட்டவாறு உட்புகுந்த போது அங்கே அமைதியே உருவாக இளம்பெண் நதியா அமர்ந்திருந்தாள்.

“பாபா எங்கே? இங்கு என்ன நடந்தது?” கூக்குரலுக்கு அவள் எந்த பதிலும் கூறாமல் குடிலின் உட்பக்க திரையை சுட்டி காட்டினாள். உட்புகுந்தவர்கள் திரையை நீக்கியபோது வெறுமைகுடிகொண்டிருந்தது. அப்பெண் கூறினாள் “பாபா அமானுஷ்யமாக மறைந்து போய்விட்டார்.”

கலவரத்துடன் அவளை அங்கிருந்து அழைத்துப் போக மிலேச்ச வீரர்கள் முயற்சித்த போது அவள் மறுத்துவிட்டாள். அவள் கூறிய வித்தியாசமான செய்திகள் கேட்டவர்களைத் தாக்கியது.

நதியா கூறினாள்,

“பாபா என்னுடைய காதலர் ஏசுபிரானாவார். நான் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் யூதேயா தேசத்தில் அவரோடு வாழ்ந்த மகதலேன் மரியாள் ஆவேன். என்னுடைய சந்ததிகள் உலகில் பல திசைகளிலும் பல்கிப் பெருகி வாழ்கிறார்கள்.

“மறைந்து மீட்சிப் பெற்ற என்னுடையவர் வான் உயர்ந்த பிறகு நான் மரணித்தேன். போர்த்துகீசிய நாட்டின் லிஸ்பன் துறைமுக நகரில் பெர்டினன்ட் என்ற வீரரின் மகளாக பிறந்தேன். சிறு வயதிலிருந்தே என் காதலர் இந்தியாவில் தோன்றுவார் என்று எனக்கு தெரியும்.

“நான் என் ஏசுவாகிய காதலர் பாபாவைத் தேடிக் கொண்டு என் தந்தையுடன் இந்தியாவுக்கு வந்தேன் பாபாவாகிய என்னவர் இந்த குடிலில் இருப்பது எனக்கு முன்னதாக தெரியும். கடந்த ஓராண்டு காலமாக காலையிலும் மாலையிலும் நான் என் காதலரோடு இங்கு வந்து தாமதித்திருந்து விட்டு செல்வேன்.

“இதோ எனது நாதர், மீண்டும் அமானுஷ்யமாக மறைந்து போனார். என் கர்ப்பத்திலுள்ள அவரது வாரிசை நான் இந்த நகரத்தில் பிறக்கச் செய்வேன். அவர் இருக்கும் இடங்களில் நான் தொடர்ந்து பிறவியெடுப்பேன்!”

அவள் கூறிய கதையை யாரும் நம்புவதாக இல்லை. எனினும் மற்றவர்கள் நம்புகிறார்களா? இல்லையா? என்பதைப் பற்றி அவள் கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை. அவளுடைய தோற்றத்தில் ஒரு புனிதம் மிளிர்வதை மட்டும் மக்கள் கவனித்தார்கள்.

மற்றவர்களுக்கு நதியாவின் வார்த்தைகள் பைத்தியக்காரத்தனமாக தோன்றலாம். ஆனால் அவள் தன்னை மரியாவாகவும் காதலர் பாபாவை ஏசுவாகவும் உணர்வதை தடுக்கும் உரிமை யாருக்கும் கிடையாது. ஏனெனில் “உங்கள் அனைவரையும் ஒரே ஆன்மாவிலிருந்தும் படைத்திருக்கிறோம்” என்பது திருக்குர்ஆன் வாக்கியம்.

நதியா தன் கணவரான பாபா மறைந்த இடத்தைவிட்டு வெளியில் வர மறுத்துவிட்டாள். அவளது தந்தையையும் மிலேச்ச வீரர்களையும் விட்டு விலகினாள். பத்து மாத காலத்துக்கு பின் ஒரு பெண்குழந்தையை ஈன்று மீனவர்களிடம் ஒப்படைத்துவிட்டு மறைந்தாள்.

சோழ மண்டல கடற்கரையில் கூடை நிறைந்த மீன்களை சுமந்து நடந்த நதியாவின் மகளை பயபக்தியோடு பார்த்தார்கள் பரங்கிப்பேட்டையின் பாமர மக்கள். தேவநேசமாகிய சந்ததி மஹ்மூத்பந்தர் என்ற அந்நகரில் தன்னை ஸ்தாபித்து கொண்டதை யாரும் தடுக்கமுடியவில்லை.

கமாலியத் என்னும் சம்பூர்ண சமாதி நிலையில் இறுதி திருத்தூதரின் முகம்மது நபி நாதரின் ஆன்மா இறைசந்திப்புக்காக விண்ணேற்றம் மேற்கொண்டபோது அது பாக்தாத்தின் ராஜரிஷி முஹியித்தீன் நாயகத்தின் ஜலாலியத் என்னும் ஆவேச கோலம் கொண்டிருந்தது. தெய்வதரிசனம் பெற்று உலகுக்கு மீண்டபோதோ நபியின் ஆன்மா ஜமாலியத் என்கின்ற அழகிய குளிர்ந்த நிலையில் நாகூரார் காதிர் ஒலி ஆண்டவரின் கோலம் கொண்டது .

தமிழகமென்பது தெய்வீக உலகமாகும். இங்கு நாலா திசைகளிலும் ஆண்டவராகிய காதிர் ஒலியின் ஜீவ அணுக்கள் சிதறிக் கிடக்கின்றன. ஆண்டவரின் குலக்கொடி வழியில் பூத்த மலர்களான முஸ்லிம்களாயினும், கிறிஸ்துவர்களாயினும், இந்துக்களாயினும் தன்னிலை உணர்த்தப்படும் ஆண்களும் பெண்களும் நாகூரை நோக்கி விரைந்து ஓடி வருகிறார்கள்.

ஆண்டவர்களின் அடக்கத்தலத்தில் சரணமடைந்து மதபேதங்களுக்கெல்லாம் எட்டா உயரத்திலுள்ள முக்தி நிலையை அந்த ஆன்மாக்கள் அடைந்து அமைதி பெறுகின்றன.

*பரங்கிப்பேட்டை கடல்கண்டேன்*
*பாய்விரித்த கலம் கண்டேன்*
*தரங்கம் பாடும் ஊருக்குள்*
*தந்தை மகளை கண்டேனே*
*அரங்கம் கண்டேன் அருள்கண்டேன்*
*ஆண்டவனாரின் திருவருளால்*
*உறங்கிப் போன உத்தமியை*
*உயிராய் கண்டேன் மனோண்மணியே!*

*பரங்கிப்பேட்டையாகிய என் நெற்றியின் நடுவில் பாய்விரித்த கலமாகிய உனது ஜோதியை கண்டேன். தரங்கம் ஆகிய கடலாடும் கண்களின் மத்திபமான காப கௌஸைன் ஆகிய கமலபீடத்தில் என் உடலின் உயிராகிய உன்னை மீண்டு வந்த காதலியாய் கண்டு தலைவணங்கினேன் மனோண்மணியே.*

புத்தி மரத்தின் பழத்தைநான்
புளிப்பாய் கண்டேன் என்தாயே
அத்திமரத்தின் பழத்தில்தான்
அடி யேன் கண்டேன் பேரின்பம்
சித்தி மரத்தின் பழத்தைநான்
தேட தேட்டம் மிகுந்தேனே
முக்தி மரத்தின் பழம்தரவே
முடுகிவாராய் மனோண்மணியே!

ஐம்புலன்களை கருவியாய் கொண்ட புத்தியென்ற பகுத்தறிவு புளித்துப் போனது. உள்ளொளி என்னும் தூர்சினா மலையின் அத்திமரமே பேரின்பமாகும். அத்திப் பழமாகிய மெய்ஞானத்தை தரிசித்து சித்தி முக்தி பெற சேவித்தேன் உன்னை மனோண்மணியே.

## புட்டபர்த்தியில் புகுந்த மகரந்தம்.

"ஹோஷ்பர்தம் நஜர்பர்கதம் - உன்னில் உன் முச்சை அடக்கு உன்னிரு பார்வையைப் பாதத்தில் பதித்திடு" பாரசீக வார்த்தைகளை கவிதைகளாகப் பொழிந்து கொண்டிருந்தார் மாமனிதர் பாபா ஃபக்ருத்தீன். குன்றின் மீதமைந்த இறைநேசர் செல்வர் பாபா ஃபக்ருத்தீனின் அடக்கத்தலமாகிய மஜார் சுவர்களில் மாமனிதர் பாபாவின் கவிதைகள் எதிரொலித்தன.

பெனு கொண்டா என்ற அந்த தெலுங்குதேச நகரம் ஒரு மாதகாலமாகப் பரபரப் படைந்திருந்தது. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் அங்கு வந்து நல் அடக்கம் கொண்ட திருச்சி தப்லேஆலம் பாத்துஷாவின் கலிஃபா பாபா ஃபக்ருத்தீனின் பெயரை தன் பெயராகக் கொண்ட தவஞானி பாபா அந்த நகரில் வந்து புகுந்தபோது அவருடைய தெய்வீக கோலத்தால் மக்கள் ஆகர்ஷிக்கப்பட்டிருந்தனர்.

நகரில் முஸ்லிம்களும் இந்துக்களும் பெருகி வாழ்ந்தனர் உயர்ந்த மலைகுன்றுகளில் சரிந்தும் உயர்ந்தும் செல்லும் மலை பாதை ஓரங்களில் வீடுகளும், வியாபார ஸ்தலங்களும், பள்ளிவாசல்களும், கோயில்களும், மடங்களும், மதரஸாக்களும் காட்சியளித்தன.

குன்றுகளின் அடிவாரங்களில் முந்திரி தோப்புகளும், பலா தோப்புகளும் பசுமையாக படர்ந்திருந்தன, மலைப்பாதைகளில் ஈச்ச மரங்களும், பனை மரங்களும் ஆங்காங்கே வரிசை வரிசையாக நின்றிருந்தன.

அங்கு வந்து புகுந்து இறைநேசச்செல்வர் பாபா ஃபக்ருத்தீனின் தைக்காவில் அமர்ந்த மாமனிதர் பாபா ஃபக்ருத்தீனை சுற்றி மக்கள் சூழ்ந்த வண்ணமிருந்தனர். அவரிடம் சென்று தன்குறையை கூறி அழுத ஒரு குஷ்டரோகியின் நோய் அவரது பிரார்த்தனையால் அடுத்த கணமே நீங்கியதை அறிந்த நகரமக்கள் அனுதினமும் அவர்முன் கூடினர்.

பெனுகொண்டா நகருக்கு ஆண்டு தோறும் வந்து சேரும் நாகூர் காதிர் ஒலி ஆண்டவர்களின் ஃபக்கீர்கள் பாபா அங்கு வருவதற்கு முன்னதாகவே வந்து குழுமியிருந்தனர். அங்கு அடங்கியிருக்கும் கந்தூரி முடிந்ததும் இறைநேசரின் பான்வா ஃபக்கீர்கள் அங்கிருந்து தெற்கு நோக்கி புறப்படுவார்கள்.

காதிர் ஒலி ஆண்டவர்களின் மறைவுக்குப் பிறகு அவர்களின் நானூற்றி நான்கு ஃபக்கீர்களும் நாகூரை விட்டு புறப்பட்டு தென்னகத்தின் பல பகுதிகளுக்கும் நடைபயணமாகச் சென்று இஸ்லாமிய தரீக்காக்களின் நோக்கத்தை மக்களிடையே பரப்புவதிலும் காதிர் ஒலி ஆண்டவர்களின் ஆன்மீக பேராட்சியின் அடையாளமாக நாடு நகரங்களிலும் சிற்றூர், பேரூர்களிலும் சென்று இறைப்பணி ஆற்றுவதையும் தங்கள் கடமையாகக் கொண்டு செயல்பட்டனர்.

ஆண்டவர்களுடைய காலத்திற்குப் பின் ஃபக்கீர்களுடைய சந்ததிகளும் தங்கள் பெற்றோர்களின் பணியை ஏற்று நடத்தி வந்தனர். அவர்கள் சென்ற இடங்களில் மக்களுக்கு யூனானி மற்றும் ஆயுர்வேத வைத்தியம் செய்தும் அஸ்மா தலஸ்ஸமாத் இஸ்மு மந்திர வேலைகள் செய்தும் மக்களின் உடல் பிணிகளையும் மனப்பிணிகளையும் நீக்கி வந்தனர்.

*தங்கள் குருநாதர் காதிர் ஒலி ஆண்டவர்களின் பேரரும் கலிஃபாவுமான பாபா ஃபக்ருத்தீனின் வருகை ஃபக்கீர்களை பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருந்தது. அது வெள்ளிக்கிழமை இரவு பாபாவின் திருமுன் அமர்ந்து காதிரிய்யா தரீக்கத்தின் திக்ரு மஜ்லீசை அவர்கள் தொடங்கியிருந்தனர்.*

*ஸலவாத்துன் கரீமி ஸஹ்ருன் வஹவ்லா*
*லீவுஜூதிய ஜின்னி லில்லாஹி மவுலா*

*உன்னை யல்லாது வேறு யாரை நினைப்பேன்*
*தன்னில் தானாக வந்த தயாபரனே*

*லாயிலாஹ இல்லல்லாஹூ அல்லாஹ்*
*லாயிலாஹ இல்லல்லாஹூ அல்லாஹி*

*என்னை படைத்தோனே ஏகாந்தமான ரப்பே*
*உன்னையல்லாது வேறுயாரை நினைப்பேன்*

*ஸலவாத்துன் கரீமி ஸஹ்ருன் வஹல்லா*
*அல்ஃபா அல்ஃபி அலர் ரசூலிம் முஅல்லா*

**காதிரிய்யா திக்ரின் திக்ரு முறை**
**பிஸ்மில்லா ஹிர் ரஹூமா நிர்ரஹீம்**

*அல்லாஹூம்ம ஸல்லி அலா ஸையிதினா முகம்மதின்*
*வ அலா ஆலி ஸையிதினா முகம்மதின் வபாரிக் வஸல்லிம் அலைஹி*
*லாயிலாஹ இல்லல்லாஹ் வஹ்தஹூ லஷரீக்க லஹூ*

*லஹூல்முல்கு வலஹூல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து வஹூவஅலா குல்லி ஷையின் கதீர் - 3*

*சுபுஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹீ அல்லாஹூ அக்பர் - 3*

*சுபஹானல்லாஹி பிஹம்திஹி சுபுஹானல்லாஹில் அளியுல் அலீம் -3*
*ரப்பனா மக்ஃபிர்லனா வதுப் அலய்னா இன்னக அந்த தவ்வாபுர் ரஹீம் - 3*
*அல்லாஹூம்ம ஸல்லி ஆலாமுகம்மத் அல்லாஹூம்ம ஸல்லி அலைஹி வஹல்லம் - 3*
*ஸலவாத்துன் கரீமி ஸஹ்ருன் வஹவ்லா அல்ஃபா அல்ஃபி அலர் ரசூல்லில் முஅல்லா*
*அஸ்தஃபிருல்லாஹி ரப்பில் பராயா வஸ்தஃபிருல்லாஹி மினல் ஹதாயா*
*அஸ்தஃக்பிருல்லாஹி மிம்மாஸியல்லாஹ்*
*வகுல்லுஸய்யின் யகூலு அல்லாஹ்*
*லாயிலாஹ இல்லல்லாஹ் - 166*
*இல்லல்லாஹ் இல்லல்லாஹ் இல்லல்லாஹ் - 100*
*ஹூ ஹூ - 166*
*அல்லாஹூ மவ்ஜூத் பில்உஜூத் - 66*
*ஹூ அல்லா ஹூஹூ அல்லா - 66*
*ஹக்து ஹக் - 66*
*அன்தல் ஹாதி அன்தல் ஹக்கு லைஸ்ஸல்ஹாதி இல்லாஹூ-30*
*ஹஸ்பிரப்பி ஜல்லல்லாஹ் மாஃபி கல்பி ஹைருல்லாஹ்*
*நூரு முஹம்மத் ஸல்லல்லாஹ் லாயிலாஹ இல்லல்லாஹ் - 10*
*சுப்ஹானல்லாஹ்- 33*
*அல்ஹம்துலில்லாஹ் - 33*
*அல்லாஹூ அக்பர் - 33*
*ஹய்யுல் கய்யூம் - 100*
*அல்லாஹூ லாயிலாஹூவல் ஹய்யுல் கய்யூம்*
*ஹஸ்பி ரப்பி ஜல்லல்லாஹ் மாஃபி கல்பி ஃகைருல்லாஹ் நூரு முகம்மது ஸல்லல்லாஹ் - 33*
*லாயிலாஹ இல்லல்லாஹ் - 33*

ஆவேசமாக ஒலித்த திக்ரின் ஓசை அந்த நகரத்தை சூழ்ந்திருந்த குன்றுகள் தோறும், குன்றங்களின் நின்ற வீடு தோறும் எதிரொலித்தது.

பாபாவும் ஃபக்கீர்களும் அமர்ந்திருந்த இறைநேசச் செல்வர் பாபா ஃபக்ருத்தீனின் உயர்ந்த சமாதிகளின் அருகில் பெருந்திரளாக மக்கள் வந்து கூடினர். ஊர் பெரியவர்கள் சிலர் ஒன்றாக கூடி பாபாவின் முன் வந்து பணிவாய் மொழிந்தார்கள்.

"ஐயனே ஒரு வார காலமாக இந்த நகர மக்களை பல்வேறு விதமான பிணிகளும், சுரமும் தலை நோயும், வயிற்றுப் போக்கும், அம்மையும் பீடித்து மக்கள் அவலப்படுகின்றனர். தாங்கள் தயைகூர்ந்து பிரார்த்தனைப் புரிந்து மக்களின் இன்னல் தீர்த்திட வேண்டும்."

மக்கள் பிரதிநிதிகளின் உருக்கமான வேண்டுதலுக்கு தலைசாய்த்தார்கள் பாபா தாங்கள் அமர்ந்திருந்த பீடத்திலிருந்து எழுந்து தர்காவின் வலப்புற சுவரோரமாகச் சென்று நின்றார்கள்.

நீல வானில் வெண்முகில்கள் படிந்திருந்தன பல வண்ணப் பறவைகள் அங்குமிங்குமாகப் பறந்து திரிந்தன. பாபா மேற்கு வானத்தை நோக்கி இரு கண்ணும் முடியவர்களாக இரு கரங்களையும் உயர்த்தி பிரார்த்தனை புரிந்தார்கள். பின்பு சப்தமிட்டார்கள் "ஓடிவிடு ஓடிவிடு சைத்தானே தூற்கரோ."

பாபாவின் ஆவேசமான குரலையடுத்து அருகிலிருந்த குன்றின் அடிவாரத்தில் பெரிய ஆலமரமொன்று வெட்டி சாய்த்தது போல் வேரோடு சாய்ந்தது. கிரீச்சிட்ட குரலோடு உடைந்த மரக்கிளையிலிருந்து கிழப்பருந்து ஒன்று வெளியேறியது.

பாபா சொந்த குரலில் மீண்டும் பாடத் தொடங்கினார்கள்.

"ஆராரோ ஆராரோ ஆராரோ அவனன்றி வேராரோ ஆரென்பதாரோ நீ ஆராய்ந்து அறிந்துகொள் புத்திரியே நித்திரையாம் திரையில் நிலையா நினைப்பெல்லாம். சித்திர பாவையென்றே சிதறிவிட்டாடடி புத்திரியே ஆராட்டும் சீராட்டும் சுவாசம் அசைத்தாட்டும் ஊஞ்சலதில் பாராட்டி தாவடத்தில் பயனை எத்திக்கொள் புத்திரியே."

பாபாவின் மெய்ஞானப் பரவசப்பாடல் முடியுமுன் தர்காவின் வாசலில் ஏராளமான மக்கள் வந்து கூடி நின்றனர். நோய்வாய்ப்பட்டு கிடந்த குழந்தைகளும் முதியவர்களும் மற்றவர்களும் திடீரென குணமடையக் கண்டு அதிசயித்த மக்கள் பாபா ஃபக்ருத்தீனின் பாதத்தில் வந்து வீழ்ந்து வணங்கினார்கள்.

எனினும் கண்ணீரும் கம்பலையுமாக அங்குஓடி வந்த ஒரு இளம்பெண் தன் கரங்களில் இருக்கும் இளம்பாலகனை பாபாவின் காலடிகளில் கிடத்திவிட்டு குமுறி அழத் தொடங்கினாள். உசும்பதலின்றி கிடந்த அந்த பாலகனை பார்த்த ஃபக்கிர்களும் மற்றவர்களும் அப்பெண்ணுக்கு ஆறுதல் சொல்லத் தலைப்பட்டனர்.

எனினும் பாபா அவர்களை கையமர்த்திவிட்டு தன்தோளில் கிடந்த மஞ்கள் நிறசால்வையை தரையில் விரித்து அக்குழந்தையை எடுத்து அதன்மீது படுக்க வைக்கச் செய்தார்கள்.

பின்னர் அதனை போர்த்திமுடி பாட்டனார் காதிர் ஒலியின் அசாவால் அதனை மெல்ல தட்டி “கும்பி இத்னில்லாஹ், அல்லாவின் உத்தரவு கொண்டு ஆன்மாவே நீ விழித்தெழு” என்று அழைத்தார்கள். அந்த குழந்தை அசையாது கிடந்தது. பாபா மீண்டும் குரலுயர்த்தி “கும் பி பாபா ஃபஹ்ருத்தீன் - இங்கே அடங்கியிருக்கும் இறைநேசச் செல்வர் பாபா ஃபஹ்ருத்தீனின் உத்தரவு கொண்டு எழுந்திரு” என்றார்கள்.

தொடர்ந்து அமைதி நிலவவே. பாபா ஆவேசமடைந்தார்கள்.

“அனல்லாஹ் அனபஹ்ருத்தீன் வலியுல்லா கும்பி இத்னி - நானே அல்லாஹ் நானே இறைநேசர் ஃபஹ்ருத்தீன் என் உத்தரவு கொண்டு எழுந்திரு என்று கூச்சலிட்டார்கள்.”

அந்த சால்வையை விலக்கி கொண்டு குழந்தை உயிருடன் எழுந்து அமர்ந்தது. அக்குழந்தையின் தாய் ஆனந்த கண்ணீர் பெருக்கினாள். மக்கள் திகைத்து நின்றனர்.

அப்பொழுது அந்தப் பெண் தன் குழந்தையை பாபாவின் காலடிகளில் கொண்டுவந்து அமர்த்தினாள் அவள் “நான் இங்கிருந்து பதினைந்து மைல் தொலைவிலுள்ள புட்டபர்த்தி கிராமத்தை சேர்ந்தவள் மறு உயிர்பெற்ற இவன் உங்களுடைய குழந்தை” என்று அவள் கூறியபோது அங்குநின்றவர்கள் அவளை விசித்திரமாகப் பார்த்தார்கள்.

“நான் இவனை என் வயிற்றில் உண்டாகிய நாளில் ஒரு கனவு கண்டேன். அதில் தங்களை கண்டேன். என் நினைவில் தெளிவாக கனவில் கண்ட உங்கள் முகம் இலங்குகிறது. தாங்கள் என்னிடம் நீ நீண்ட காலமாக குழந்தையில்லாதிருந்து ஆண்டவராகிய நாகூராரின் வாசலை தேடிவந்து வேண்டுதல் வைத்தாய். உன் வேண்டுதலை ஏற்று உனக்கு ஒரு மகனை அருள் புரிந்தோம் என்று கூறினீர்கள்.

“நான் நேற்றிரவும் தங்களை கனவில் கண்டேன். என் மகனை என்னிடம் கொண்டு வந்து ஒப்படைத்துவிடு என்று கூறினீர்கள். விழித்தெழுந்தபோது தங்களின் கூற்று எனக்குப் புரியவில்லை. சில நாட்களாக நோய் வாய்ப்பட்டிருந்த மகனின் நிலை மோசமாகியதால் உங்களிடம் ஓடிவந்தேன்.”

அவள் பேசப்பேச அதிசயமாக பார்த்து கொண்டிருந்த மக்கள் வியப்படைந்து போனார்கள். எஜமான் காதிர் ஒலி ஆண்டவர்களின் பேரரான பாபா ஃபக்ருத்தீன் இப்போது பேசினார்கள்.

“காதிர் ஒலி ஆண்டவர்களின் அற்புதங்களில் ஒன்றாகப் பிறந்த இக்குழந்தையும் அவர்களின் ஞான வாரிசாக விளங்கும். இவனது சந்ததிகளில் இறை காதலர்கள் தொடர்ந்து பிறப்பார்கள்” என்று ஆசீர்வதித்தார்கள்.

புட்டபர்த்தியிலிருந்து வந்த அந்த மாதின் மகன் வயிற்று சந்ததியில் ஏழாவது தலைமுறையில் சாயிராம் என்று லட்சோப லட்சம் மக்கள் கொண்டாடும் சாயிபாபா தோன்றினார்.

எழுதி கவிதை உன்பாத
எழிலை முத்தம் இடுகின்றேன்
தொழுது உந்தன் நெஞ்சத்தில்
நுழைந்து தவத்தில் படிகின்றேன்
அழுதும் சிரித்தும் உன்னைநான்
அடையப் பாடுபடுகின்றேன்
முழுதும் உன்முன் சரணானேன்
முக்தி தருவாய் மனோண்மணியே!

மனோண்மணியே தாயே! உன் பாத அழகை கவிதைகளாக்குகிறேன். தொழுதும் தூய தவம் புரிந்தும் உனது நெஞ்சத்தில் இடம் தேடுகின்றேன். அழுதும் சிரித்தும் மஜ்தூபென்னும் இறைகாதலனாய் மாறிவிட்ட எனக்கு முக்தி தருவாய் தாயே!

*காயா புரியாம் கோட்டைக்குள்*
*கவலை மகுட மன்னன்நான்*
*தூயவளே உன் தோட்டத்தில்*
*சூக்கும சுனையில் குளித்தால் தான்*
*ஓயா கவலை ஓய்ந்திடுமாம்*
*உம்பர் உலகின் திலோத்தமையே*
*மாயா மையல் தீர்த்தென்னை*
*வானம் சேர்ப்பாய் மனோண்மணியே!*

*காயாபுரி கோட்டை என்ற ஜடலத்தை ஆளும் கவலை என்ற கிரீடத்தை சூடிய மன்னன் நான். சூக்குமமாகிய உனது காபகௌளஸைன் சுனையில் குளித்து எழுந்தால்தான் கவலைகள் ஓய்ந்து வானமாகிய சொர்க்கம் வாய்க்கும். உதவுவாயா மனோண்மணியே தாயே!*

## யார் அந்த மனோண்மணி?

குல்பர்கா நகரிலுள்ள காஜா பந்தே நவாஸ் தர்பாரில் அமர்ந்திருந்தார்கள் பாபா ஃபக்ருத்தீன். பெனுகொண்டாவிலிருந்து அவர்கள் நடக்கத் தொடங்கிய போது. பாட்டனார் காதிர் ஒலி ஆண்டவர்களின் ஃபக்கிர்களில் நாற்பத்தி நான்கு பேர் அவர்களோடு தேசாந்திரம் புறப்பட்டார்கள்.

பாமினி சுல்தானியத்தின் தலைநகரங்களில் ஒன்றான குல்பர்காவை நோக்கி பயணப்பட்டு ஆந்திர, கர்நாடக மாநிலங்களின் நிலப் பகுதிகளையும், பேராறுகளையும், காடுகளையும் கடக்க வேண்டியிருந்தது. கானகப் பாதைகளில் பாபாவின் கையிலிருந்த கிஸ்தி ஃபக்கீர்களுடைய உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தது.

அது முற்பகல் பொழுது - ஃபக்கீர்கள் நகரின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று தங்கள் தேவைகளை முடித்துக் கொண்டு பாபாவின் எதிரில் வந்து அமர்ந்தார்கள். பல வார கால பயணத்தால் சோர்வடைந்த ஃபக்கீர்கள் தர்காவில் ஓய்வு கொள்வதற்காக அங்குமிங்குமாகப் படுக்கையை விரித்தார்கள்.

பாபா விசித்திரமான சில பாடல்களைப் பாடத் தொடங்கினார்கள். மனோண்மணி என்ற ஒரு பெண்ணைப் பற்றிய பாடல் அது. மனஉருக்கமாகவும் காதல் ரசம் ததும்பவும் பாபா பாடும் தமிழ்பாடலைக் கேட்டு ஃபக்கீர்கள் அதன் உட்பொருளை புரிந்து கொள்ளமுடியாமல் அமர்ந்திருந்தார்கள்.

*மானே மயிலே என் மனம் நிறைந்த பத்தினியே*
*தானே எனை ஈன்ற தாயே மனோண்மணியே*
*ஊனில் உயிராகி உள்ளுள் உலவிவரும்*
*கானக்குயிலே என் கண்ணே மனோண்மணியே*
*தாயாய் தந்தையுமாய் சார்ந்து நிற்கும் சொந்தமுமாய்*
*மாயை புரிந்து நிற்கும் மனமே மனோண்மணியே*

*எத்திக்கும் நின்று எனையாளும் பெண்ணரசே*
*புத்திக்குள் நின்றாடும் புதிரே மனோண்மணியே*
*தேவநேசத் திலென்னை தித்திக்க வைத்தவளே*
*பாவவேசந் துறந்த பலனே மனோண்மணியே*
*கானகம் தேடி கால் நடந்து போனஎன்னை*
*பானகம் அருந்தவைத்த பக்தை மனோண்மணியே*

*பெண்ணென்று வந்து பேயாட்டும் ஜெகம் மீது*
*கண்ணில் உனையென்று காண்பேன் மனோண்மணியே*
*உள்ளம் கவலைகளால் உருகுதடி மாதரசே*
*கள்ளம் தவிர்த்து எனை காப்பாய் மனோண்மணியே*
*பட்டப்பகல் கனவாகி பாழில் விடியாமல்*
*கட்டி அணைத்தருள்வாய் கண்ணே மனோண்மணியே*

*எங்கிருப்பாய் என்று எண்ணி எண்ணி உருகுமென்னை*
*இங்கிருப்பேனென்று எதிர்வா மனோண்மணியே*
*வேண்டாம் விளையாட்டு விபரீதம் விட்டு என்னை*
*ஆண்டவன் மாளிகைக்குள் அழைப்பாய் மனோண்மணியே*
*ஐயோ உனை நம்பி அகிலத்தை கைவிட்ட என்னை*
*மெய்யாய் பொருந்தி மீட்பாய் மனோண்மணியே*

*கண்முன் நடந்துவந்து காதலித்து என்னுள்நல்ல*
*பெண்ணாய் பிறப்பாயோ பிரியாய் மனோண்மணியே*
*உன்முகம் பார்க்க உருகுமென்னை காதலித்து*
*தன்னுள் அணைப்பாய் என் தாயே மனோண்மணியே*
*ஆத்துமத்தில் நின்ற அறிவே அருளேஉன்*
*நேத்திரம் திறந்து பார்ப்பாய் மனோண்மணியே*

*குருவென்று வந்து கோபமுகம் கொண்டவளே*
*கருவென்று வந்து காப்பாய் மனோண்மணியே*
*உன்னை விட்டால் எனக்கும் எவரோ சத்தியமாய்*
*என்னைவிட்டுப் போக வேண்டாம் மனோண்மணியே*
*பிணமாய் நான் விழுந்து பேயாய் திரியாமல்*
*குணமாய் நடந்தென்னை கொள்வாய் மனோண்மணியே*

*நானென்ற ஆனவத்தை நல்லடக்கம் செய்துவிட்டு*
*தானென்று நிற்பாய் என் தாயே மனோண்மணியே*
*சத்தியம் சத்தியம் என் தாயே உன் பாதம்*
*நித்தியம் ஆக்கி நிறைவாய் மனோண்மணியே*
*பத்தினியே உன்பதத்தில் பரமநிலை அடைந்து*
*முத்திபெற அருள்வாய் மதியே மனோண்மணியே*

பாபாவின் பாடல்களையெல்லாம் செவிமடுத்த ஃபக்கீர்கள் இந்த மனோண்மணி என்ற பெண்மணி யாரென்பது தெரியவில்லையே என்று அலமலர்ந்து அமர்ந்திருந்தபோது, அங்கு அழகே உருவாய் ஒரு இளம் பெண் வந்து நின்றாள். இளம்விதவை போல் தோன்றிய அவள் பாடினாள்,

*“தன்யஜா லோம் ஹோஸம் யாரீ ஆம்ஹி தேகிலீ பண்டரீ*
*கரும் க்ஷேதா பரதக்ஷினா பேரும் ஸந்த ஸாதுஜனா*
*சந்த்ர பாகேம் கரும் ஸ்நான புண்ட லீகாசேதர்சன*
*உ பேராஹ ூம் கருடபார்ரீ டோளேகருநி பாஹ ூம் ஹரி*

*“பண்டரிபுரம் கண்டேன் பக்தை நானானேன்*
*அண்டசராசரம் ஆளும் ஆண்டவனை கண்டேன்*
*கண்டவர் கண்களில் கடவுளாய் நின்றவன்*
*கொண்டனன் என்னை குருவென்னுள் ஆனேன்”*

சம்ஸ்கிருதத்தில் அவள் பாடியப் பாடல் விசித்திரமாக இருந்தது. இந்துப் பெண்ணான அவள் தன் கையில் சுமந்து வந்த மலர் குடவையை பாபாவின் பாதங்களில் பொழிந்தாள். பாபா கண் விழித்து அப்பெண்ணை பார்த்தார்கள்.

“பெண்ணே நீ வாழும் பத்ரீயில் மெய்யடியார்களின் சந்ததியை தோன்றச் செய் உன் புத்திரர்களின் புத்திரன் ஷீரடி என்ற தலத்தில் தெய்வீக விளக்கை ஏற்றிவைப்பான்”

பாபாவின் ஆகர்ஷனப் பார்வையில் தன்னையிழந்தவளாக அப்பெண் வெகுநேரம் அங்கு அமர்ந்திருந்தாள். ஞானம் நின்றந்த இரு ஆன்மாக்கள் ஒன்றை ஒன்று சந்தித்து உசாவும் போது பேச்சென்பதற்கு இடமிருப்பதில்லை.

வெகு நேரத்துக்குப்பின் பாபாவின் பாதங்களை தொழுதுவிட்டு அப்பெண் எழுந்து நடந்தபோது அவள் தன் வலது கரத்தை தன் அடிவயிற்றின் மீது பாதுகாப்பாக வைத்து கொண்டு நடந்தாள். அவள் தன் கர்பத்தில் ஒரு மகா ஞானியை சுமந்து கொண்டு செல்கிறாள் என்பது ஃபக்கீர்களுக்கு தெளிவாகப் புரிந்தது.

அப்பெண்ணுடைய சந்ததியில் முன்னூறு ஆண்டுகளுக்கு பிறகு சீரடி சாய்பாபா தோன்றி உலகம் புகழும் ரிஃபாயி ஃபக்கீராக விளங்கினார்.

*உயிரே உயிரே எங்குள்ளாய்*
*உள்அறையிலா வாசலிலா*
*தயிரை பாலை தருவாயா*
*தாய்போல் எனக்குள் மலர்வாயா*
*பயிர்நான் வயல்நீ நீர்பாயும்*
*வாய்கால் வழிநீ வளம்நானே*
*உயரே உயரே பறக்கின்றேன்*
*உன்நினை வாலே மனோண்மணியே!*

*என் உயிரானவளே மனோண்மணி எங்கு நீ ஒளிந்திருக்கிறாய் என்று தேடி அலைகிறேன் உன் நினைவால் உயர்ந்து உயர்ந்து பறக்கிறேன். வந்தென்னை காப்பாற்று.*

*தொட்டால் சிணுங்கி நானில்லை*
*தொடுநீ கடல்வான் என்எல்லை*
*விட்டு விலகிப் போனாயோ*
*வீதி ஓரத்தில் நான்குப்பை*
*முட்டாள் எனவே நீஎன்னை*
*முடித்தாலும் சரி கவலையில்லை*
*தட்டா தேஎனை காதலியே*
*தாயே பராபரி மனோண்மணியே!*

*நீ தொட்டு உசுப்பி உலகமயக்கத்திலிருந்து என்னை எழுப்ப முயன்றால் நான் சிணுங்கமாட்டேன். தொடு என் ஆன்மா வானளாவ விரிவடையும். ஆனால் என் உடலை மண்ணில் கிடத்திவிட்டு ஓடிவிடாதே என்னை முட்டாளாக நினைத்தாலும் சரிதான் என்னை ஏற்று முக்திபதம் தா மனோண்மணியே.*

## ஆக்ராவின் அற்புதம் ஃதீனே இலாஹி

மாமன்னர் அக்பரின் அரண்மனையில், மறைந்த மகான் முகம்மது கவுதுகுவாலீயரின் கலிஃபாவின் கலிஃபா, சர்வசமய சௌஜன்ய சபையில் இஸ்லாமும் சாந்தியும் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுகிறார், என்ற செய்தி ஆக்ரா நகாமெங்கும் தீ போல பரவியிருந்தது.

ஆக்ராவின் கோட்டை கட்டி முடிக்கப்பட்டு இரண்டாண்டு காலத்தில் கி.பி. 1582 ம் ஆண்டில் மாமன்னர் அக்பரின் சர்வசமய சபை திவானி காஸ் என்ற மாளிகையில் நடைபெற்றது.

இந்துமதம், பௌத்தமதம், ஜைனமதம், ஃபார்ஸிமதம், யூத மதம், கிறிஸ்துவ மதம், இஸ்லாமிய மதம் இவைகளிலுள்ள உட்பிரிவுகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் சாம்ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அழைத்து வரப்பட்டிருந்தன.

“பிஸ்மில்லாஹிர் ரஹ்மா நிர்ரஹீம்” என்று இறையருளை முன்னிறுத்தி ஃபார்சியும், அரபியும், சமஸ்கிருதமும், இந்தியும் கலந்து இந்தியாவின் தாய்மொழியாக உருவாக்கிக் கொண்டிந்த இந்துஸ்தானி மொழியில் பேசத் தொடங்கினார்கள் பாபா ஃபக்ருத்தீன்.

அரேபிய குதிரைகளின் குளம்போசையால் கிடுகிடுத்த ஆக்ரா நகரம் அம்மாமனிதரின் குரலோசையிலே கிடுகிடுக்கத் தொடங்கியது. பாபா தொடர்ந்து பேசினார்கள்.

“ஜலாலுத்தீன் முகம்மத் அக்பராகிய மாமன்னரே ! அனைத்து சமயங்களின் அறிவார்ந்த பிரதிநிதிகளே! அரசு பிரதிநிதிகளே! கூடியிருக்கின்ற நகர் வாழ் பெருமக்களே! உங்கள் அனைவருக்கும் என் ஸலாத்தினை! உங்கள் மீது சாந்தி பொழிக, என்று எனது வாழ்த்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மாநிர்ரஹீம் என்ற அற்புத சொற்றொடரை உச்சரித்து எந்த காரியத்தையும் தொடங்குவது இஸ்லாமிய மரபு. இந்த பிஸ்மில்லாவை இறைவன் தன் திருமறையாம் திருக்குர்ஆனில் குறிப்பிட்டிருக்கும் விஷயம் சுவாரஸ்யமானது.

பைத்துல் முகத்தஸின் பேரரசரான மதியூகி சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அரேபிய பாலைவனத்தின் தென்திசையிலுள்ள ஷீபா நாட்டின் பேரரசி பல்கீஸுக்கு இஸ்லாத்தின் நன்மார்க்கத்தில் வந்து இணைந்து கொள்ளுமாறு ஒரு முடங்கலை எழுதி அனுப்புகிறார்கள்.

அந்த முடங்கல் பிஸ்மில்லாவைக் கொண்டு தொடங்குவதாக திருக்குர்ஆன் கூறுகிறது. ஆனால் பேரரசி பல்கீஸ் பிஸ்மில்லாஹிர் ரஹ்மாநிர்ரஹீம் என்ற வாக்கியத்தைப் படித்ததுமே அதை எழுதிய மன்னர் மன்னர் சாலமோனின் மீது காதல் கொண்டு விடுகிறார்.

அந்த பிஸ்மியை கொண்டுதான் இறைவனின் திருகுர்ஆன் ஆரம்பிக்கபடுகிறது. பேரழகி பல்கீஸுக்கும் பேரறிஞர் சுலைமான் நபிக்கும் இடையில் காதல் திறவு கோளாகப் பயன்பட்ட பிஸ்மியை கொண்டுதான் இஸ்லாமிய சன்மார்க்கத்தின் மூலக்கிரந்தம் திருக்குர்ஆன் தொடங்குகிறது.

முப்பது பாகங்களையும், நூற்றிரு பத்திரெண்டு அத்தியாயங்களையும், ஆறு ஆயிரத்து அறுநூற்று அறுபத்துஆறு வசனங்களையும் கொண்ட அதியற்புதமான திருக்குர்ஆன் முழுமையும், அதன் ஆரம்ப பாடமான தோற்றுவாயான அல்ஹம்து சூராவிலே அடங்கிவிட்டதென்று கூறுவார்கள். அந்த அல்ஹம்து பிஸ்மில்லாவில் மறைந்து கிடப்பதாய் சொல்வார்கள்.

பெருமைக்குரிய வசனம் பிஸ்மில்லாவும் அதன் முதல் எழுத்து ஆகியப் ப்பேயில் அடங்கிவிடுகிறது. அந்த ப்பே என்ற எழுத்தும் கூட அதன் கீழ் உள்ள நுக்தா என்ற புள்ளியிலே புதைந்து விட்டது. ஆகவே நுக்தா என்று புள்ளிதான் எல்லாம் என்பது ஸூஃபிகளின் கூற்று. நானும் ஒரு ஸூஃபி.

அன்பர்களே நான் யாரென்பதை உங்களுக்கு அறிமுகப்படுத்தி கொள்வது என் கடமை. நான் வட புறமெங்கும் புகழ்பெற்று விளங்கிய ஞானமகான் முகம்மத் கவுது குவாலீரி அவர்களின் ஆத்மஞான கலிஃபா ஆகிய காதிர் ஒலி என்பாரின் பேரனும் கலிஃபாவும் ஆவேன்.

எனது பாட்டனாருக்கும் மரியாதைக்குரிய குருநாதர் முகம்மது கவுது குவாலிரி அவர்களின் கலிஃபாவுமான காதிர்ஒலி தென்னகத்தில் சோழமண்டல கடற்கரையில் தங்கி அருளாட்சி புரிந்து சில வருடங்களுக்கு முன் காலகதி அடைந்து போர்ச்சுகீஸியர்களின் பட்டணமெனுமம் நவுட்டப்பட்டணத்துக்கு அருகில் நாகூரின் கடற்கரையில் அமைதி கொண்டிலங்குகிறார்கள்.

இஸ்லாமிய சன்மார்க்கத்தின் மூலவரான முகம்மத் நபியின் பெயரையும் இஸ்லாமிய ஞானமார்க்கத்தின் மூலவரான கௌது முகியித்தீனின் திருநாமத்தையும் தனது பெயரில் கொண்ட மகான் முகம்மது கௌது அவர்களை இந்த நாடு நன்கு அறியும்.

மாமன்னர் ஜலாலுத்தின் முகம்மது அக்பருடைய தந்தை அரசர்கரசர் ஹூமாயூன் குருநாதர் குவாலீரி அவர்களிடம் ஞான தீட்சை பெற்றிருந்தார். மகானுடைய அடக்கவிடத்தை மன்னர் மன்னர் அக்பர்தான் அழகிய பேராலயமாக உருவாக்கியிருக்கிறார். அவருக்கு நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

மன்னர் அக்பர் உலகிலுள்ள மதங்களையெல்லாம் ஒருங்கிணைத்து அவைகளினூடே ஒளிந்து கிடக்கின்ற உண்மையை ஒருமைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருக்கிறாரே அதற்காக நாம் அவரைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

ஏனெனில் எந்த மதமானாலும் மார்க்கமானாலும் கால ஓட்டத்தில் அதன் மூல நோக்கத்திலிருந்து மாறுபட்டு நிற்பது தவிர்க்க முடியாததாக உள்ளது.

அப்படி மூலநோக்கம் மாறுபடும் போதுதான் மதங்களுக்கிடையில் பிரச்சினையும் சமுதாயங்களிடையே சச்சரவும் ஏற்படுகிறது. சாந்தியை நோக்கமாக கொண்டு தோன்றும் மதங்கள் சச்சரவுக்கு காரணமாகிவிடுவது விசித்திரமானது.

எந்த ஒரு மதமும் காலவீச்சில் மரணித்து விடுகிறது என்பதை மதஅறிஞர்கள் ஒப்புக் கொள்வதில்லை. இஸ்லாமிய மதத்தைப் பொறுத்தவரை அதன் மூலவரான எம் பெருமான் முகம்மது நபி (ஸல்) காலகதி அடைந்து ஐந்நூறு ஆண்டுகளில் ஒரு சம்பவம் நடக்கிறது.

ஈராக் நாட்டில் பாக்தாத் நகரத்தில் நபி பெருமானின் சந்ததியில் பிறந்த ஞான மகான் முகியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டவர்கள் தான் கடுந்தவம் புரிந்த கானகப் பாதையில் குற்றுயிரும் கொலையிருமாய் கிடக்கும் ஒரு வயோதிக மனிதனை காண்கிறார்கள்.

அம்மனிதன், மகானை விளித்து அழைத்து! முகியித்தீனே! என்னை கைகொடுத்து எழுப்பும்! என்று கூறுகிறார். அனத் தீனுன் அந்த முகியத்தீன் - நானே இஸ்லாமிய சன்மார்க்கமான தீன் ஆவேன், நீரே என்னை உயிர்ப்பிக்கும் முகியித்தீன் ஆவீர்! என்பது அம்முதியவர் தந்த விளக்கம்.

இப்படி ஒவ்வொரு மதமும் ஒரு காலகட்டத்தில் மரித்து மீண்டும் உயிர்ப்பிக்கப்படுகிறது. எனவே தான் நான் மதங்களுக்கிடையிலான சண்டையும் சச்சரவும் இறந்த பிணங்களுக்கிடையிலான சண்டை பேய்களுக்கிடையிலான சச்சரவு என்று கூறுகிறேன்.

மதத்தின் பெயரால் வாழ்வுக்கு எதிராக செல்லும் படி மக்களுக்கு போதிக்கப்படுகிறது. பெரும்பாலான மதங்களின் கோட்பாடுகள் மரணத்தையும் மரணத்தின் பின்னர் வரும் வாழ்க்கையையும் குறிக்கோளாகப் கொண்டுள்ளன. இந்த வாழ்வு முடிந்த பிறகுதான் சொர்க்கம் என்ற செய்தியிருக்கிறதே! அது மகத்தான கேளி கூத்து!

எனவே தான் இஸ்லாமிய சன்மார்க்கம் துறவு நிலையை வெகுவாகப் பாராட்டுவதில்லை. ஒரு சில மகான்கள் வாழ்க்கையில் இல்லறம் தேவையற்றதாக இருக்கலாம். ஆனால் துறவுதான் இறைவனை அடையும் பாதை என்று கூறினால் அதை இஸ்லாம் ஏற்பதில்லை.

நமக்கு கிடைத்துள்ள இந்த வாழ்க்கைதான் நமக்கு இறைவனின் வரப்பிரசாதம். கடவுள் ஆகிய அவன் உண்டென்பதற்கு நாமே தெளிவான அடையாளமாக இருக்கிறோம். ஒருவன் தன் வாழ்க்கையை நேசிப்பது தான் அவனது சாதனை அல்லது இறைவனை சென்றடையும் வழி.

வாழ்க்கையை முழுமையாக ஏற்றுக்கொள்வதுதான் ஒரு மனிதனுடைய உண்மையான மதமாகும். இந்த வாழ்க்கையின் உண்மையை நாம் புரிந்து கொள்ள விரும்பினால் இதை நாம் இதனுடைய எல்லாவிதமான அம்சங்களோடும் ஏற்று கொள்ளவேண்டும். வாழ்க்கையை வாழாது வெறுப்பவன் நிச்சயமாக மறுமை சுவர்க்கத்தில் கூட சந்தோஷமென்பதை அனுபவிக்க முடியாத பைத்தியக்காரனாகி விடுவான்.

வாழும் கலையைக் கற்றுக் கொடுப்பதுதான் மதம் என்றும் மார்க்கம் என்றும் நான் கூறவிரும்புகிறேன். மதம் என்பது வாழ்வுக்கு புறமுதுகு காட்டுவது அல்ல. அது வாழ்க்கையை நேருக்கு நேர் சந்திப்பதாகும். பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி நபி என்பதின் அர்த்தம் அவர்கள் இறைதுறவு பாதையையும் இல்லற உறவுப் பாதையையும் இணைத்துவிட்டார்கள் என்பதுதான்.

சாதாரண மனிதனின் அடிப்படை ஆசையை அவன் மனத்தின் உந்துதலை நாம் ஆராய்வோமானால் அது ஆண்டவனை நோக்கிதாகவோ மறுமையை நோக்கியதாகவோ இருக்காது. அந்த மனிதன் எந்த மதத்தை சார்ந்தவனாயிருந்தாலும் அல்லது மதத்தை வெறுக்கும் நாஸ்திகனாக இருந்தாலும் மனிதனின் அடிப்படை ஆசை தன்னுடைய இனத்தைப் பெருக்கும் காம இச்சையை அடிப்படையாக கொண்டிருப்பதை கவனியுங்கள்.

மனிதர்களை ஒதுக்கிவிட்டு தாவரங்களையும் பறவைகளையும் மிருகங்களையும் கவனியுங்கள். உயிரினம் ஒவ்வொன்றும் உற்பத்தி செயலின் கவனமாயிருப்பதை கண்டு கொள்வீர்கள். ஒரு செடியும் கொடியும் அதிலிருந்து ஒரு காயை கனியை வெளிப்படுத்தி ஒரு விதையை பூமியில் விழச்செய்யும் அதன் போராட்டம் உங்களுக்குப் புரியவில்லையா?

ஒரு பறவையும் மிருகமும் என்ன செய்கிறது. ஆசைகளின் மனமார்ந்த ஆசையெல்லாம் ஆணும் பெண்ணும் இணைந்து கொள்வதை நோக்கி ஓடுவதை நீங்கள் கவனிக்கவில்லையா? இயற்கையின் நாட்டமெல்லாம் இனப் பெருக்கத்தை முன்னோக்கியதாக இருக்கும்போது அதை அதிபயங்கரமான ஒரு செயலென்று உலகம் கற்பனை செய்வது அநாகரிகமானது.

மாமன்னர் ஜெலாலுத்தீன் அக்பர் ராஜபுத்ர பெண்ணான ஜோதிபாயைத் திருமணம் முடித்திருக்கிறார். அவர்களுக்கு மதம் என்பது ஒரு சுமுகமான ஐக்கிய நிலையை அடைந்துள்ளது. மதத்தின் வெளிப்படையான கோட்பாடுகளில் அவர்கள் இருவருமே முரண்பட்டு நிற்பதாக உங்களுக்கு தோன்றுகிறது.

ஜோதிபாய் அதிகாலை பொழுதில் பாயை விரித்து தொழுவதையும் அரசர் அக்பர் கிருஷ்ணரை புகழ்ந்து பாடப்படுவதை ஆனந்தமாக ரசிப்பதையும் அடிப்படை மதவாதிகள் புரிந்துகொள்ள முடிவதில்லை. அவர்கள் இதை புரிந்துகொள்ள முடியாததற்கு காரணம் தங்கள் மதத்தையே அவர்கள் புரிந்துகொள்ள முடியவில்லை என்பது தான்.

நீண்ட நெடுங்காலமாக பேராழியில் அலைகள் எழுந்து கரையில் மோதி உடைகின்றன. அலைகள் பொங்கி எழுவதையும் உடைந்து தாழ்வதையும் மீண்டும் மீண்டும் இது நிகழ்வதையும் பார்க்கிறோம். இந்த கடலலைகளில் காணப்படும் இந்த ஒய்வற்ற தன்மைதான் மனித வாழ்க்கையிலும் காணப்படுகிறது. எதையோ அடைய வேண்டுமென்ற தொடர் முயற்சியில் மனிதன் ஈடுபடுகிறான்.

ஆனால் மனிதர்கள் தாங்கள் கற்று கொண்ட விஷயங்களால் ஒரு இருண்ட தர்க்கரீதியான அறைக்குள் தங்களை சிறை வைத்து கொள்கிறார்கள். அதனால் அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடிவதில்லை. மனிதர்கள் கண்டிப்பு அதாவது இது இப்படித்தான் என்று முடிவெடுத்து விட்டதை உடைக்காதவரை ஞானத்தை அடையமுடியாது. மனிதன் காமத்தை அனுபவிக்கிறான். பிறகு அதை கெட்டது என்று கருதி விலக நினைக்கிறான். அவனால் முடிவதில்லை.

தன்னுள் இருக்கும் இன்பம் தேடும் காம உணர்வுகளை கடவுளை நோக்கி திருப்ப மனிதர்கள் கற்று கொள்ள வேண்டும். இந்த முயற்சி குருமுர்த்மானது. இது எல்லா மதங்களிலும் ஞானமார்க்கமென்று கூறப்படுகிறது ஞானமார்க்க மரபுகளை இஸ்லாத்தில் தரீக்கா என்று சொல்கிறார்கள்.

கீதை இந்துஸ்தானத்தின் சிறந்த ஞான நூல் இதை பலநூற்றாண்டுகளுக்கு முன்பே பாரசீக மொழியிலும் அராபிய மொழியிலும் முஸ்லிம்கள் மொழி பெயர்த்திருக்கிறார்கள். கீதையின் சாரமான நிஷ்காம்ய கர்மம் - ஆசையின்றி கர்மத்தில் ஈடுபடு என்பதை பிஸ்மில்லா என்ற வாக்கியம் செயல்படுத்துகிறது.

பிஸ்மில்லா என்று அல்லாவின் பெயரைச் சொல்லி ஒரு காரியத்தை துவங்குவோமேயானால் அது கடவுளாகிய அல்லாவுக்கு சமர்ப்பணம். அதன் பலாபலன்பற்றி ஆசைப்படாமல் செயலில் கவனமாக ஈடுபடு என்பது அதன் பொருள். இப்படி மதங்கள் ஒரே விஷயத்தை பல கோணங்களில் சொல்லும் போது மனிதர்கள் புத்தியின்றி பேதலிக்கிறார்கள்.

பிஸ்மில்லா என்பது காதலின் திறவுகோள் என்பதை என் சொற்பொழிவின் ஆரம்பத்தில் நான் சொன்னேன். மீண்டும் சொல்கிறேன் பிஸ்மில்லா என்பது பேரின்ப காதலின் திறவுகோளாகும். அகில பிரபஞ்சத்தையும் அடைய வளைந்து நிற்கும் ஏக ஜீவனை நேசிக்கும் திறவு கோள் தான் பிஸ்மில்லா.

பிஸ்மில்லாவிலுள்ள "ஸீம்" என்ற எழுத்து "ஸமா" என்கின்ற வானத்தை குறிக்கும் "லாம்" என்பது "அர்ளு" என்ற மண்ணை குறிக்கும் மீம் மாவு என்கிற நீரையும், ஹே ஹவா என்கிற காற்றையும் நூன் நார் என்கிற நெருப்பையும் குறிக்கும். இப்படி பஞ்ச பூதங்களையும் தனக்குள் அடக்கி கொண்டுள்ள பிஸ்மில்லாவில் "ஹய்" என்கிற உயிர் இருக்கிறது.

இதில் இருக்கின்ற "ரஹம்" என்ற சொல் கற்பப்பையை குறிக்கும். "ஆன்" என்பது இன்சான் ஆகிய மனிதனை குறிக்கும். மனிதன் அழியா நிலையை அடைய "மீம்" என்கிற நபிமார்களின் முஃஜிசாத்தை நம்பவேண்டும். பிஸ்மில்லாவின் முடிவிலுள்ள "மீம்" ஆகிய முஃஜிசாத்தை நம்புவோர் பிஸ்மில் முதலெழுத்தான பேக்குரிய "பகா" என்ற நிலை பேற்றை அடையலாம்.

இந்த விஷயத்தையெல்லாம் பிஸ்மியில் பார்த்துவிட்டுத்தான் பேரழகி பல்கீஸ் பேரரசர் சுலைமானின் மீது காதல் கொண்டார் இஸ்லாம் பிஸ்மியை சொல்லி ஏக ஜீவனாகிய இறைவனை நேசிக்க சொல்கிறது. இறைவனை கொண்டு தொடங்குகிறேன் என்பது பிஸ்மியின் வெளிப்பொருள். இறைவனை கொண்டுதான் எல்லாம் தொடங்கியிருக்கிறது, இப்போதும் தொடங்குகிறது, எப்போதும் தொடங்கும் என்பது உட்பொருள்.

இதே விஷயத்தை பைபிளும் கீதையும் மற்ற மதங்களின் வேதங்களும் வேறு வேறு வார்த்தைகளில் கூறுகின்றன. நாம் புரிந்து கொள்வதில் தான் எல்லாமே இருக்கிறது. புரிந்து கொள்ளுங்கள் இறைவனையும் இறைவன் படைத்த உலகத்தையும் நேசிக்கக் கற்று கொள்ளுங்கள். மதங்களை மக்கள் சமுதாயத்தைப் பிரிக்கும் சுவர்களாக ஆக்காதீர்கள்.

“அகிலமனைத்தும் ஆண்டவனுடைய குடும்பம் தன் குடும்பத்தினருக்கு உதவி செய்பவர்களை இறைவன் நேசிக்கிறான்” என்பது பெருமான் (ஸல்) அவர்களின் பொன்மொழி” என்று பாபா ஃபக்ருத்தீன் பேசிமுடித்ததும் மாமன்னர் அக்பர் தம் சிம்மாசனத்தில் எழுந்து நின்று “தீனே இலாஹி” என்று முழங்கினார்.

“நான் இந்த மாமனிதரின் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒப்புதலளிக்கிறேன்! நான் விரும்பும் சன்மார்க்கம் இது தான்! அன்பு தோழரும் எமது தந்தையர் ஹுமாயுனின் குருவான முகம்மது கவுது குவாலிரியின் பிரதிநிதியுமான பாபா ஃபக்ருத்தீனின் தீன் ஆகிய மார்க்கமே எனது “தீனே இலாஹி !” என்று ஆர்ப்பரித்தார்.

ஆக்ரா நகரின் அரச மாளிகைகளில் அதி அற்புத கட்டிடமாக விளங்கிய தீவானி காஸ் என்ற மன்னரின் அரண்மனை அறிஞர்கள் மற்றும் பொது மக்களின் கரகோஷத்தால் குலுங்கியது.

நெடுநெடு நெடுநெடு கொடியழகி
நிலவின் வண்ண முகத்தழகி
கடுகடு கடுகடு சொல்லழகி
கருணைப் பார்வை விழியழகி
தொடுதொடு தொடுதொடு என்றுமனம்
துரத்திடுதேநான் என்செய்வேன்
அடிமை எனக்குன் அருள்புரிவாய்
ஆன்ம ரூபமே மனோண்மணியே!

நெடுங்கொடியாகிய தரீக்காவின் சில்சிலா தொடரின் முடிவில் முகம்மதென்று நிலவுமுகமாய் தோன்றும் மனோண்மணியே, ஞான குருவின் கடுமையான சட்ட நிமிடங்களும் கருணை பார்வையும் உடையவளே உன்னை தொட்டு இன்புற என்மனம் ஏங்குகிறது அருள்புரிவாயா?

*உன்னை தானே நேசித்தேன்*
*உள்ளின் உள்ளாய் உறைந்தவளே*
*என்னை நானே நேசிக்க*
*எனக்குள் வந்த மோகினியே*
*அன்னை நீயா அறியேனே*
*ஆசை கிளியா அறியேனே*
*தன்னில் தானாய் வான்புவியாய்*
*ததும்பும் தெய்வ மனோண்மணியே!*

*என்னை நான் நேசிக்கும் இன்ப நிலைக்கு ஆதாரமாய் எனக்குள் மோகினியாய் வந்த மனோண்மணியே நீ அன்னையா எனக்கு ஆசை காதலியா அறியேனே!*

## டெல்லிமாநகரில் பாபாவின் நல்லருள்

இந்திரபிரஸ்தம் என்று புராணங்கள் புகழும் டெல்லி மாநகரில் தோழர்களான ஃபக்கீர்களுடன் வந்தடைந்தார்கள் பாபா. பல்லாண்டு காலமாக பரந்த பாரத பூமியின் ஆளும் தலைநகரமாக அறியப்பட்டிருந்த டெல்லி மாநகரம் இந்திய முஸ்லிம்களுக்கும் கலாச்சார தலைநகரமாகவும் அமைந்திருந்தது.

யமுனை நதிக்கரையில் அமைந்த மாநகரிலிருந்துதான் முஸ்லிம்களின் உணவான சுவைமிகுந்த பிரியாணி உணவும், தைத்த ஆடைகளான ஷேர்வானியும் கமீஸ¯ம், பெண்களின் ஸல்வார் கமீஸ¯ம் இந்துஸ்தானம் முழுமைக்கும் சென்றடைந்தது.

இஸ்லாத்தின் தெய்வக் கொள்கையான ஏகத்துவமும், அதன் ஷரீயத்தின் சட்டத்திட்ட நூல்களும் மட்டுமின்றி ஞான மரபுகளின் பட்டணமாகவும் டெல்லி விளங்கியது.

ஆட்சிபீடங்களில் முஸ்லிம் அரசர்களும் ஆன்மீக தோப்புகளில் ஸூஃபி ஞானிகளும் அமர்ந்து இந்தியாவை ஆட்சி புரிந்தனர். பாபா ஃபக்ருத்தீன் ஃபக்கீர்களோடு அந்நகரத்தை அடைந்த போது தனது தலை நகரை டெல்லிக்கு மாற்றிக் கொள்ளலாமா என்று மாமன்னர் அக்பர் ஆலோசித்துக் கொண்டிருந்தார்.

டெல்லி மாநகரில் அடங்கியிலங்கும் ஹஜ்ரத் நிஜாமுதீன் வலியுல்லாவின் பரந்த தர்பாரில் பாபா தங்கிகொண்டார்கள். இந்துஸ்தானத்தின் குத்பு ஆகிய ஹாஜா முயினுத்தீன் ஷிஸ்தியின் கலிபா குத்புதீன் பக்தியாரே காக்கியும், அவரது சீடர்களும் அடங்கியிருந்த நகரில் பாபாவின் பிரவேசம் வெகுவாக அறிஞர்களால் வரவேற்கப்பட்டது.

டெல்லி நகரம் ஸுரி, துக்லகாபாத், ஜகரன், ஃபனாஹ், என்று நான்கு நகரங்களாக அமைந்திருந்தது. பழைய நகரில் மண் மதில் அமைந்திருந்தது. மதிலில் தானிய கிடங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

நகரைச் சுற்றி இருபத்தெட்டு வாயில்கள் இருந்தன. பதாயூன் வாயில், மாண்டு வாயில், குல் தர்வாசா, கஸ்னா வாயில், பஜால்ஸாவாயில் ஆகியவை முக்கியமானவை. நகரில் இரண்டு நீர் தடாகங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

குவாலியரில் வாழ்ந்து மறைந்த மகான் முகம்மது கவுது குவாலிரி நாயகத்தின் கலிபா இவர் என்று கேள்விப்பட்ட பொது மக்களும் அறிஞர் பெருமக்களும் பாபாவிடம் முரீது என்னும் ஞான தீட்சை பெறுவதற்காக வந்து குழுமினர். அன்றாடமும் காதிரி ஷிஸ்தி ஷத்தாரி நக்ஷபந்தி தபக்காத்தி சுகரவர்தி ஆகிய சிறப்புமிக்க தரிக்காக்களில் ஞான தீட்சை வழங்கி பாபா காஜா நிஜாமுதீனின் தலத்தில் பேரும் புகழும் விளங்க மூன்றாண்டு காலம் ஆன்மீக ஆட்சி புரிந்தார்கள்.

அந்நகரில் தங்கியிருந்த பாபாவிடம் குரு பீடத்தின் உன்னதமான பண்புகளை மக்கள் கண்டறிந்தார்கள். குரு என்பவர் எப்படி இருப்பார் என்பதற்கு தெளிவான விளக்கமாக அவர்கள் காட்சியளித்தார்கள். சிலமாத காலம் மக்களிடமிருந்து கை நீட்டி காணிக்கை வாங்காதிருந்த பாபா, பின்னர் தம்மை தரிசிக்க வந்த முஸ்லிம்கள் இந்துக்களிடமிருந்து தட்சணை கேட்டு வாங்கும் பழக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

பாபாவின் பெருமையும் அருமையும் வெளியுலகிலும் பரவவே படித்தவர்களும் பதவியிலிருந்தவர்களும் உயர் குடியில் பிறந்தவர்களும் டெல்லி நோக்கி புனித யாத்திரை வந்தார்கள். பணக்கார பக்தர்களிடமிருந்து பாபா தாராளமாகவே பணம் கேட்டு வாங்கினார்கள்.

பாபா அவர்களிடமிருந்து அற்புதங்களை நாடி வந்தவர்களின் நாட்டங்கள் நிறைவேறின. தேடி வந்தவர்களின் வேண்டுதல்கள் வெகு சீக்கிரத்தில் கண்முன் தோன்றின. நோயாளிகள் குணமடைந்தனர். வறுமையில் சிக்கியவர்கள் வளம் பெற்றனர்.

வாழ்க்கையை இறை தேட்டத்திற்காக அற்பணித்துவிட்ட தோழர்களான ஃபக்கீர்கள் பாபாவின் ஆன்மீக ஆவேசத்தை கண்டு மௌனித்தார்கள். காதிர் ஒலி நாதரின் காரண வாரிசான பேரனார் புரியும் கராமத்துக்களை கண்டு வியந்தனர்.

பாபா தன்னிடம் வசூலாகும் பணத்தை ஃபக்கீர்களுக்கு மட்டும் இன்றி வெளியிலிருந்து வரும் ஏழை எளியோருக்கும் வினியோகிக்க செய்தார்கள். அன்றாடம் எவ்வளவு பெருந்தொகை வந்தாலும் இரவு படுக்கைக்கு செல்லும் போது பாபா வெறுங்கையோடு தான் படுத்து உறங்குவார்கள்.

பார்க்கின்ற நேரங்களில் பாபா காணிக்கை கேட்கின்றார் என்று பயந்த சிலர் அவர்களின் சன்னிதானத்திற்கு வராமல் பின் வாங்கினர். அப்படி பின் வாங்குவாதால் உண்டாகும் ஆபத்தை புரிந்து கொண்டு திரும்பி வந்து அடைக்கலம் பெற்றனர்.

“நான் காணிக்கைகளை எல்லோரிடமும் இருந்து கேட்டு பெற்றுக்கொள்வதில்லை. யாரிடம் கேட்டு வாங்கவேண்டும் என்பதற்கு இறைவனிடம் இருந்து எனக்கு உதிப்பு ஏற்படுத்தப்படுகிறது. அவர்களிடம் மட்டும் கேட்டு வாங்குகிறேன்” இது பாபாவின் வார்த்தை. பாபாவின் விளக்கங்களை எல்லாம் இறையருளும் ஆசியும் பெற்ற சீடர்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடிந்தது.

பாபாவுக்கு தம் சீடகோடிகளின் எதிர்காலம் கண்ணாடியில் காண்பது போல் தெளிவாக தெரிந்திருந்தது. சீடர்களுக்கு விதி வசத்தால் நிகழப்போகும் நல்லவை கெட்டவைகளை அவர் அறிந்ததால் எதுவும் விளக்கம் கூறாமல் சீடர்களை நீ இதை செய் அதை செய்யாதே என்று ஏவி வந்தார்கள்.

சாதாரணமாக பாபாவைத் தேடிவரும் பக்தர்கள் அவர்களிடம் விடைபெற்ற பின்னரே வெளியில் செல்வார்கள். சிலருக்கு உத்தரவு கொடுப்பார்கள் சிலரை நாளைக்கு போகலாம் என்பார்கள். சிலரிடமோ இப்போது என்ன அவசரம் உன்னை எப்போது அனுப்புவது என்று எனக்குத் தெரியும் அதுவரை பொறு என்று உபதேசிப்பார்கள்.

பாபாவின் பேச்சைத் தட்டிக்கொண்டு வெளியில் செல்பவர்கள் சோதனைக்கு ஆளாகி திரும்பிவருவார்கள். இந்துக்களில் பலர் பாபாவை நேரில் பார்த்துவிட்டு "ஹரேராமா ஹரேகிருஷ்ணா" என்று உச்சரித்துக்கொண்டு காலில் விழுவார்கள். சிலர் "ராமராமா" என்று ஆனந்தகண்ணீர் பொங்க ஜெபித்துக்கொண்டு நிற்பார்கள்.

பாபா டெல்லியிலிருந்து புறப்படும் நாள் வந்தது. ஏராளமான சீடர்கள் மனைவி மக்களுடனும் குடும்பத்தினருடனும் நிஜாமுத்தீன் ஒலியுல்லாவின் தர்பாரில் வந்து குழுமியிருந்தனர். பாபா அவர்களுக்கு ஆற்றிய உபதேசம் உருக்கமானது.

"மக்களே நான் உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். என் உடல் உங்களிடமிருந்து விலகிச் செல்கிறது. ஆனால் என் மனம் உங்களோடு தங்கியிருக்கிறது. என் ஆன்மாவின் பார்வை உங்களை தரிசித்துக்கொண்டே இருக்கிறது.

"ஒரு குருவின் நிலை ஆமை, மீன், பறவைப் போல என்பார்கள். பறவை முட்டையிட்டு அடைகாத்து குஞ்சு பொறிக்கும் வரை காவல் புரியும். மீன் முட்டையிட்டு அந்த இடத்தை அனுதினமும் வந்து பார்த்து பாதுகாக்கும். ஆமையோ தான் இட்ட முட்டைகள் குஞ்சு பொறிக்கும் வரை எங்கோ வெகு தூரத்தில் இருந்து தன் கவனத்தில் வைத்திருக்கும்.

"என் இனிய மக்களே உங்களை நான் எங்கிருந்தாலும் என் கவனத்தில் வைத்திருப்பேன். உங்களுக்கு நான் செய்திருக்கும் போதனைகளிலிருந்து விலகாதீர்கள். தொழுகை நோன்பு முதலிய கடமைகளை செய்வதோடு தரீக்காவின் சில்சிலாவை அனுதினமும் ஓதி வாருங்கள்.

"சில்சிலா ஆகிய ஞானப் பரம்பரைத் தொடரின் பாராயனம் உங்கள் எல்லா விதமான சிரமங்களிலிருந்தும் உங்களை காப்பாற்றும். எனது ஏவல்களை இறைவனின் உத்தரவாக எண்ணி செயல்படுங்கள். நான் தடுப்பதை அல்லாவிடமிருந்து நான் தடுக்கிறேன் என்பதில் உறுதியாய் இருங்கள்.

"ஒரு குருவின் ஏவல் வில க்கல்களுக்கு தலை சாய்த்து வாழும் நல்அடியான் நிச்சயமாக பனா ஃபிஷெய்கு என்ற நிலை அடைந்து பெருமானார் (ஸல்) அவர்களின் சன்னிதானத்தில் கொண்டு போய் நிறுத்தப்பட்டு ஜெயம் பெறுவான்."

நூற்றுக் கணக்கான தோழர்கள் "அல்லாஹூ அக்பர்!" என்று முழக்கமிட பாபா தன் ஃபக்கீர்களுடன் ஆப்கானிஸ்தானின் தலைநகரமான காபூலை நோக்கி புறப்பட்டார்கள்.

*வாழ்ந்தோம் ஜென்ம ஜென்மங்கள்*
*வரைந்தோம் காதல் கோலங்கள்*
*சாந்தி நீஎன நினைக்கின்றேன்*
*சந்தேகம் உனக்கு என்கின்றாய்*
*காந்தம் நீநான் இரும்பென்று*
*கடவுள் படைத்தான் மாதவியே*
*நீந்தி பாவக்கடல் தாண்டி*
*நித்தியம் பெறஅருள் மனோண்மணியே!*

*எத்தனை ஜென்மங்களாய் பிறப்பெடுத்து உன்னோடு வாழ்கிறேன். நீயே சாந்தி என்று நானிருக்க உலகமெனும் சந்தேக திரையில் சிக்கி கிடப்பவன் என நினைக்கிறாயே முறையா? நான் சக்தியில்லாத இரும்பு உன் காந்தம் என்மீது பாய்ந்தால்தான் நான் நித்திய ஜீவிதம் பெறுவேன் மனோண்மணியே!*

*நினைத்தால் நேரில் நிற்கின்றாய்*
*மறந்தால் கனவில் வருகின்றாய்*
*சினந்தால் மறைந்து சிரிக்கின்றாய்*
*சிரித்தால் கோபம் கொள்கின்றாய்*
*மணந்து கொள்ள வழியில்லை*
*மறந்து விலக தெம்பில்லை*
*பணிந்து கிடக்கின் றேனம்மா*
*பரிவு கொள்வாய் மனோண்மணியே!*

*நினைத்தால் நேரில் வந்துவிடுகிறாய் மறந்தால் கனவில் வந்து தோன்றுகிறாய். எனக்கு கோபம் வந்தால் நகைக்கிறாய். நான் நகைத்தாலோ கோபப்படுகிறாய். எதிரும் புதிருமாய் நிற்கும் உன்னை மணந்து கொள்ளலாமென்றால் நீ மனிதப் பெண்ணல்ல. மறந்து போகவும் வழியில்லை. பணிந்துவிட்டேன் பரிவுகாட்டு மனோண்மணியே!*

## பொற்கோயிலில் புகுந்த பாபா நாயகம்

இஸ்லாமிய ஞானிகளான சூஃபிகள், இந்தியாவில் வாழ்ந்த மக்கள் கூட்டத்திற்கு தங்கள் உடல், பொருள், ஆவியால் சேவை செய்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள், காதிரிய்யா க்ஷிஸ்தியா, நக்ஷபந்தியா, சுஹ்ரவர்தியா, மதாரியா, கலந்தரியா, ஷத்தாரியா ஆகிய ஞான வழிகளைப் பின்பற்றியவர்கள் ஆவார்கள்.

சூஃபிகளுடைய கான்கா என்னும் மடங்கள், தியானப் பயிற்சி மன்றங்களாக விளங்கின, நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு வந்து கூடி ஞான தீட்சை பெறுவார்கள், திக்று மஜ்லீஸ் நடத்துவார்கள், அங்கு வருவோர்க்கெல்லாம் உணவும் உறைவிடமும் இலவசமாக தரப்பட்டன.

தன்னலமற்ற தியாகிகளான சூஃபிகளின் முயற்சியால் மக்களின் உள்ளும் புறமும் சுத்திகரிக்கப்பட்டு இறைநேசப் பாதையில் முன்னேறினார்கள். மேலும் மன்னர்களையும் சர்வாதிகாரிகளையும் சூஃபிகள் மதிக்கமாட்டார்கள். அரசர்களின் பேரவைக்கு செல்லவும் மாட்டார்கள். மன்னர்களின் உதவியையும் பெறமாட்டார்கள். அச்சமின்றி அரசர்களின் குற்றங்களை எடுத்துரைப்பார்கள். ஞானமும் கல்வியும் சூஃபிகளால் பிரசாரம் செய்யப்பட்டன.

அக்கால சூழ்நிலையில் இந்து-முஸ்லிம்களுக்கிடையே ஒற்றுமையை உண்டாக்க கபீர்தாசராலும் குருநானக்காலும் தோற்றுவிக்கப்பட்ட சீக்கிய மதம் மிக வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது.

*“குருமுகிநாதம் குருமுகி வேதம்*
*குருவின் சொல்லே இசையின் நாதம்*
*குருவின் சொல்லே இறைவன் வேதம்”* என்று எங்கும் பேசப்பட்டது.

குருவின் சொல்லுடன் சீடன் ஐக்கியப்பட்டு வாழும்போது இறைதரிசனம் அவனுக்கு சித்தியாகிறது என்ற சீக்கிய மதக் கொள்கையாலும் ஆதிகிரந்த் என்ற நூலில் இந்து ஞானிகளின் பாடல்களோடு இஸ்லாமிய மெய்ஞானப் பாடல்களும் இணைந்து தொகுக்கப்பட்டன.

ஒரே கடவுள் கொள்கையினைக் கொண்ட இஸ்லாமிய மார்க்கத்தின் மீது குருநானக் ஆர்வம் கொண்டிருந்தார். ஏகமாகிய இறைவன் அன்பானவன். நேர்மையானவன் உருவமற்றவன் பிரபஞ்சத்தை உற்பத்திசெய்தவன் அன்பாலும் அறவழியாலும் வழிபாடு பெற விரும்புபவன் ஆகிய இவை அடங்கிய கடவுள் கொள்கையை குருநானக் நிர்மாணம் செய்தார்.

*சூரியனும் சந்திரனும் இறைவா உன்விளக்குகள்*
*ஆகாயமோ உன் தூபக்கிண்ணி*
*தூபக் கிண்ணியில் பதித்த முத்துக்களே விண் மீன்கள்*
*சந்தனத்தின் வாசனை உனது நறுமணம்*
*காற்றே உனது விசிறி காடுகள் உமது பூக்கள்*

ஓ ஒளியின் சொருபமே இறைவா! என்று குருநானக் பாடினார். குருநானக்கின் வழிவந்த சீடர்களும் பிரதிநிதிகளான குருமார்களும் அவரைப் பின்பற்றி இஸ்லாத்தை நேசித்தனர். இந்துமதத்தின் உன்னத தத்துவங்களையும் மதித்தனர்.

குருநானக்கை அடுத்து குரு அங்கத்து, குரு அமர்தாஸ், குரு ராம்தாஸ் மற்றும் குரு அர்ஜுன் ஆகியோர், பிரபலமாக விளங்கினர். குருஅர்ஜுன் அமிர்தசரஸ் நகரில் புனித குளத்தையும் பொற்கோவிலையும் கட்டுவதற்கு அடிகோளினார். மேலும் அவர் ஆதிகிரந்த் என்ற சீக்கியர்களின் புனிதநூலையும் தொகுத்தார்.

குரு அர்ஜீன் அருளாட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் அமிர்தசரஸ் நகருக்கு பாபா ஃபக்ருத்தீன் தமது தோழர்களான ஃபக்கீர்களுடன் வந்து நுழைந்தார்கள் .

பாபா ஃபக்ருத்தீனின் வருகையை மன உதிப்பால் அறிந்த குரு அர்ஜுனும் அவர்களை வரவேற்பதற்காக நகரின் எல்லைக்கு சென்றார். குருத்வாராவில் விருந்தினர்களாக தங்குமாறு அழைப்பு விடுத்தார். பாபா நாயகமவர்களிடம் தன் மனைவியை அனுப்பி பிள்ளைவரம் கோரிடச் செய்தார். குரு அர்ஜுன் சிங்கின் மனைவி ஏராளமானப் பரிசு பொருட்களோடு சென்றபோது அவைகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்ட பாபா, பின்னர் அப்புனிதவதி பணிவுடன் வந்து நின்றபோது பிரார்த்தனை புரிந்தார்கள்.

பாபா ஃபக்ருத்தீன் நாயகத்தின் துஆவினால் குரு அர்ஜுன் சிங்கின் மனைவி ஈன்ற ஆண்குழந்தை வளர்ந்து, குருஹர் கோவிந்த் என்ற பெயருடன் பிரபலமடைந்து, சீக்கிய அரசாங்கத்தை அமிருதசரஸ் நகரத்தில் நிருவினார். சீக்கிய சமுதாயத்தை வீரமும் விவேகமும் நிறைந்த சமுதாயமாக மாற்றினார்.

ஞான குருமார்களின் சிறப்பை உயர்த்திக்காட்டும் சீக்கியமதம் தழைத்தோங்கி வளர்ந்தது.

*நங்கை நீஎன் னவளல்ல*
*நல்ல புருஷன் நானல்ல*
*கங்கை நதிதான் நீஎனக்கு*
*கள்ளப் புருஷன் நானுனக்கு*
*இங்கு இறைவன் செய்தவிதி*
*ஏற்று அமைதி கொள்கின்றேன்*
*எங்கும் நிறைந்து எனக்குள்ளும்*
*இருந்தாய் வாழி மனோண்மணியே!*

*எல்லா மனிதர்களுக்குள்ளும் இருக்கும் ஆன்மாவாகிய மனோண்மணியே உன்னை நான் என்னுடையவள் என்று எப்படி சொல்வது கள்ளப் புருஷனைப் போல என்னுடன் இரகசியமாய் பழகுகிறாய். மஜ்துாபுகளான இறை காதலர்களுக்கு இது இறைவன் செய்த விதி நீ! வாழ்க தாயே!*

*காட்டுத் தீபோல் எரிகின்றாய்*
*காதல் கொள்ளி வைக்கின்றாய்*
*வீட்டுக் குள்ளே இருக்கின்றாய்*
*வீதியில் அலைய விடுகின்றாய்*
*ஆட்டு கறியை சமைக்கின்றாய்*
*அடிக்கடி விருந்து வைக்கின்றாய்*
*மாட்டு கன்று போலென்னை*
*மதி மடிதா மனோண்மணியே*

*கல்பு என்ற மனவீட்டுக்குள் இருந்து கொண்டு உலகம் என்ற வீதியில் என்னை அலையவிடுகிறாய். ஐம்புலன் இன்பம் என்ற ஆட்டுக்கறி சமைத்து அன்றாடம் விருந்து வைத்து ஏமாற்றுகிறாய். உன் நினைவோ என்னில் காட்டுத்தீபோல் எரிகிறது! மாடுதன் கன்றை பாசமாக அணைப்பதுபோல் என்மீது பரிவு கொள்தாயே மனோண்மணியே!*

## குவாலீயர் குதூகலம்

குவாலியர் கோட்டையில் மாமன்னர் அக்பரால் எழுப்பப்பட்ட ஷெய்கு ஷாஹ் செய்யிது முகம்மது கவுது குவாலிரி நாயகத்தின் நினைவுப் பேராலயமும் அதனைசுற்றி உருவாக்கப்பட்டிருந்த பூந்தோட்டமும் கண்கொள்ளா காட்சியாக வியாபித்திருந்தது.

பேராவலுடன் தர்பாருக்குள் தோழர்களான நாற்பத்து நான்கு ஃபக்கீர்களுடன் நுழைந்த பாபா நாயகம் கபுர் சரீஃபின் காலடிகளில் நின்று உளமுருகப் பிரார்த்தித்தார்கள்.

*நவ்விர் கல்பி யாமததி*
*ஸத்திர் அய்பி யாஸனதி*
*கஸப் குரபி யாஅமதி*
*அமுகம்மது கவுது குவாலீரி*

என்று பாபா நாயகம் உதடுகளை அசைத்து தன் உள்ளத்தை குருபிரானின் பாதகமலங்களில் சமர்ப்பித்து "அஸ்ஸலாமு அலைக்கும் யா ஸையிதி ஷைகி வஸத்ரஸ்ஸாதிரி" என்று உருகிய நேரம்,

“அலைக்குமுஸ்ஸலாம் யா ஜத்துல் காதிரி” என்று மக் பரவிலிருந்து ஒலித்த பதில் சலாம் அங்கிருந்து பொங்கி எழுந்து தென்றலாய் படர்ந்த சந்தண மணமும் ஃபக்கீர்களையும் குழுமியிருந்த பக்தகோடிகளையும் அதிசயத்தில் ஆழ்த்தியது.

ஒரு மாத காலம் நகரில் தங்கி தமது பாட்டனார் காதிர் ஒலி நாயகம் அமர்ந்து உன்னத மெய்ஞ்ஞானப் பயிற்சி பெற்ற இடங்களிலும், சுற்றி திரிந்த இடங்களிலும் அமர்ந்து தியானம் புரிந்து இன்புற்றார்கள் பாபா நாயகம்.

ஃபக்கீர்களிடமிருந்து அம்மாமனிதர் யார் என்பதை அறிந்து கொண்ட மக்கள், இந்துக்கள் முஸ்லிம்கள் ஜைனர்கள் ஆகியோர், மிகுந்த மரியாதை செலுத்தி அவர்கள் தங்கியிருந்த நாட்களில் வீடு தோறும் விருந்துக்கு அழைத்து கவுரவித்தனர்.

அது ரஜப் மாதம் மிஃகுராஜ் நள்ளிரவில் ஃபக்கீர்களுடன் பேராலயத்தினுள் அமர்ந்து ஞானமகான் பாபா நாயகம் சொற்பொழிவாற்றினார்கள்.

“அருமை தோழர்களே பெனுகொண்டாவில் ஸையிதினா பாபா பஃக்ருத்தீன் நாயகத்தின் சன்னிதானத்திலிருந்து நாம் புறப்பட்டு ஆண்டுகள் சில கழிந்துவிட்டன, குல்பர்காவில் டெல்லியிலும் அமிர்தசரஸிலுமாக நாம் பல்வேறு ஆன்மீக அற்புதங்களை தரிசித்து சங்கைக்குரிய நம்முடைய சற்குரு நாதர் சன்னிதானத்துக்கு வந்தடைந்திருக்கிறோம்.

மகான் முகம்மது கவுது குவாலிரி அவர்களின் பூத உடல் மறைந்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் அவர்களது புகழுடல் மறையாதிருப்பதை வட நாடு முழுவதும் நீங்கள் தரிசித்து வந்தீர்கள்.

எமது பாட்டனார் கருணை கடல் காதிர் ஒலி நாயகத்தின் வாசலில் வந்து நின்று, எந்த ஒரு மனிதனும் “தங்களுடைய ஷெய்கு நாயகம் முகம்மது கவுது குவாலிரி அவர்களின் முகத்துக்காக எனக்கு உதவி செய்யுங்கள்” என்று கேட்பானேயானால் காதிர் ஒலியின் கற்பக்கிருக்கத்தின் கதவுகள் உடனடியாகத் திறந்துவிடும். அங்கிருந்து கற்பகவிருட்சத்தின் காற்று அந்த அடியான் மீது வசந்த தென்றலாய் வந்து வீசத் துவங்கும்.

எமது பாட்டனார் தமது குருமகானின் மீது கொண்டிருந்த பேரானந்த காதலின் தன்மை இத்தகையது. அம்மகானும் தமது சீடரின் மீது கொண்ட பிரியம் அளப்பரியது. உலகத்தில் எந்த ஒரு குருமகானும் தன் சீடரை புகழாத அளவுக்கு அவர்கள் தமது சீடரை புகழ்ந்திருக்கிறார்கள்.

எனது இனிய தோழர்களே! இன்றைய தினம் நான் ஜதும் என்னும் ஆன்ம ஆவேசம கொண்ட நிலையில் இருக்கிறேன். எம்பெருமான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழி தன்னை அறிவது கடமை தன் நாயனை அறிவது நபிவழி வாக்கியத்தை உடைத்துப் பேசப் போகிறேன்.

தன்னை அறிந்தவனுக்கு தன் வலிமை இன்னதென்பது எளிதில் விளங்கும். அதே நிலையில் மிகவும் எளிதாக அந்த மனிதன்தன் இறைவனைக் கண்டு பிடித்துவிடுவான்.

மஅரிபா என்னும் மெய்ஞ்ஞானமானது தன்னுடைய உடலமைப்பின் ஐம் பூதங்களையும் ஆராய்ந்தறிவது. அதில் தோன்றும் ஆன்மாவெனும் பூரணத்தையும் அறிந்துகொள்வதாகும்.

இந்த தலைவன் இறைவன் ஆண்டவன் என்பதெல்லாம் உலகிலும் பிரபஞ்சத்திலும் ஏகமயமாக நின்று செயல்பட்டு வரும் நாமென்னும் நமக்குள் இருக்கும் நினைவு மட்டுமேதான்.

நினைவு என்னுடையது தானே அது எப்படி இறைவனின் பண்பு என்று கேட்கலாம். ஒருவன் பேசிக் கொண்டேயிருக்கிறான். அப்படி பேசிக் கொண்டிருக்கம் போது திடீரென்று படுத்துறங்க நாடுகிறான். அந்த நாட்டமே நினைவு.

அந்த நாடடமாகியது அந்த மனிதனை நித்திரையில் ஆழ்த்துகிறது அந்த மனிதனையும் அவன் உடலாகிய பஞ்சபூதங்களையும் தூங்க வைத்துவிட்டு தான் தூங்காமல் அசைவு ஆட்டமின்றி நிற்கிறது. பிறகு அவனை எழுப்பிவிடுகிறது.

இந்த உடல் உறக்கத்தில் ஆழ்வதுபோல மரணத்தில் வீழும் போது அந்த நாட்டமாகிய நினைவு, உடலை விட்டுவிட்டு அறிவு என்ற வாகனத்தில் அந்தரமாகப் பாய்ந்து விடுகிறது. அப்பால் அந்த நாட்டம் தன் ஆசையின் வண்ணத்தில் புதிய உயிர்கோலத்தை உண்டாக்குகிறது.

இந்த மெய் அறிவை அறிந்து கொள்வது பற்றித்தான் முன்னோர்கள்,

*அறிவை அறிந்தவன் ஆயிரத்திலொருவன்*
*அருளை அறிந்தவன் இலட்சத்திலொருவன்*
*குருவை அறிந்தவன் கோடியிலொருவன்*
*கருவை அறிந்தவனை காண்பதை அரிது*

என்று கூறியுள்ளார்கள்.

உடலாகிய ஜடலத்தை மறந்துவிட்டு நாட்டமாகிய வல்லமை பொருளுடன் சேர்ந்து கலந்திருப்பது தான் தவம். ஐந்து புலன் வாயில்களையும் அடைத்துவிட்டு அதாவது உலக சம்பந்தமான எல்லா எண்ணங்களையும் ஒழித்து, தனித்தும் பசித்தும் விழித்தும் இருப்பது இதன் விளக்கம்.

தினந்தோறும் ஒரு சாம நேரம் இவ்வாறு தனிமையில் அமர்ந்து, தாமரை என்கின்ற இதய கமலத்தின் நடுவில், அல்லாஹு என்ற எண்ணத்தை உள்மூச்சாகிய பூரகத்தில் நிலைபடுத்தி ரேசகத்தால் அல்லா என்று வெளியில் விடவேண்டும்.

இறைவனை நாடி உலகை துறந்து விட்ட ஃபக்கீர்களாகிய உங்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமே என்றாலும் நான் தெளிவுப்படுத்துகிறேன். இந்த தவநியில் உலக கவலைகள் குறுக்கிட்டால் பயனின்றி போகும் என்பதால்தான் துறவு வாழ்க்கையை மகத்துகள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

இவ்வாறு தான் என்கின்ற எண்ணத்தை ஃபனா என்ற நாஸ்தியாக்கி, நீ இல்லாமலாகி நாட்டம் என்கின்ற நினைவில் கலந்து விரவி விடும் போது, தன்னாட்டமென்னும் பரிபூரணானந்த பொருள் வெளியாகும். அதாவது காபகௌஸைன், அருஷேமுஅல்லா என்று சொல்லப்பட்ட கண்ணின் உள்பார்வையில் ருஹுல் குதுஸி என்னும் ஜோதி, ஒளிவான ஒரு விளக்குச் சுடர்போல் வெள்ளொளியாக வெளியாகும்.

இதில் கவனமாக இருந்து வந்தால் மூக்குத் தண்டிற்கு நேர்மேலாக அந்த ஒளி பளிச் பளிச்சென்று வெளிப்படும். அந்த ஒளியை தரிசிக்கும் நாட்களில் ஒருவித மயக்கமேற்படும். இதை உருஜ்நூரஸுல் என்று சொல்வார்கள். இது முற்றிய நிலையில் ஆன்மா என்னும் ருஹு அதாவது கமல முகம்மதியாவாகிய தன் நாட்டம் ஒரு வாலிப ஸ்திரியின் கோலத்தில் வெளியாகும்.

இதனைத்தான் எம்பெருமான் (ஸல்) அவர்கள் "மிஃகுராஜ் இரவில் அருஷில் என் இறைவனை அழகிய பெண் கோலத்தில் கண்டேன்" என்று விவரித்திருக்கிறார்கள்.

வெளியான அப்பெண்தான் மனிதனின் சகல ஆட்டம் அசைவுகளுக்கும் காரணமான நாட்டமாக இருக்கிறது. அப்பெண்ணைத்தான் வாலை மனோண்மணி என்கிறார்கள். அவள் உன்னுடன் காமலீலைகளில் ஈடுபட்டு தன் இருதனமென்னும் பாலமிர்தத்தை ஊட்டலாம்.

அவள் ஊட்டும் அமுதம் தான் காயகற்பமென்று நபிபெருமான் (ஸல்) அலீ நாயகம் அவர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள். இந்த அமுதத்தை அருந்தியவர்களுக்கு மரணமென்பது கிடையாது. அழியா நிலைபெற்ற இறைநேசர் பதவியை அவர்கள் பெறுகிறார்கள்.

*ஆமப்பா அவள் சூட்சக் கன்னிகன்னி*
*அவள் ஜால வித்தையெல்லாம் கண்டேன் அப்பா*
*நாடப்பா நாட்டமென்னும் ஒன்றுக்குப்பின்*
*நாட்டிலே சொல்லப் போனால் நகைப்பாரப்பா''*

என்று தமிழ்நாடு கண்ட சித்தர்கள் பாடியிருக்கிறார்கள்.

பாபா நாயகம் தன் சொற்பொழிவை நிறுத்தி கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார்கள். நள்ளிரவு கழிந்து தஹஜ்ஜத்தின் நேரம் நெருங்கி கொண்டிருந்தது. பாபா தோழர் கூட்டத்தினர் ஒவ்வொருவரையும் பார்த்தார்கள்.

“அனல்ஹக் - நானே சத்தியம் நானே மெய்ப்பொருள் -'' என்று ஜெபித்து ஜிக்ரு போல் பலமுறை உச்சரித்தார்கள். பிறகு “அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹ் - சத்தியமாக இறைவனாகிய அவனுடைய உள்ளமை ஒன்றுதான்'' என்று கூறிவிட்டு.

“தோழர்களே எல்லோரும் என்னுடைய கண்களைப் பாருங்கள்'' என்று சப்தமிட்டார்கள். பாபா நாயகத்தை உருக்கப் பார்த்த ஒவ்வொரு ஃபக்கீரும் மயங்கி விழுந்தனர். அதிகாலையில் அவர்கள் விழித்தபோது ஒவ்வொரு ஃபக்கீரின் பார்வையின் முன்னும் அவர்களின் ஆத்ம சொருபம் தோன்றி மறைந்தது.

உடல் முழுதும், முகவடிவிலும் தன்னைப் போன்றும் பாலுறுப்பு மட்டும் மாற்றமான ஒரு கன்னிப் பெண்ணை கண்முன் கண்டு அவள் சரசத்தில் மயங்கி மயங்கி விழுந்தார்கள். அந்த சிவகாம சுந்தரியின் அமுதருந்தி நித்திய ஜீவிகளாக இறைநேசர்களாக மாறினார்கள்.

எம்பெருமான் (ஸல்) அவர்களின் ஹதீஸ் கூறுகிறது “நீங்கள் இறைவனோடு ஒன்றிவிடுங்கள் அல்லது அவனுடன் ஒன்றியவர்களுடன் ஒன்றியிருங்கள் நிச்சயமாக அவனளவில் அவர்கள் உங்களை கொண்டு சேர்ப்பார்கள்.''

அண்ணல் நபிகளின் (ஸல்) ஹதீஸ் மொழிபோல் பாபா நாயகத்தின் பார்வையில் ஒன்றிய ஃபக்கீர்கள் நாற்பத்து நான்கு பேரும் இறைவனளவில் ஃபனா என்னும் நாஸ்தியாகி இறைநேச நிலை அடைந்தார்கள்.

பொழுது புலர்ந்து ஃபக்கீர்கள் தெளிவடைந்து விழித்து பார்த்த போது பாபா ஃபக்ருத்தீன் நாயகம் தர்பாரிலும் அதன் சுற்றுப்புறவட்டாரத்திலும் காணப்படவே இல்லை.

குவாலீயர் மாநகரம் விடியாகாலையிலேயே உயிர் பெற்றெழுந்து கொண்டிருந்தது. தர்காஷரீஃபின் உலர்ந்த பக்கச் சுவர்களில் அமைந்த பொந்துகளிலிருந்து புறாக்கள் தலையை வெளியில் நீட்டி கூவின. அருகிலிருந்த ஜைனர் கோவிலிலிருந்து உஷாக்கால வருகையை உணர்த்த மணியோசை எழுந்தது.

தங்கள் குருநாதர் காதிர் ஒலி நாயகத்தின் திருப்பேரரும் கலிஃபாவுமான பாபா நாயகம் தம் அருள் பார்வையால் தங்களை இறை நேசர்களாக மாற்றி விட்டிருப்பதை உணர்ந்தார்கள் ஃபக்கீர்கள்.

பாபா நாயகத்தின் வல்லமையை எண்ணி ஃபக்கீர்கள் வியந்துகொண்ட தருணத்தில், பாபா நாயகம் குவாலியரிலிருந்து இருநூறு மைல்களுக்கப்பால் உள்ள அஜ்மிர் நகரில் காஜா முயினுத்தீன் க்ஷிஸ்தி ஆண்டவர்களை தரிசித்து ஜியாரத் செய்து விட்டு காபூலை நோக்கி பறந்து சென்று கொண்டிருந்தார்கள்.

*பாதுஷாவின் அரண்மனையில்*
*பார்த்தேனடி உன் நடனத்தை*
*யாது செய்வேன் முற்பிறவி*
*ஞாபகம் வந்தது என்செய்வேன்*
*ஆதியிலே என் காதலியே*
*அடைந்தேன் நீஎன் கவிதையடி*
*ஓதி தொழுதும் பயனறியேன்*
*உணர்ந்தேன் வாடி மனோண்மணியே!*

*அகிலஉலக பாதுஷாவாகிய ஆண்டவனின் அரண்மனையில் மனோண்மணியாகிய நாட்டியக்காரி உன் நடனத்தை நான் கண்டேன். நீ என் முற்பிறவியின் காதலி என்பது எனக்கு புரிந்து போய்விட்டது. கவிதைகளாய் உன்னை எழுதி வடிக்கிறேன் ஏனெனில் ஓதி தொழுது உன்னை அடையப்போவதில்லை. என் நிலைக்கு இரங்கி என்னை அணைத்து கொள் மனோண்மணியே.*

*வெளியில் சொல்என சொல்கின்றாய்*
*வெட்கமாக இருக்குதடி*
*உளியில் லாமல் சிலைவருமா*
*ஊசி காதில் ஒட்டகமா*
*தெளிவில்லாமல் இருக்குதடி*
*தேவி உனது மகான்மியம்*
*குளிரில் ஒடுங்கி சாகின்றேன்*
*ஹ ஆவில் வாராய் மனோண்மணியே!*

*மனோண்மணியே உன்னை காதலிப்பதாக வெளியில் சொல் என்றுகிறாய் கேட்பவர்கள் நகைப்பார்கள் என்று வெட்கப்படுகிறேன். உளியால் செதுக்காமல் சிலைவடிக்கமுடியாது. யோக வழியில் பாடுபடாமல் சூக்கும உடலை அடையமுடியாது. ஊசி காது போன்றது என் சிறிய உயிர். எனினும் காத்திருக்கிறேன் வா. ஒட்டகம் போன்ற நீ என்னுள் வருவது சந்தேகமே.*

## பறக்கும் தட்டில் பறந்த பாபா

பாபா நாயகத்தின் பறக்கும் தட்டு ஆப்கானிஸ்தானின் எல்லையிலுள்ள பல்க் நகரில் எழுநூறு ஆண்டுகளுக்கு முந்திய அரசர்கரசர் இபுறாஹிம் இபுனு அதுஹமின் அரண்மனையில் சென்றிறங்கியது.

பாழடைந்த அந்த அரண்மனையில் பல பகுதிகளிலும் பாபா ஓராண்டு காலம் தங்கி தவம் புரிந்தார்கள். ஈராக்கின் கர்க் காடுகளில் எம்பெருமான் முகியித்தீன் (ரலி) ஆண்டகை ஆற்றிய கடுந்தவம் போன்று. உணவருந்தாமலும் நீரருந்தாமலும் உயிரில் ஒடுங்கி கிடந்த நாட்களில் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் ஜட உடலுடன் பறந்து சென்று சுற்றி வந்தார்கள். மக்காவுக்கும் மதினா ஷரீஃபுக்கும் சென்று பாக்தாதில் சென்று ஜியாரத் செய்தார்கள். கர்பலாவில் புகுந்தார்கள்.

அங்கிருந்து புறப்பட்டு ஆப்கானிஸ்தான் அடைந்தார்கள். ஜீலம் ஆறுமுதல் வடக்கே அமுதாரியா நதிவரை பரந்து கிடந்த ஆப்கனிஸ்தான் முன்னொரு காலத்தில் ஆர்யனாவிஜோ என்று அறியப்பட்டிருந்தது. மலைப்பிரதேசங்களும் பள்ளத்தாக்குகளும் கொண்ட அப்பிரதேசம் இந்துமத இதிகாசங்களிலே புகழப்படுகிறது.

புஷ்டு மொழிபேசும் பழங்குடி இனமக்களிடையே ஹசாரிகள், பக்தூன்கள், தஜிக்குகளுடனும் பாபா பல ஆண்டுகாலம் பழகி வாழ்ந்தார்கள். காபுலிலும் காந்த ஹாரிலும் சுற்றி திரிந்தார்கள். ரிக், யஜுர், அதர்வன, சாமவேதங்கள் தோன்றிய பூமியில் பாபா மேற்கொண்ட தவ வாழ்க்கை உன்னதமான ஆன்மீக சிகரங்களுக்கு அவர்களை கொண்டு சேர்ந்தது.

பிரம்மமாகிய பரம்பொருளை உணர்ந்து கொள்ள இடைவிடாத தியானம் தேவைப்படுகிறது. நானே அந்த மெய்ப்பொருள் - அனல்ஹக் - நாடப்படும் அந்த தெய்வம் நானே - அஹம்பிரம் மாஸ்மி என்ற கோட்பாடுகளை தொடர்ந்து நினைவில் நிறுத்துதல் கொண்டுதான் ருபிய்யத் என்கின்ற பரந்த தெய்வப்பண்பை அடையமுடியும்.

எல்லா உயிரினங்களும் உயிரற்ற எல்லா ஜடப்பொருள்களும் கூட அந்தப் பரம்பொருளின் அம்சமே என்றும் அவற்றிற்குள் பரம்பொருள் அடங்கியிருக்கிறது என்றும் ஏற்றுக்கொள்வதே சம்பூர்ண ஞானத்தின் அடையாளமாகும்.

எம் பெருமான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸ் மொழி ஒன்று நினைவுகூறத்தக்கது. "ஒரு மனிதன் ஒரு பாறை கல்லின்மீது அமர்ந்திருகிறான். அந்த மனிதன் கவலையோடிருக்கிறானா அல்லது துக்கத்தில் இருக்கிறானா என்று அந்தப்பாறை உணர்ந்து கொள்கிறது."

அண்ணல் நபிகளின் இந்த மெய்ஞ்ஞான கருத்து எதிர்காலத்தில் நிச்சயமாக விஞ்ஞான ரீதியாக மெய்பிக்கபடும் என்பதில் ஐயமில்லை. பாபா நாயகம் தங்கள் உள்ளமை உயிருள்ளப் பொருள்களிலும் உயிரற்றப் பொருள்களிலும் ஊடுருவிச் செல்வதை கண்டார்கள்.

பிறந்த ஒவ்வொரு உயிரும் ஒருநாள் இறப்பது திண்ணம். "ஆடி அசையும் ஒவ்வொன்றுக்கும் முடிவு உண்டு" என்பது நபிமொழி இறப்பது மீண்டும் மீண்டும் பிறக்கிறது. இதனை யஹ்ரிஜனல் ஹையமினல் மையி, மையமினல் ஹையி- உயிரிலிருந்து மரணத்தையும் மரணத்திலிருந்து உயிரையும் உண்டாக்குகிறோம்" என்று திருக்குர்ஆனில் இறைவன் கூறுகிறான்.

விளக்கிலுள்ள திரியும் எண்ணெயும் சேர்ந்து எரிவது போல ஜடமாகிய உடலும் ஆன்மாவும் சேரும்போது இயக்கம் ஏற்படுகிறது. காற்று வீசுவது போன்ற சாதகமில்லாத சூழ்நிலையில் விளக்கு அணைவதுபோல உயிர்களுக்கு இறப்பு ஏற்படுகிறது.

எந்த ஒரு நாடக நடிகனும் கதைக்கேற்றபடி கோலம் புனைந்து வசனங்கள் பேசுவது போல, ஆன்மா மீண்டும் மீண்டும் பிறந்து இடத்துக்கும் காலத்துக்கும் தகுந்தவாறு நாடகமாடுகிறது. ஆன்மா முக்திநிலை அடையும்வரை நாடகம் தொடர்கிறது.

மனிதனிடத்தில் இச்சை அதிகரிக்கும் போது ஒழுக்கம் குறைகிறது. யுக யுகாந்திரமாக ஆழ்மனதில் உறங்கி கிடக்கும் ஆசைகள் தான் மனிதர்கள் இன்பங்களையும் பதவிகளையும் உலகாயத சொத்துக்களையும் அடையத் தூண்டுகின்றன.

பரம்பொருள் உண்டாக்கும் மாயையின் காரணமாக இந்த தெய்வலீலை நடைபெறுகிறது. கலாவும் கற்பனையும் அல்லாவுக்குரியது என்று திருக்குர்ஆன் கூறுகிறது. ஆன்மா பிறப்பெடுக்கிறது என்ற கருத்தை திருகுர்ஆன் "அந்த மனிதர்களுக்கு நரகத்தில் மீண்டும் மீண்டும் புதிய தோல்கள் கொடுக்கப்படும்" என்கிறது.

கடுந்தவத்தால், தானே மெய்பொருள் என்ற உறுதியான சிந்தனையால் விடுதலை பெறும் ஆன்மா குத்பு, கௌது என்றும் இறைநேசர் என்றும் முத்தர், சித்தர் என்றும் அழைக்கப்படுகிறது. அல்லாஹ்வின் பாதையில் வெட்டுண்டவர்கள் மரணிப்பதில்லை என்று திருக்குர்ஆனும் வையத்தில் வாழ்வாங்கு வாழ்வார் வானுரையும் தெய்வத்தின் வைக்கப்படும் என்று திருக்குறளும் தெளிவுப்படுத்துகிறது.

- - - - - - -

ஃபார்சி மதத்தின் தீர்க்கதரிசி ஜொரஸ்ட்ரரும், சமஸ்கிருத மொழி இலக்கண நூலின் கர்த்தாவான பாணிணியும் பிறந்த புனித பூமியான பல்க்கின் தெருவீதிகளில் ஹுஜ்ரா என்று வழங்கிய வழிப்போக்கர் தங்குமிடங்கள் பாபாவை கைகூப்பி அழைத்தன. முல்லாக்களும், கான்களும், சர்தார்களும் பாபாவை தேடிவந்து ஞானம் பெற்றார்கள்.

ஆப்பானிஸ்தானின் பல்வேறு பகுதிகளிலும் பாபாவின் நினைவிடங்கள் உள்ளன. அர்கந்தா, ஹெல்மந்த், மார்கால், ஹரிருக் ஆற்றங்கரைகளிலும், சலிகார், அஜலாபாத், அஜ்மல் நகரங்களிலும் சில்லா இருந்தார்கள் என்ற மண்டலங்கள் உள்ளன.

சையதினா இபுறாஹிம் இபுனு அதுஹமின் பாழடைந்த அரண்மனையில் பாபா, கிலிறு (அலை) அவர்களை சந்தித்தார்கள். கிலிறு (அலை) அவர்கள் உபதேசத்தின் படி தென்னகத்துக்கு திரும்பி திருமயம் காட்டில் நுழைந்து அங்கே மீண்டும் இல்லறம் புகுந்து நல்லறம் பேணி சமாதி நிலை அடைய முடிவெடுத்தார்கள்.

அரசர்க்கரசர் இப்ராஹிம் இப்னு அதுஹம் பிறந்து வாழ்ந்தது பல்க் நகர மென்றாலும் அவர்கள் மறைவிடம் பற்றி உலகின் பல்வேறு இடங்களிலும் அடையாளங்கள் உள்ளன. இத்தாலி நாட்டின் அருகில் மத்திய தரைக்கடலில் ஒரு தீவில் அடக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

சிரியாவில் என்றும் பாக்தாத்தில் என்றும் செய்திகள் உள்ளன. அவர்களின் மரணித்த உடலை யாரும் காணவில்லை அவர்கள் பல்கின் பாழடைந்த அரண்மனைக்குள் உடலோடு மறைந்து போனார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

ஆனால் பாபா நாயகம் கிலிறு நபியின் உபதேசத்தோடு பல்கிலிருந்து புறப்பட்ட நாளில் பாபா நாயகத்தின் கண்ணெதிரில் சூக்குமதோற்றமாய் ஸையதினா இபுறாகிம் இபுனு அதுஹம் தோன்றினார்கள்.

- - - - - - -

பாழடைந்த அரண்மனையைச் சுற்றிப்படர்ந்திருந்த கோரைப் புதர்களின் ஊடாக நடந்து சென்று பாபா திரும்பிப் பார்த்தார்கள். அதோ தேவதாரு மரத்தின் கீழ் அவர்கள் குடியிருந்த மண்குடிலின் கதவு திறந்து கிடக்கிறது. சிந்த் நதியின் கிளை ஆறு குடிலின் முன்புறம் சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது.

குளிரொளி வீசிய கதிரவனின் செங்கிரணங்கள் ஆறும் காடும் பளிச்சிட அதோ ஒரு முதியவர் ஒற்றையடிப் பாதையில் தோன்றினார். மயிரடர்ந்த ஆட்டுத் தோல் தொப்பியும் மான் தோல் அரைகோட்டும் நீள் சோடுகளும் அணிந்திருந்தார். இடுப்பில் வாள் தொங்கியது. அவரது காலடிகளில் இலை சருகுகள் சரசரத்தன.

“மகனே நில்லும்!” பாபா அதிர்ந்து நின்றார்கள். “என் மீது கொண்ட நேசத்தாலல்லவா உமது தவத்துக்கு எனது பாழடைந்த வாழ்விடத்தை தேர்ந்தெடுத்தீர்! இன்று நீர் பிரிந்து செல்லும் போது நான் விடை தர வேண்டாமா?”

கண்முன் தோன்றிய காலத்தால் அழியாத மாமனிதரை இறைநேசரான ராஜரிஷி இபுறாகிம் இபுனு அதுகமை கண்குளிர கண்டு மௌனித்தார்கள் பாபா ஃபக்ருத்தீன்.

அரசர்கரசர், பாபா நாயகத்தை புகழ்ந்து பாடிய உருக்கமானப் பாடல்கள் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளன.

*வலா அறலத்லீ நலுறத துன்முது வ றபுத்தஹூ*
*ஸதித் கஹ்றி இல்லாக் கான லீஹைது அன்றுறு*

நான் அல்லாஹ்வை அறிந்த நாளிலிருந்து அவனன்றி உலகில் வேறொன்றையும் நான் கண்டதில்லை. ஆனால் என் மைந்தரே உம்மை காண்பதென்பது எனக்கு வித்தியாசமான அனுபவமாகிவிட்டது.

*அகோலு அஸாத்துறுபூ லஹூ அன்னனி*
*தாறாமத் தலுபீ கொய்றஹூ வஸ்து அபுஸஹூறு*

என் பார்வையில் ஏற்பட்ட மாற்றமென்ன அல்லாவை விட்டும் என் பார்வையை விலக்கும் பாசத்துக்குரிய இந்த மைந்தன் யார்?

*அயாமுன் தஹூா துகுரீ வஸீலீவ உத்தத்தி*
*விதாதுக்க பீகல்பி இலா யெனம் உக்ஷ்ஷுறு*

எனது நேசத்தின் முடிவான மைந்தனே உன்மீது எனது உவப்பு கியாமநாள்வரை காத்திருக்காது என்னை உசுப்பி எழுப்பியது.

பாபா நாயகத்தின் மீது அரசர்கரசர் இபுறாகிம் இபுனு அதுஹம் அவர்களின் ஆன்மாவுக்கு ஏற்பட்ட பாசம் ஜென்மஜென்ம பந்தமாகும். பல்க் நாட்டின் இளவரசராக பாபா பிறந்த காலம் ஒன்று இருந்தது.

இருப்பாயா நீ நானறியேன்
இல்லை ஓடிப் போவாயா
வெறுப்பாயா நீ நானறியேன்
வேதனை யாமடி என் வாழ்க்கை
பொறுப்பாயா நீ கேட்கின்றாய்
போய்வா மண்ணில் என்னைப்பார்
நெருப்பாய் சுடும் நீ தேவதையே
நெருங்கி வாராய் மனோண்மணியே!

மனோண்மணியே நீ என் சூக்குமத்தில் தங்கி இருந்து நான் அழியா நிலையை அடைய அருள்புரிவாயா அல்லது என்னை வெறுத்து ஒதுக்கி வேறு ஜென்மம் எடுப்பாயா தெரியவில்லை. பொறுப்பாய் என்ற உன் உபதேசம் என்னை மண்ணறைக்குள் தான் தள்ளும். நெருப்பாய் சுட்டாலும் நீ எனக்கு தேவதை தான் நெருங்கி வந்து எனக்கு ஆதரவுதா மனோண்மணியே.

*ஹூயிலாஹி கொண்டாட்டம்*
*குருவில் ஹூரி குத்தாட்டம்*
*லாயிலாஹ் களியாட்டம்*
*லைலா ரகஸ்ய மயிலாட்டம்*
*தீயில் தேவன் பூந்தோட்டம்*
*தேரில் குமரி தொங்கோட்டம்*
*வாயில்லாமல் வாடுகிறேன்*
*வந்தெனை கொல் மனோண்மணியே!*

*ஹூரியாகிய மூச்சோட்டத்தை குருவாகிய இருதய கமலத்தில் ரேசக பூரகமாய் புகுத்தி அடக்கும் போது லாயிலாஹ் என்ற கலிமாவின் முழக்கத்தோடு பேரின்ப தெய்வமாகிய லைலா வெளிவருவாள். நபி இபுறாஹிம் (அலை) தீக்குழியில் பூந்தோட்டத்தை பார்த்தது போன்ற நிலை ஏற்படும். எனவே என்னில் நான் என்ற அகம்பாவத்தை கொன்று அருள் புரிவாய் மனோண்மணியே.*

## திருமயத்தில் ஒளிமய நிலா

அடர்ந்த கானகத்தின் நடுவில் பாபா நாயகம் பாறையொன்றின் மீது அமர்ந்திருந்தார்கள். வாழ்க்கையின் பெரும்பகுதி பாரத தேசத்தின் பல பகுதிகளிலும் பயணத்தில் கழிந்து போய்விட்டது.

- - - - - - -

இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி இராஜிஊன சஹாதா - நிச்சயமாக நாம் அல்லாவிலிருந்து வந்தோம் அல்லாஹ்விடமே மீள்வோம் என்பது திருக்குர்ஆன் வசனம். அதன் பொருள் மேகம் கடலில் முகர்ந்து வரும் நீர் மழையாய் பொழிந்து நதியாய் விரைந்து கடலில் சென்று கலந்துவிடுகிறது என்பதுதான்.

கடல் நீரும் நிலத்தடி மழை நீரும் நீர்தான் என்பது போல இறைவனிலிருந்து வந்தது இறைவனுடைய ஆன்மாதான, பூமியில் மனிதர்களாக வாழும் போதும் அது இறைவனுடைய ஆன்மாதான். இறைவனிடத்தில் திரும்பும் போதும் இறைவனுடைய ஆன்மாவேதான்.

எனவேதான் யூதருடைய பிரேதம் தூக்கி செல்லப்பட்ட சூழ்நிலையில் அந்த பிரேதத்தில் இருந்தது இறைவனுடைய ஆன்மா என்பதாக கருதி பெருமானார் (ஸல்) மரியாதை செய்ததாக அவர்களைப் பற்றிய ஹதீஸ் மொழி ஒன்று கூறுகிறது.

இறைவனிலிருந்து தோன்றிய ஆன்மா மீண்டும் மீண்டும் பிறந்து தன் மயக்கம் தீர்ந்து தானே இறைவனென உணரும் போது முக்தி அடைகிறது. இதனை இந்து மதமும் புத்த மதமும் ஜைன மதமும் ஜெனனம் எடுப்பது என்று கூறுகிறது.

யூத கிருஸ்துவ இஸ்லாமிய மதத்தினர், ஆண்டவன் மனிதனில் புகுத்திய ஆன்மா நன்மை தீமைகள் புரிந்து, அதன் பாவங்கள் நரகத்தில் கழுவப்பட்டு சுவர்கத்தில் புகுந்து கொள்கிறது என்ற வேறு விதமாக சொல்கின்றனர்.

பிறப்பு மறு பிறப்பு, முக்தி நரகம் சொர்க்கம், நரக சொர்க்கத்துக்கு அப்பால்பட்ட அழிவற்ற இறைநேச நிலை என்பதெல்லாம் ஒரே விவகாரத்தைப் பல்வேறு கோணங்களிலிருந்து பார்க்கும் போது ஏற்படும் தோற்றங்களாகும்.

இந்த பிரபஞ்சம் காலத்தால் ஆரம்பமும் முடிவுமற்றது. தூரத்தால் கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு என்ற திசைகளோ எல்லைகளோ இதற்கு இல்லை. ஞானம் தேடும் மனிதன் நேற்று இன்று நாளை என்பதையும், அருகில் தூரத்தில் என்ற குழப்பத்தையும் விட்டு தெளிவு பெறவேண்டும்.

- - - - - - -

பல்க் நாட்டிலிருந்து புறப்பட்ட பாபா ஈழத்துக்கு பறந்து சென்று தஃப்தர் ஜீலானி, கொட்டிய கொல்லை, அனுராதபுரம் முதலிய இடங்களில் தங்கினார்கள். ஈழத்திலிருந்து மீண்டு தக்கலைக்கு அருகிலுள்ள வேலிமலையில் தவமிருந்தார்கள். குமுளிக்கு அருகில் எரிமேலியில் ஐயப்பனாகிய மணிகண்டனுடன் விருந்தினராக இருந்து விடைபெற்றார்கள்.

இப்போது பாபா நாயகம் முழுத்தெளிவு பெற்று திருமயம் காட்டின் பாறைப் பகுதியில் முப்பது ஆண்டுகளுக்கு முன் அச்சுதப்பரின் மகள் சந்திரமதியை விட்டு பிரிந்த இடத்தில் அமர்ந்திருந்தார்கள். மயக்கும் மாலைபொழுதின் மஞ்சள் ஒளியைக் கண்டுவிட்டு பல வகையான பட்சி ஜாலங்களும் கூடடைய விரும்பி தங்கள் இருப்பிடங்களை தேடிச் சென்றன. எங்கும் அமைதி நிறைந்த அந்த நேரத்தில் ஐந்து இளம் பெண்களும் இரு சிறுமிகளும் குளக்கரைக்கு வந்தனர்.

மனித அரவம் கண்டு கண்மலர்ந்த பாபா நாயகம் அப்பெண்களை நிமிர்ந்து பார்த்தார்கள். ஸினாய் பாலை நிலத்தில் மூசா நபியை கண்ட ஹீராவின் மகள்களைப் போல அப்பெண்கள் காட்சியளித்தார்கள்.

அப்பெண்களில் மூத்தவளானவள் பாபாவின் அருகில் வந்து நின்றாள். மற்றபெண்ணும் சிறுமிகள் இருவரும் குளத்தில் இறங்கி முகம் கழுவவும் நீரருந்தவும் தலைப்பட்டார்கள். அப்பெண் பேசத் தொடங்கினாள்.

“ஐயனே தாங்கள் யாரென்பது எனக்கு தெரியவில்லை. ஆனால் தங்களை நான் எங்கோ என்றோ சந்தித்திருக்கிறேன். நாங்கள் அருகிலுள்ள கிராமத்தை சேர்ந்தவர்கள் வைஷ்ய இனத்தை சேர்ந்த என் தந்தை குறு நில கிழார்.

“என்னுடன் வந்த பெண்கள் ஐந்து பேரும் என் தோழிகளும் இருசிறுமிகளும் நான் பெற்ற பிள்ளைகள். என் கணவர் என்னை கவனிப்பதில்லை. என் தந்தையின் பராமரிப்பில் நான் இருந்து வருகிறேன்.

“இன்று சில மைல்கள் தொலைவிலுள்ள திருமயத்தில் கோவிலில் திருவிழா. அங்கு சென்று திரும்பும் வழியில் நாங்கள் அவசர அவசரமாக நடைநடந்தும் அந்திப் பொழுது நெருங்கிவிட்டது.

“நாங்கள் வீடு சென்றடைய இன்னும் சில மைல்கற்கள் நடந்தாக வேண்டும். இருண்ட கானகப் பாதை எங்களுக்கு பழக்கமானதென்றாலும் தேய்பிறை இருளில் இந்த பாதையில் நடக்க அஞ்சுகிறோம்.

“தாங்கள் இசைந்தால், நாங்கள் வீடடைய எங்களோடு தாங்கள் துணையாக வந்தால் அச்சமின்றி நாங்கள் நடந்துவிடுவோம். நிச்சயமாக எங்கள் பெற்றோர் உங்களுக்கு நன்றி உடையவர்களாக இருப்பார்கள்.”

அப்பெண் பேசப் பேச பாபா நாயகம் மௌனமாக அமர்ந்திருந்தார்கள். அவளுடைய முகபாவமும் தெளிந்த உறுதியான பேச்சும் அவர்களுக்கு எதையோ உணர்த்தியது. தன் மனதில் நிறைந்திருந்த மனோண்மணி இவள்தானோ என்ற ஐயம் அவர்களுக்கு ஏற்பட்டது.

*“அன்னமே சொல் உந்தன் ஆதிகதை என்ன*
*எந்த தேசத்திலிருந்து நீ இங்கு வந்தாய்*
*எந்த கானகத்தின் எல்லையை தாண்ட விழைகிறாய்*
*அன்னமே உன் கூடு எங்குள்ளது?*

*நீ என்னிடம் என்ன வினவுகிறாய்*
*இந்த நேரத்தினாலான உன் அழைப்பு*
*என்னை தொடர்ந்து வா என்றஉன் விருப்பம்*
*நான் ஏற்று கொள்ளத்தான் வேண்டும்*

*அச்சமும் ஐயமும் இல்லாத இடத்துக்கு*
*உன்னை நான் அழைத்து செல்லலாமா?*
*மரணத்தின் பீதி அணுகாத நித்திய*
*ஜீவிதப் பாதையில் உன்னுடன் நான் துணைவரவா?*

*அன்னம் போன்ற பெண்ணே!*
*நீ என் முற்பிறவியின் தோழி என்பதை எப்படி மறப்பேன்?*

*வசந்தத்தின் மந்தமாருதம் ஏந்திவரும் மலர் வாசனையே*
*உன் மனம் தேடும் உண்மையான*
*அவன் நானே என்பது உனக்குப் புரியவில்லையா?*

*வேறெந்த ஆசையும் உட்புகாத*
*உன் இதய வீட்டில் உன்னோடு நான் தங்கிடவா?*
*அன்பே அனுமதி தருவாயா?”*

என்றோ படித்து பார்த்த பஞ்சாபி மொழிப்பாடல் அவர்கள் மனதில் பிரவேசித்தது. இது லாகூரை சேர்ந்ததா நாகூரை சார்ந்ததா என்பது அவர்களுக்கு புரியவில்லை.

ஆனால் இந்தப் பாடல் பாபா நாயகத்தின் மனதில் சந்திரமதியை நினைவூட்டியது. வாழ்க்கையின் எல்லா அத்தியாயங்களும் முடிந்துவிட்ட அந்திம காலத்தில் சந்திர மதியின் மறுபக்கமாக முன் வந்து நிற்கும் நல்லூர் இளவரசியை பார்த்து பாபா மனம் இறங்கினார்கள்.

“சரி மயிலே புறப்படு. உங்களுக்கு நான் துணையாக வருகிறேன். உங்கள் இல்லம் செல்லும் பாதையில் நீங்கள் கடமை செல்லுங்கள் நான் தொடர்கிறேன்.”

இருண்ட இருளில் கானகத்தில் நடந்தபோது கள்வர்கள் எதிர்ப்பட்டார்கள். கொலைவாளுடன் எதிர்பட்டவர்கள் பாபா தன் வெறுங்கைளை நீட்டி அசைத்தபோது காற்றில் பறந்து பொதிகளைப்போல வெகுதூரத்தில் சென்று விழுந்தார்கள்.

*பாவி உன்னை தொலைத்துவிட்டேன்*
*பரமன் கண்முன் மீட்டு வந்தான்*
*காவியம் வடித்தேன் உனைவைத்து*
*கவிதை வரைந்தேன் உனைநினைத்து*
*ஓவியம் நீஎன் உள்ளத்தில்*
*உலகம் உன்னை அறியாது*
*ஆவியும் உனக்கே அர்ப்பணித்து*
*அடிமை மறைவேன் மனோண்மணியே!*

*முந்தின பிறவிகளில் விதிப்பயன் காரணமாக உன்னை இழந்தேன். இன்று உன்னை வைத்து கவிதையும் காவியமும் எழுதுகிறேன். ஆவியும் உனக்கே அற்பணித்தேன் அருள்புரிவாய் மனோண்மணியே.*

*அப்பழுக்கற்றது உன்மீது*
*அடியேன் கொண்ட பாசமடி*
*ஒப்புக் காக சொல்லவில்லை*
*உண்மை இறைஎன் நிலைஅறிவான்*
*எப்பொழுதும் உன் நினைவென்னும்*
*இசையில்தான் உலவுகிறேன்*
*தப்பிந்தாலும் மன்னிப்பாய்*
*தாயாய் வருவாய் மனோண்மணியே!*

*நான் உன்னில் கொண்ட காதல் ஒப்புக்காக சொல்லப்படுவது அல்ல. உன் நினைவென்னும் இசையில்தான் உலகில் நான் உலவி வருகின்றேன். என்மீது தவறு இருந்தால் அறவணைத்து ஆதரவு தருவாய் மனோண்மணியே.*

## காரணம் விளங்கும் காட்டு பாபா

அப்பெண்களுடன் பாபா நாயகம் அப்பெண்ணின் கிராமத்தை சென்றடைந்த போது அவளது தந்தையான குறு நிலக்கிழார் தன் பணியாட்களை பல்வேறு திசைகளிலும் அனுப்பியிருப்பது தெரியவந்துது.

தனது மகளையும் குழந்தைகளையயும் தோழிகளையும் பாதுகாப்பாக அழைத்து வந்த மகானை கவுரவித்து தன் அரண்மனையிலேயே தங்க வைத்தார் அப்பெருமான்.

விடிந்தும் விடியா அதிகாலையில் அவ்வூரெங்கும் பெரிய பரபரப்பு ஏற்பட்டது. பாபா நாயகம் தங்கியிருந்த விருந்தினர் இல்லத்தில் அவ்வூரிலுள்ள நூற்றுகணக்கான சேவல்கள் வந்து கூடிகிடந்தன.

அடுப்புக்களின் புகையும், சுவையுள்ள நறுமணங்களும், பசுக்களின் மாவென்ற அலறலும் , நாய்களின் குறைப்பும் கொண்ட கிராமம் அது. எனினும் அன்று அமைதி கொண்டிருந்தது.

ஆனால் சேவல்களின் கூவல் விண்ணைப் பிளந்தது. “காட்டு பாபா” என்று அவை எழுப்பிய குரல்கேட்டு மக்கள் வியப்புற்றார்கள். தம்மிடம் வந்திருக்கும் அப்பெரியார் மாதவசி என்பதை உணர்ந்த குறுநில கிழார் பெரிதும் மகிழ்வடைந்து அவர்கள் தன்னோடு தங்குமாறு விழைந்தார்.

பாபா நாயகம் சில மைல் கற்கள் தொலைவில் மலைப்பாறைக்கு அடிக்கடி சென்று வந்தார்கள். கிராமத்தில் அவர்கள் தங்கும் நேரங்களில் மக்களுக்கு உடல் பிணியும் மனப்பிணியும் போக அருள்மறை ஓதி உதவிபுரிந்தார்கள்.

திருமயக் காட்டிலும் காட்டைச் சுற்றிய ஊர்களிலும் பாபாவின் புகழ்பரவியது மக்கள் நாளும் பொழுதும் அவர்களது வாசலை தேடி வரத்தொடங்கினார்கள். கிழாரின் மகள் தன் வாழ்க்கையை பாபாவுக்கு தொண்டு செய்வதில் கழிக்கத் தொடங்கினாள்.

கள்வர் பயம் நிறைந்த கானகம் பாபாவின் அற்புத வித்தைகளால் பவித்ர பூமியாக மாறியது. கூட்டமாக கள்வர்கள் வழிப்பறி செய்ய யத்தனித்த இடங்களிலெல்லாம் பாபாவின் அமானுஷ்ய தோற்றம் அவர்கள் முன் எழுந்து பயமுறுத்தவே கள்வர் பயம் முற்றுமாக ஒழிந்தது.

- - - - - - -

அது கார்த்திகை மாதத்தின் பௌர்ணமி நாள். நீர் தடாகத்திலிருந்து குளிர் குப்பென்று வீசியது. வெண்பனிச் சிதறல்கள் காற்றில் மிதந்தன. பனிக்காலம் அதோ நெருங்கி கொண்டிருந்தது. கானகத்தின் உயரே வானில் சஞ்சரித்து திரிந்தன மேகங்கள்.

நாட்கள் மாதங்களாய் கழிந்தன. ஆண்டுகள் ஆறு உருண்டன. ஒரு வசந்தகாலத்தின் நிலாப் பொழுதில் பாபாவும் நிலாவும் பாறையின் மீது அமர்ந்திருந்தார்கள்.

பாபா வினவினார்கள்.

"நிலா நீ யார் என்பது உன் நினைவில் வருகிறதா. என்னோடு ஆறு ஆண்டுகளை கழித்துவிட்டாய். உடல் பொருள் ஆவிமூன்றும் உத்தம குருவுக்கு ஈவாய் என்ற ஞான மொழிக்கு அர்த்தமாகவும் முழுமையானப் பொருளாகவும் மாறிவிட்டாய்! இன்னும் உன் முற்பிறவி நினைவு உனக்கு வரவில்லையா?"

பாபாவை நிலா பார்வையில் வினாக் குறிகளோடு பார்த்தாள்.

“ஐயனே நான் யாரென்பது எனக்கு தெளிவாகத் தெரிகிறது. நான் தஞ்சை மன்னர் அச்சுதப்பரின் மகள் சந்திரமதி என்பதும் இளம் வயதில் இந்த கானகத்தில் உங்களை அறிந்து மறைந்த அரிவை நான் என்பதும் எனக்கு தெரியும். கடல் துறைபட்டினமான பரங்கிப்பேட்டையில் போர்த்துகீஸிய மங்கையாக உங்களை சந்தித்த நதியா நான்தான் என்பதும் எனக்கு புரிகிறது.

“என்னை நீங்கள் ஏற்று கொண்டு இந்த கானகத்தில் தங்களின் பரிசுத்த சந்ததியை உண்டாக்குவீர்கள் என்பதும் எனக்கு தெரியும். என்னால் தங்களுக்கு எந்த அவப்பெயரும் வரக்கூடாது என்பதற்காகவே மௌனம் சாதித்து வருகிறேன்.”

பாபா சற்றே தாமதித்து பேசினார்கள்.

“அன்பே! எனக்கும் உனக்கும் உள்ள உறவு சிற்றின்ப உறவல்ல. அது பேரின்ப உறவு. அந்த உறவில் மலரும் சந்ததியில் மெய்ஞ்ஞானிகள் தொடர்ந்து தோன்றுவார்கள்.

“அன்பே! எனது பாட்டனார் நாகூரில் அடக்கமாகியுள்ள காதிர் ஒலி நாயகம் எனது தந்தையரை ஒரு ஆன்மீக கற்ப விருட்சகமாக படைத்து வெளிப்படுத்தினார்கள்.

“ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகத்தின் முப்பாட்டனாரான பாக்தாத் நகரிலே அடங்கியுள்ள மகான் முஹ்யித்தீன் ஆண்டகை கூறிய கூற்று சிந்திக்கப் படவேண்டியது. “நல்லடியான் ஆண்டவனை அடிபணிந்து வணங்கி அவனுடன் ஒன்றித்துவிடும்போது “ஆகுக” என்ற உத்தரவால் எதையும் ஆகிவிடச் செய்யும் தனது ஆற்றலை தனது அடியானான அந்த மனிதனுக்கு ஆண்டவன் தந்துவிடுகிறான் என்று ஆண்டகை கூறியுள்ளார்கள்.

“எனது பாட்டனாரிடமிருந்து அந்த அற்புத ஆற்றலைப் பொக்கிஷமாகப் பெற்று நான் பரந்த பாரத தேசத்தின் நான்கு திசைகளிலும் அவுலாதுல் அத்ஹார் என்ற பரிசுத்த சந்ததிகளின் வித்தினை “ஆகுக” என்ற இறை உத்தரவைக் கொண்டு விதைத்ததுள்ளேன்.

“காலந்தோறும் பரதமண்ணில் பல்வேறு பகுதிகளிலும் மனித ஜீவர்களை ஆன்மீக முக்தி நிலைக்கு கொண்டணைத்து செல்லும் அரிய மெய்ஞ்ஞான புருஷர்கள் எனது சந்ததியாய் பிறப்பார்கள். இதற்கு இனபேதமும் எல்லைகளும் கிடையாது. காலதூர வர்த்தமானமும் கிடையாது” என்றார்கள்.

பொழுது விடிந்தது பாபாவும் நிலாவும் பாறைப் படுக்கையில் விழித்தெழுந்து இல்லம் நோக்கி குதிரை மீது பயனிக்கத் தலைப்பட்டார்கள்.

அது புல்திட்டுக்களும் அடர்ந்த காடுகளும் உள்ள தாழ் நிலம். தாராளமாக குதிரையில் விரைந்திட இடம் கிடையாது. காடு சுவர்போல நிற்கிறது. அந்தப் பாதை வளைந்து நெளிந்து நிற்கிறது. பாபாவின் மார்பில் நிலாவின் முதுகு சாய்ந்திருந்தது.

கானக பாதையில் சிலவழிப்பறி கள்வர்கள் வெளிவந்து பாபாவை வாள்களால் வெட்டி வீழ்தினார்கள். சில வருட காலமாக தங்கள் வழிப்பறி கொள்ளைக்கு வழியே இல்லாமல் முடக்கிவிட்ட பாபாவைப் பழிவாங்க திட்டமிட்டிருந்த திருடர்கள் இறைவனின் நாட்டம் வெளிப்படவே பாபாவின் குருதியைப் பூமியில் சிந்தி பழிதீர்த்துக் கொண்டார்கள்.

நிலாவை கொன்றுவிட அவர்கள் யத்தனித்த போது பாபாவின் பிரேதத்தின் இடுப்பிலிருந்த வாள் வெளியேறி கள்வர்களை வெட்டி வீழ்த்தியது. சிலர் கண் குருடர்களாகி தடுமாறி அலைந்தார்கள். குறுநில கிழாரான நிலாவின் தந்தைக்கு செய்தி எட்டியது.

திருமயம் கானகத்தை சுற்றியிருந்த பல்வேறு ஊர்களிலிருந்தும் பாபாவின் பக்தர்கள் ஆயிரக் கணக்கில் திரண்டு வந்தார்கள். பாபா நாயகத்தின் பரிசுத்த சடலம் இஸ்லாமிய மக்களால் நல்லடக்கம் செய்யப்பட்டு இந்து மக்களால் சடங்குகள் செய்து கவுரம் செய்யப்பட்டது.

நிலா என்ற காதர் பீவியும் பாவாவும் வாழ்ந்த ஞான ஆனந்த மடம் இருந்த இடத்தில் இன்று ஒரு ஆலமரம் நிழல் பரவும் விருட்சமாக நின்று காட்சியளிக்கிறது. பள்ளிவாசல் பகுதி மக்கள் சோதனை காலங்களில் இங்கு வந்து பிரார்த்தனை சோறு ஆக்கி சேவித்து வின்னம் நீங்குகிறார்கள்.

இளவரசி நிலா என்ற காதர்பீவி வாழ்ந்த அரண்மனையின் இடிந்து சுவர்கள் இன்னும் பள்ளிவாசலுக்கு மேற்கே ஒரு கல் தூரத்தில் காணப்படுகிறது. அங்கிருந்து தான் பாபா நாயகத்தின் வருடாந்தர கந்தூரி உற்சவ கொண்டாட்டங்கள் ஆரம்பமாகின்றன. பள்ளிவாசல் பகுதி லெப்பைமார்கள் சமுதாயம் காதர்பீவி பாபா நாயகம் ஆகியோரின் சந்ததிகள் என்று கூறுவோரும் இங்கு உள்ளனர்.

துறந்தேன் என்று சொல்வதற்கு
துணிவில்லையடி நெஞ்சத்தில்
மறந்தேன் என்று சொல்வதற்கு
வலுவில்லையடி என்மனதில்
நிறைந்தாய் எந்தன் இதயத்தில்
நீ யில்லையேல் ஏன் வாழ்கை
இறந்தும் பிறந்தும் அலையாமல்
இருக்க அருள்புரி மனோண்மணியே!

உன்னை துறந்துவிட்டேன் என்று சொல்லவோ மறந்து விட்டேன் என்று சொல்லவோ என் இதயத்தில் வலிமை இல்லை. இறந்தும் பிறந்தும் புதுஜென்மம் எடுக்காமல் உன்னோடு நிறந்தரமாய் இருக்கும் இறைநேச நிலையை எனக்கு அருள் புரிவாய் மனோண்மணியே.

*எத்தனை எத்தனை கோலங்கள்*
*எத்தனை எத்தனை ஜாலங்கள்*
*நித்திரையாய் நிஜ நினைவுகளாய்*
*நீளும் ஜென்மக் காலங்கள்*
*பத்தினியே உன் முகத்தில்தான்*
*பார்க்கிறேனடி அனார்கலியை*
*உத்தமியே உன்மடியில்நான்*
*உய்வேன் முக்தி மனோண்மணியே!*

*ஜென்ம ஜென்மங்களாய் பல கோலங்கள் எடுத்து நீ என்னை காதல் கொண்டு துரத்தி வருகிறாய். உன் முகத்தில் தான் அனார்கலியை நான் பார்க்கிறேன். மனோண்மணியாகிய உத்தமியே உன் மடியில் நான் முக்தி அடையவேண்டும்.*

## முக்தி நிலையம் மும்தாஜ் மகால்

“மும்தாஜ் ஒ மும்தாஜ்” என்று கூச்சலிட்டபடி ஓடி கொண்டிருந்தார் ஷாஜகான். ஆக்ராவில் அமைந்த முகலாயர் கோட்டையின் சிறைச்காலைக்குள் தறிகெட்டு ஓடி கொண்டிருந்த அவர் கண்முன் தெரிகிறது தாஜ்மகால், அவரது மனைவி மும்தாஜின் ஆன்மா குடிகொண்டிருக்கும் அற்புத மாளிகை

கோட்டை சிறைச்சாலையில் ஆறு ஆண்டு காலமாக அடைந்து கிடந்த அவர், யமுனா நதிக்கரையில் முழுநிலவு ஒளியில் குளித்து கொண்டிருந்த அம்மகத்தான காதல் சின்னத்தை பார்த்து கொண்டே அமர்ந்திருந்தார். அந்த பளிங்கு மாளிகை அந்த நள்ளிரவில் அவர் இதயத்தில் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்திவிட்டது.

மைந்தர் அவுரங்கசீப் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றி அரசரையும் சிறையிலடைத்துவிட்டார். சிறைச் சாலையில் சகல வசதிகளும் செய்து தரப்பட்டிருந்தாலும் மன்னர் ஷாஜகானின் ஆன்மா சுதந்திர காற்றை விரும்பியது.

தனிமைச் சிறையில் அவர் வாழநேரிட்ட வருடங்களில் ஸூஃபிகளின் ஞானம் அவருக்கு கைகொடுத்திருந்தது.

இரவும் பகலும் தியான வேள்வியில் தன் எண்ணங்களை ஒருமைப் படுத்திவந்தார் மன்னர். டெல்லி ஜும்மா மசூதி, ஆக்ராவின் மோதி மசூதி, தாஜ்மகால் ஆகியவை அவர் நிருவிய கட்டிடங்களில் உன்னதமானவை. கட்டிட கலையைப் பொறுத்தவரை ஷாஜகானின் ஆட்சிகாலத்தை அகஸ்டஸின் காலம் என்கிறார்கள். டெல்லி நகரில் அவர் நிருவிய ஷாஜகானாபாத் மிகப் பெரியவணிகத் தலமாக காட்சியளித்தது.

ஷாஜகான் லாகூர் நகரில் பிறந்தார். பாட்டனாரான மாமன்னர் அக்பரின் அன்புக்கு பாத்திரவானாயிருந்தார். ஷாஜகானுக்கு மூன்று மனைவிகளிருந்தனர். ஆயினும் மும்தாஜிடம் அவர் கொண்டிருந்த காதல் வினோதமானது. அவள்மூலம் அவருக்கு பதினான்கு குழந்தைகள் பிறந்தன. பதினான்காவது பிரசவகாலத்தில் மும்தாஜ் இறந்தாள்.

துறவியாக மாறிய ஷாஜகான் ஸூஃபித்துவத்தில் நாட்டம் கொண்டார். உலகப் புகழ் பெற்ற தமது தங்க மயிலாசனத்திலிருந்து கீழிறங்கிய ஷாஜகான் மும்தாஜ் மறுபிறவி எடுத்து மீண்டு வருவாள் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். மும்தாஜ் எங்கு பிறந்திருக்கிறாள்? அவள் இப்போது எங்கிருக்கிறாள் என்பதை தெளிவுபடுத்தும் ஜோதிடர்களுக்கு விலைமதிப்பற்ற கோஹினூர் வைரத்தை தரவும் தயாராகிவிட்டார்.

மும்தாஜ் மஹால் என்ற மாளிகையின் ஒளிவிளக்கு அரசி மும்தாஜ் மறைந்ததும் பர்ஹன்பூரில் அடக்கம் செய்யப்பட்டாள். பிறகு அவ்வுடல் ஆக்ராவுக்கு கொண்டு செல்லப்பட்டு யமுனை நதிக்கரையில் அடக்கம் செய்யப்பட்டது. தன் காதலியின் கல்லறையின்மீது உலகின் ஒப்பற்ற கலை சின்னங்களில் ஒன்றான தாஜ்மஹால் கட்டிடத்தை நிறுவினார் மாமன்னர்.

உலகில் வேறு எந்தப் பெண்ணுக்கும் இத்தகைய நினைவுச் சின்னம் ஏற்பட்டதில்லை என்று வரலாறு ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆனால் மும்தாஜ் தன் காதலரான ஷாஜகானுடன் ஓடிவந்தபோது மற்றொருவரின் மனைவி என்பதை மறைத்துவிட முடியாது.

சிறுவயதிலிந்தே ஷாஜகான் ஆற்றல், பேரவா, ஊக்கம், இராணுவத்திறமை உடையவராயிருந்தார், அவரது ஆளுமை அவளை கவர்ந்தது.

அதிகாரம் வளர வளர மன்னரின் பண்பு சிறப்புற்று ஓங்கியது என்று அவரது சரித்திரங்கள் கூறுகின்றன. இராசபுத்திரப் பெண்ணுக்கும் ஜகாங்கீருக்கும் மகனாகப் பிறந்த ஷாஜகானின் உடலில் இந்து முஸ்லிம்களின் கலப்பு இரத்தம் பாய்ந்திருந்தது. அதன் பண்புகள் சமயப் பொறுமையாக அவரில் வளர்ந்திருந்தது.

அந்த நள்ளிரவில் சிறை கதவுகளை உடைத்தெறிந்த ஷாஜகான், தடுமாறி தடுமாறி காதலியின் கல்லறையை நோக்கி நடந்து கொண்டிருந்தார். யமுனா நதி வெள்ளப் பெருக்கெடுத்திருந்தது. கரை கடந்த ஆற்று நீர் தாஜ்மகாலின் அடிவாரத்தை நீரில் மூழ்கடித்தது.

மன்னர் நடந்த பாதை நெடுகிலும் தேவதாரு மரங்களும் தென்னை, ஈச்சை, பனை மரங்களும் வானளாவ தங்கள் கிளை கரங்களை உயர்த்தி விரித்து கொண்டிருந்தன. அமானுஷ்யமான அமைதி நிலவியப் பாதையில் மன்னர் இதயத்தில் ஆவேசத்தோடு ஓடினார். "மும்தாஜ் மும்தாஜ்" என்ற அவரது உரத்த குரல் அவரை பைத்தியக் காரனைப் போன்று காட்டியது.

பொங்கி வரும் ஆற்று வெள்ளத்திலும், பொழியும் நிலா ஒளியிலும் குளித்துப் பொன்மயமாக ஜொலித்த தாஜ்மகாலை மன்னர் நெருங்கி அதன் உயர்ந்த நெடும் படிகளிலேறி கதவுகளில் கை வைத்து தள்ளியபோது அதன் ஓரங்களில் அமைந்த மணிகள் ஒலித்து ஜலதரங்கம் இசைத்தன.

அதோ மும்தாஜின் கபர் சரீஃபின் அருகில் அவர் ஏற்றி வைத்த ஜோதி விளக்கு தன் ஒளியைப் பிரகாசமாக உமிழ்ந்து கொண்டிருந்தது. கபுர் ஷரீஃபின் நடுவாக அரபு மொழியில் ஓவியலிபியில் எழுதப் பட்டிருந்த அல்லாஹ் என்ற இறைவனின் உன்னதப் பெயரை அவர் உச்சரித்தபோது மகாலின் நான்குப் புற சுவர்களிலிருந்தும் காதலி மும்தாஜின் சிரிப்பு குரல் கேட்டு திகைத்து நின்றார்.

அவருடைய இதயம் கூக்குரலிட்டது. அவர் அவள் மறைந்த போது எழுதிய கவிதை கண்முன் வந்தது.

*அவள் மருக்கொழுந்தைப் போன்று வாசமானவள்*
*அது பூமியின் மீது படர்ந்திருப்பதுபோல*
*என் இதயத் தரையில் அவள் பூத்திருக்கிறாள்*
*என் தளர்ந்த உடலுக்கு அவளே உறக்கம்*
*தன்னிஷ்டம் போல் தனித்தோடும்*
*ஆற்று வெள்ளம் போல்*
*அவள் மீது என்காதல் இதயத்தின்*
*இருகரைகளையும் தொட்டு பாய்கிறது*
*என் கவிதைகள் அவள்மீதானவையே*
*அதுதன் சுழல்களோடும் அலைகளோடும்*
*புதுப் புது சுவரங்களில் பொங்கி வழிகிறது*

ஷாஜகான் தன் கவிதைகளை நினைவு கூர்ந்து நின்றிருந்த வேளையில் தான், தன் காதலி மும்தாஜாகவே நின்றிருக்க கண்டார். மும்தாஜாக மாறிவிட்ட தன் மனதிலோ காதலர் ஷாஜகானின் மீதான காதல் பொங்கிட கண்டார்.

இது யார்? இது நான் ஷாஜகானா? மும்தாஜா? அதிர்ந்து போய் அரசர் நின்று கொண்டிருந்தார்

இனிமையான சங்கீத குரல் எங்கிருந்தோ எழுந்தது

*ஓ ஷா ஹின்ஷா*
*உன் படோடபமான ராஜபோகத்தை கைவிட்டாய்*
*உன் காதலின் கண்ணீர் அழியாமல் சுடர்விட நீ விரும்பினாய்*
*காலமெனும் காலன் கொடியவன் என்றாலும்*
*அவன் தன்கால்களால் நினைவுகளை*
*உதைத்து அழித்துவிடுகின்றான் என்றாலும்*
*நீயோ உன் காதலியின் நினைவை அழகால் சிறைப் பிடித்தாய்*
*இரவின் ஆழ்ந்த அமைதியில் உன் காதலி உன் காதுகளில்*
*ஓதிய இரகசியம்*
*இதோ இந்த பளிங்கு மாளிகையின் பேரமைதியில்*
*புதைந்து கிடக்கிறது*
*யுகங்கள் முடிந்து போனாலும்*
*சாம்ராஜ்யங்கள் சாய்ந்து போனாலும்*
*உனது காதலின் மாளிகை வானத்து நட்சத்திரங்களிடம்*
*உன் கவிதையை சொல்லி கொண்டேயிருக்கிறது*
*“அவள்மீது கொண்ட காதலை நான் மறக்கவே இல்லை”*
*காதல் அது உலகாயத காதலாக இருந்தாலும்*

***அது உண்மையின் சத்தியத்தின் பேரிலான தென்றால்***
***அது ஊனின் மீதல்ல உயிரின் மீதான காதலெனில்***
***அது முடிவற்றது அது தெய்வீகமானதேயாம்!***

அவர் திகைப்புடன் தன் முகத்தை எதிரில் சுவற்றில் அமைந்த கண்ணாடியில் பார்த்தார். அது காதலியின் முகமாகவும் காதலனின் முகமாகவும் மாறி மாறி பிரகாசித்தது.

கண்ணாடியிலிருந்து மும்தாஜின் முகம் இப்போது நகைத்து அதன்பின் பேசியது

"ஷஹின்ஷா மும்தாஜ் என்ற என் பெயரின் பொருள் உங்களுக்கு புரியும் தானே?"

"அன்பே புரியும்! மும் என்பது அழகு, தாஜ் என்பது கிரீடம். மும்தாஜ் என்பதற்கு அழகின் கிரீடமென்றே பொருள்படும் இதில் சந்தேகம் என்ன மெஹ்ரூபா?"

மும்தாஜின் முகம் கண்ணாடியில் கலகலவென வாய்விட்டு சிரித்து விட்டு பதில் கூறியது.

"ஷஹின்ஷா மும்தாஜ் என்ற என் பெயரின் ஹகிகத்தான தத்துவம் உங்களுக்கு புரியவே இல்லை. மும் என்ற இருமீம் எழுத்துகள் முகம்மதையும், தாஜ் என்பதில் உள்ள தேயும் ஜீனும் கதிஜாவையும் குறிக்கும். காதலன் தன் காதலியிடம் முகம்மதையும் கதிஜாவையும் ஒன்றாக கண்டால்தானே அந்த காதல் முழுமையடையும்."

ஷாஜஹான் தன் காதலியின் வார்த்தைகளை செவிமடுத்து அதிர்ந்து நின்றார். மும்தாஜின் புதுமையான விளக்கம் அவரை பெருமூச்செரிய செய்தது.

"யாஹூ" என்று இறைவனின் பெயரை உரக்க உச்சரித்து மும்தாஜின் கபர் ஷரீஃபின் மீது தடுமாறி விழுந்து மரணித்தார்.

\- \- \- \- \- \-

தாஜ்மகாலின் மேல்தளம் வரை யமுனையின் வெள்ளம் பெருக்கெடுத்துப் பரவியது. மாளிகையின் வெளிவரந்தாவை சூரைக் காற்று தாக்கியது. வானம் இருண்டு நிலா மறைந்தது. எங்கும் நிறைந்த இருளில் மாளிகையின் நடுமையத்தில் ஆத்தும கோலத்தில் பாபா ஃபக்ருத்தீன் எழுந்து நின்றார்கள்.

அவர்களின் ஆன்மா சூக்கும குளத்திலிருந்து சிரசை குலுக்கிகொண்டு எழுந்தது. நொடிப்பொழுதுகளில் நினைவுலகில் மீண்டார்கள். "ஆ இது தாஜ்மஹால்!" ஷாஜகானாக தன் ஆன்மா வாழ்ந்து முடித்ததை உணர்ந்தார்கள் பாபா.

பின் புறமிருந்து வந்த குரலை "நாதா" என்ற அழைப்பை கேட்டு திரும்பி பார்த்தார்கள் பாபா. அதோ மீண்டும் சூக்கும குளத்திலிருந்து உயிர்த்தெழுவது யார்? ஆம் அது திருமய கானகத்தின் இளவரசி நிலா ஆகிய நதியா ஆகிய சந்திரமதி, மும்தாஜாக வாழ்ந்து மறைந்த ஷாஜகானின் காதலரசி.

தாஜ்மகாலின் வாசலுக்கு வந்த இருவரும் காதல் வயப்பட்டு தழுவிக்கிடந்தனர். விடியா விடியலில் பாபாவின் கரத்தைப் பற்றியபடி நிலா நின்றிருந்தாள்.

விடியா கருக்கலில் இருவரும் அங்கிருந்து பறந்து வெளியேறியதை அந்த காதல் மாளிகை மட்டும் அறியும். ராஜபுதனப் பாலையில் உயர்ந்த ஆபு மலையில் இருவரும் தவம் புரிந்த நினைவிடம் இன்றும் மக்களால் ஆராதிக்கப்படுகிறது. "காதர்பாபா காதர்பீபி" என்று எழுதப்பட்ட குகை வாயில் வரைகல் காலத்தால் அழியாத காவிய ஓவியமாய் ஆபுமலையில் இன்றும் காட்சியளிக்கிறது.

\- - - - - -

*அடர்ந்த காட்டில் குன்றுகளில்*
*ஆகாசத்தில் கடல் பரப்பில்*
*படர்ந்த நாடு நகரத்தில்*
*பரபரப்பான உலகத்தில்*
*தொர்ந்து தொடர்ந்து வருகின்றாய்*
*தூயவளே அடி என்னவளே*
*விடிந்தது பொழுது முகத்திரையை*
*விலக்கிமுன்வா மனோண்மணியே!*

*காடுமேடுகளிலும் நாடுநகரங்களிலும் என்னை தொடர்ந்து வந்து கொண்டிருப்பவளே, தயவு கூர்ந்து உன் முகத்திரையை விலக்கிவிட்டு என்னை நிமிர்ந்து பார் மனோண்மணியே.*

# கருணை விழி திறப்பீரா

காலமெல்லாம் நடை நடந்தேன்
கர்த்தன் முகம் பார்ப்பதற்கு
ஞாலமெல்லாம் நடை நடந்தேன்
நபியின் முகம் பார்ப்பதற்கு
சீலமுள்ள காதிர் ஒலி
சிறப்புடைய திருப்பேரா
ஆலயத்தை திறப்பீரா
அடிமை முகம் பார்ப்பீரா
- காட்டு பாபா பஹ்ருத்தீனே
கருணை விழி திறப்பீரா

தந்தை யென்றும் தாயேயென்றும்
தங்கள் பதம் தேடி வந்தேன்
அந்திபகல் இரவெல்லாம்
ஆற்றாமைப் படுகின்றேன்
சிந்துகின்ற குருதி எழும்
சித்திரமாய் நிற்பவரே
வந்தென்னை ஆதரித்து
வாசல் வழி திறப்பீரா
- காட்டு பாபா பஹ்ருத்தீனே
கருணை விழி திறப்பீரா

கானகத்தின் நடுவழியில்
கதிகலங்கி நின்றபெண்கள்
ஈனம் நீக்கி கை கொடுத்து
இடம் சேர்த்து அருள் புரிந்தீர்
நானும் உம்மை நம்புகின்றேன்
நல்லகதி நாடுகின்றேன்
ஞானமதி உள்ளவரே
நம்பும் என்னை பார்ப்பீரா
- காட்டு பாபா பஹ்ருத்தீனே
கருணை விழி திறப்பீரா

வாழ்க்கையெனும் கானகத்தில்
வழிதவறி அலைகின்றேன்
ஊக்கமில்லை உறக்கமில்லை
உற்சாகம் எனக்குமில்லை
ஏக்கத்துடன் களைப்புற்று
எங்கெங்கோ அலைகின்றேன்
காக்கும் மனம் உடையவரே
கையணைத்து கொள்வீரா
- காட்டு பாபா பஹ்ருத்தீனே
கருணை விழி திறப்பீரா

பாரை சுற்றி வலம்வந்து
பல இடத்தில் மறைவடைந்தீர்
கோரை மலை காட்டுக்குள்
குடியிருந்து தவம்புரிந்து
பாறை மலை மீதமர்ந்தும்
படுத்தும் யோக நித்திரையில்
சீரடைந்த பெருமானே
தெய்வநிலை அடைந்தோரே
- காட்டு பாபா பஹ்ருத்தீனே
கருணை விழி திறப்பீரா

சாகிபம்மா சுல்தான் பீ
சையத் யூசுப் திருகுமரா
ஏக இறை காதலுற்று
ஏகாந்தம் சென்றோரே
தாகமுற்றேன் உம்மீது
தருணமிது கைதூக்கும்
சோகம் நீங்கி வாழ்வதற்கு
சுப வாழ்த்து சொல்வீரா
- காட்டு பாபா பஹ்ருத்தீனே
கருணை விழி திறப்பீரா

நீலத்திரை கடல் புயலில்
நெடும்பயண கலம் காத்து
மாலுமியாய் பேட்டையிலே
மாயாஜாலம் புரிந்தவரே
வேலிமலை மீதமர்ந்து
வேதாந்தம் புரிந்தவரே
காலனாரை விரட்டிவிட்டு
கதிமோட்சம் தருவீரா
- காட்டு பாபா பஹ்ருத்தீனே
கருணை விழி திறப்பீரா

பாட்டன் நான் எனஉணர்த்தி
படையெந்தன் வரலாற்றை
கேட்டவர்கள் முக்திபெற
கிருபைசெய்வேன் என்றுரைத்தீர்
நாட்டார்கள் நகைத்தாலும்
நல்லவர்கள் மதித்தாலும்
கோட்டையிலே உட்புகுந்தேன்
குருவே அருள்புரிவீரா
- காட்டு பாபா பஹ்ருத்தீனே
கருணை விழி திறப்பீரா

பீர்பாலின் அக்பருடன்
பேசி வந்தீர் தீன்மார்க்கம்
காபூலில் காந்த ஹாரில்
கானகத்தில் தவம்புரிந்தீர்
தாபமுடன் பல்க் நாட்டில்
சஞ்சரித்தீர் வெகுகாலம்
ஆபெஹயாத் அருளமுதம்
அருந்தி வாழும் சான்றோரே
- காட்டு பாபா பஹ்ருத்தீனே
கருணை விழி திறப்பீரா

திருமயமாம் காட்டுக்குள்
தெய்வலோகம் உண்டாக்கி
தரும தயா பேரரசாய்
தனித்தமர்ந்த பெருமானே
அருளாட்சி புரிவோரே
அடைக்கலமாய் வந்துவிட்டோம்
உரிமையாக வந்துவிட்டோம்
உம்பர் பதம் அருள்வீரா

\- காட்டு பாபா பஹ்ருத்தீனே
கருணை விழி திறப்பீரா

அன்பே என்று அழைக்கின்றேன்
ஆருயிரே என்று நினைக்கின்றேன்
இன்பம் உன்னிடம் தேடுகிறேன்
இரவும் பகலும் அலைகின்றேன்
துன்பம் நீக்கி எனக்குஉனை
துணையாய் ஆக்கு மாதவியே
தன்பேர் உலகம் அறியாத
தாயே தயவே மனோண்மணியே!

உன்னை அன்பே என்றும் ஆருயிரே என்று அழைத்து இரவு பகலாய் அலைகின்றேன். உன்னை எனது நிறந்தர துணை ஆக்குவாயா. தயவுபுரிவாய் தாயே மனோண்மணியே.

## பாபா நாயகம் காதிர் ஒலி நாதரிடம் பெற்ற கிலாஃபத்

அன்பார்ந்த பிள்ளைகளே எனது முரீதுகளும் கலிஃபாக்களுமான நீங்கள் அனைவரும் என் உயிரின் பிள்ளைகளாவீர்கள். எனக்கும் உங்களுக்குமான பந்தமானது உடல்ரீதியானதல்ல. ஆத்மார்த்தமானது.

இறைவன் தன் திருமறையான குர்ஆன் ஷரிஃபின் ஒருநாளுக்கு நீங்கள் அஞ்சி நடந்துகொள்ளுங்கள், அந்த நாளில் மகன் தந்தைக்கு உதவமாட்டான், தந்தை மகனுக்கு உதவமாட்டான். அந்த கடையுக மஹ்ஷரின் நீதி தீர்ப்பு நாளுக்கு அஞ்சுங்கள் என்று கூறுகின்றான்.

ஆனால் குரு, சிஷ்ய பாரம்பரியத்தின் முன்னவரான முகிய்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள் கியாம நாளில் உன் பாவநன்மை நிறுக்கப்படும் தாரசின் அருகில் உனக்கு உதவ நான் உன்னோடிருப்பேன் என்று கூறுகிறார்கள்.

குரு, சிஷ்ய உறவின் உன்னதம் இதுதான். இந்த நட்பு இந்த தொடர்பு இம்மைக்கு மட்டுமல்ல மறுமைக்கும் நீடிப்பதாகும். நிச்சயமாக மறுமையில் நீங்கள் என்னோடு நெருங்கி இருப்பீர்கள்.

சிஷ்யன், சிஷ்யைகள் மீதான குருவின் பாசமானது தெய்வீகமானது. உடல் பொருள் ஆவி மூன்றும் உத்தம குருவுக்கீவாய் என்ற வாக்கியம் பெருமானார் (ஸல்) தங்கள் சஹாபாக்களிடம் யுத்த காலங்களில் பெற்ற பைஅத்துக்கு ஒப்பானதாகும். இதன் முடிவான பலன் முக்தி அல்லது சொர்க்கமாகும்.

குர்ஆனின் இதயமாகிய யாசீன் சூராவில் இறைவன் தன் நேர்வழி காட்டுதலைப் பற்றி குறிப்பிடுகிறான். இறைதூதர்களின் மூலமாக மேலும் இறைதூதர்களின் வாரிசுகளான மெய்ஞான குருமார்களின் மூலமாகவும் மனிதர்களுக்கு கிடைக்கும் வழிகாட்டுதலை புறக்கணிக்கும் மனிதர்கள் சுவாசமற்றவர்கள் என்று இறைவன் குறிப்பிடுகிறான்.

அப்படிப்பட்ட விசுவாசமில்லாதவர்களின் மீது அவர்களுடைய கழுத்துகளையும் கைகளையும் சேர்த்து அரிகண்டங்களை ஆக்கினோமென்றும் அவர்களுக்கு முன்னும் பின்னும் தடைகளை உண்டாக்கி அவர்கள் சத்தியத்தை பார்க்கவும் கேட்கவும் முடியாமல் தடை செய்துவிட்டோம் என்றும் குறிப்பிடுகின்றான்.

யாஸீனில் கூறப்படும் மூன்று ரசூல்மார்கள் என்பதின் உட்பொருள். முதலாவதான ரசூல் உங்கள் கையில் இருக்கும் திருக்குர்-ஆன் ஆகும். திருக்குர்ஆனின் வழிகாட்டுதலில் நீங்கள் ஷரீஅத் என்னும் சட்டதிட்டங்களை எடுத்து நடத்துகிறீர்கள்.

இரண்டாவது ரசூல் என்பது ஷெய்கை பற்றிய குறிப்பாகும். ஷரிஅத்தை எடுத்து நடத்தி வரும் மனிதனுக்கு நல்லெண்ணம் மிகைத்து இறைவனை நெருங்க விரும்புகிறான். இறைவனின் கிருபையால் ஷெய்கின் சகவாசம் அவனுக்கு கிடைக்கிறது.

இறைநேசர்களின் தந்தையாரான அலீ (ரலி) அவர்கள் நான் பேசுகின்ற குர்-ஆன் என்றார்கள். சீடர்களிடையே ஷெய்கு பேசுகின்ற குர்ஆன் ஆக இருக்கின்றார். ஷெய்கு தனது உள்ளொளியின் தன்மையால், சீடனை தடுப்பவற்றிலிருந்து அவன் தவிர்ந்து கொள்ளவேண்டும். அவர் அனுமதிப்பதை பொருந்திக் கொள்ள வேண்டும்.

ஷெய்கின் மனதில் சீடனின் மீது ஏற்படும் சந்தோஷம் அவனை எம்பெருமானார் (ஸல்) அவர்களின் சன்னிதானத்தில் கொண்டுபோய் சேர்க்கும். ஷெய்கின் முன் தனது நான் என்னும் அகங்காரத்தை அழித்துவிடும் மனிதனின் இதயத்தில் இல்ஹாம் ஆகிய உள்ளொளியின் கதவுகள் திறந்து கொள்கின்றன. ஃபல்ஹமஹா ஃபுஜூரஹா வநஃப்ஸின் வமாஸவ்வாஹா என்ற உள்ளொளியைக் கொண்டு மனிதனின் நஃப்ஸை ஸ்திரப்படுத்தும் இறைவனின் மீது சத்தியமாக என்ற வாக்கியம் அவன் மீது உண்மையாகின்றது.

திருக்குர் ஆனில் ஓ மனிதனின் ஆத்துமாவே உன்னை இறைவன் பொருந்திக் கொண்ட நிலையிலும் நீ இறைவனை பொருந்திக் கொண்ட நிலையிலும் ராலியா மரிலியா என்ற பொருத்தத்துடன் முத்ம இன்னா என்ற பரிபூரண அமைதி தர்ஜாவுடன் சொர்க்கத்தில் புகுந்துகொள் என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் இந்த நஃப்ஸை சம்பூர்ணமாக்குவது அப்பழுக்கில்லாமல் அமைதிப்படுத்துவது என்பது சாதாரண காரியமல்ல. மனிதர்கள் நப்ஸ் ஆகிய இச்சை, ஆசைகள் உலகின் மீது கவிழ்ந்து கிடக்கின்றது. நப்ஸின் காரியஸ்தர்களான கண், வாய், மூக்கு, காது, உடல் உணர்வு ஆகியவை புத்தியாகிய அஃகளை தன் வயப்படுத்திவிடுகின்றன.

ஆன்மாவோ மனம் ஆகிய கல்பை நப்ஸின் பிடியிலிருந்து காப்பாற்றி இறைவனளவில் கொண்டு சேர்க்க பிரயத்தனப்படுகின்றது. மனிதனின் மனதில் நடக்கும இந்தப் போராட்டம் ஒவ்வொரு மனிதனிடத்திலும் அவன் பிறந்த நேரத்திலிருந்து இறக்கும் தருணம் வரை தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

இதனை தஃபூக் யுத்தத்திலிருந்து திரும்புகின்ற நேரத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் தம் தோழர்களிடையே சுட்டிக்காட்டினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் சிறிய யுத்தத்திலிருந்து பெரிய யுத்தத்திற்கு மீளுகிறோம் என்றார்கள். அதிர்ந்து போன சஹாபாக்கள் மீண்டும் ஒரு யுத்தமா? என்று அச்சப்பட்டு கேட்டபோது ஆம் அது மனப்போராட்டம் என்று பெருமானார் (ஸல்) பதிலளித்தார்கள்.

உலகின் மீது கவிழ்ந்து கிடக்கும் மனம் என்ற கல்புடன் போராடி இறைவன் பக்கமாக அதைத் திருப்புவது என்பது மனிதனின் மீது கட்டாயக் கடமையாக உள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையில் அன்னை ஆயிஷா நாச்சியார் மீது ஏற்பட்ட அவதூறு மனப்போராட்டத்துக்கு ஒரு உதாரணமாக சம்பவமாகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் மனமாகிய கல்பை வெகுவாக பாதித்துவிட்ட அந்த சம்பவம் பற்றி கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் தங்களுடைய செற்பொழிவுகளில் சுட்டிக் காட்டுகிறார்கள்.

பிராட்டியார் ஆயிஷா (ரலி) அவர்களை பெருமானார்(ஸல்) அவர்கள் அளவுக்கு அதிகமாக இறைவனை மறந்து நேசித்ததின் காரணமாக சோதனைக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்று சொல்கிறார்கள். இறைவனை மீறி உலகின் மீது அல்லது உலகத்தின் பொருள்களின் மீது நேசம் ஏற்படும்போது அந்த மனிதனின் மனம் ஆகிய கல்பு சோனைக்குள்ளாக்கப் படுகின்றது.

அன்பார்ந்த பிள்ளைகளே தரீக்காவில் உங்களை இணைத்துக் கொண்டு சத்முயற்சியில் ஈடுபடுவதெல்லாம் கல்பாகிய இதயத்தை அல்லாஹ்வைத் தவிர வேறெதன் மீதும் ஆசையற்று பரிசுத்தப்படுத்துகின்ற முயற்சியாயிருக்கும்.

சிருஷ்டிக்கப்பட்டு தோன்றுகின்ற அனைத்தும் அழிபவையாகும் என்று உணர்ந்து உலகத்தில் எதன் மீதும் பேராசை கொள்ளாது புறக்கணித்து நிற்கும் நிலையாகிய முஷஹதா தரீக்காவின் முதல் பாடமாகும்.

ஊன் உறக்கங்களையும் சுக அனுபவங்களையும் ஒடுக்கி திக்ரு ஃபிக்ரு என்ற தியான விசாரங்களில் மனதை ஒருமைப்படுத்தி தனிமை வாசமும் மௌனமும் அனுஷ்டிக்கும் நிலை முஜாஹதா ஆகும்.

கண்ணில் தோன்றும் எல்லாவிதமான காட்சிகளையும் விட்டுவிட்டு எதிரே அல்லாஹுத்தாலா நம்மைப் பார்த்தபடி இருக்கின்றான், நாம் அவன் பார்வையிலன்றி இருக்கவில்லை என்று அவனை மட்டுமே பார்த்தபடி இருக்கும் நிலைதான் முராக்கபா.

இவ்வித ஞான யோக பயிற்சிகளில் ஈடுபட்டு இறைவனுடைய சந்திப்பை அடைந்து நித்திய ஜீவிதம் பெறுவதை உங்களுடைய வாழ்க்கையின் இலட்சியமாக ஆக்கிக்கொள்ளுங்கள்.

- - - - -

எஜமான் ஷாஹுல் ஹமீது பாதுஷா நாயகம் தங்கள் பேரர் பாபா ஃபக்ருத்தீன் அவர்களுக்கு பத்து வயது பாலப் பருவத்தில் தங்களிடம் உள்ள பதினான்கு தரீக்குகளின் கிலாப்பத்தையும் வழங்கிய நிகழ்ச்சியில் மேற்கொண்ட சொற்பொழிவை நிகழ்த்தியதாக குறிப்புகள் காணப்படுகின்றன.

எஜமான் அவர்களின் மறைவுக்கு ஓராண்டுக்கு முன் நடந்த இந்த சம்பவத்தில் எஜமானின் ஃபக்கீர்மார்கள் அண்டை அயலில் உள்ள நகர கிராம மக்களும் திரண்டு வந்து கூடியிருந்ததாக மேற்கண்ட குறிப்புகளில் விவரம் தெரிகிறது.

# எந்தையே காட்டுபாபா

பரந்தகளும் பாரத புனித பூமியெங்கும்

மறைந்துறையும் தெய்வீகமே

பாராளும் பரமன்நபி போதமே காதிரொலி

பரம்பரை தழைக்கும் விலமே

விரிந்த தீன்மார்க்க வேதாந்த சார

விளக்கமே வான் தீபமே

விரிகதிர் சுடரென தோன்றி வினைநீக்கி

வீடருளும் மெய்ஞ்ஞானமே

புரிந்தனம் உமை எமது ஜீவித புதையலாய்

புகுந்தனம் அடைக்கலம் இத்தருணமே

இருந்து திருமயக் காட்டினுள் இலங்கும்

எந்தையே காட்டுபாபா

இருபதியிலும் நலமே பெறநின் பாதம்

ஏந்தினம் சிரம்! சரணமே!

# Saint Baba Fakhrudhin
# Grandson of Great Kadhir Oli of Nagore.

Sheikh Baba Fakhrudin is the grandson of benevolent Saint Shah-el-Hameed Kadhir Oli of Nagore, who lived there in sixteenth century A.D. Baba's abode is located near the town Thirumayam, in Pudukottai district of Tamilnadu.

This famed location by the name 'Kattu Baba Pallivasal' is a place of devotion and gleeful celebration for people from all castes and creeds. Exactly a hundred meters from the premises of Baba's Darga there is a rocky area which is marked as the place where he became Shaheed, martyr in God's path.

Baba Fakhrudin's father Syed Mohamed Yusuf Oli had six sons and two daughters. The tombs of his father and his Saintly mother namely Syed Sulthan Bibi are located at the dargah shareef of Nagore aside the tomb of the great Saint Kadhir Oli.

Baba had his spiritual learnings directly from his grandfather Kadhir Oli from his very early days of his childhood. Baba was given 'Dheetcha' by his grandfather and was bestowed 'Kilafat' of fourteen kanwadhas of spiritual schools of thought. When the latter was in his teens the demise of his grandfather left Baba in loneliness. As he was heartbroken he went out of Nagore leaving his parents and family in distress.

Achuthappa Nayaka the renowned king of Thanjavur was astounded by the mind blowing spiritual speeches of young lad Baba near the temple of Thiruvannamalai and was identified by the king as the grandson of Kadhir Oli. Baba was taken to the palace of Nayaka at Thanjavur and was treated as a royal guest.

Denying the King's desire to stay with him permanently Baba escaped from Thanjavur and reached the Mazar of Saint Thable Azam Nathar Oli in Trichy. Baba was blessed by the great Saint and accepting his orders he performed penance in the woods near Thirumayam for years together.

The long search of King Achuthappa ended when he found the young man in the woods of Thirumayam. Baba refused the request of the king and his daughter Chandramathi to return to their palace.

Baba as an youth prayed for the young princess who loved him as her soul and the spinster princess miraculously bore the heir of Baba in her womb. The descendents of Chandramathi's daugther at Thanjavur reserve with them the rights of covering the tomb of Kadhir Oli with a shawl worn by their family members every year by the night of 'Chandal' festival.

To obey the divine order he got in his dreams, Baba left Thirumayam and reached Portnovo and stayed there years together preaching Islam and spiritualism meanwhile practicing medicine and magic to heal the physical and mental diseases of common man.

He appeared in several boats of fishermen at a time to answer their distressed call in a storm to save them. This miraculous event is even now remembered by the fishermen of the town. His abode is located at Portnovo, there he is gracefully called by the name "Fakhrudhin Malimar".

The daughter of Portugese General, Nadiya, by name met our Baba to gain spiritual knowledge. And this spinster young lady miraculously bore the heir of our Baba in her womb. She made Portnovo her native and gave birth to a female child before she passed away. The descendant of her daughter live in Portnovo till this day.

During the days when he had been to Kovalam, north of Portnovo the Almighty revealed in Baba's dream the presence of the body of the Sahabi Thamimul Ansari afloat in the seas. The Durga Sherif of Thamimul Ansari Baba located in Kovalam had been felicitated by the blessed hands of Baba Fakhrudin. This incident that happened thousand years after the days of Prophet Muhamed (peace) is surely an unique mystical event in the history of the world.

His dad Yusuf Oli Dadha sent Genies to bring his son back to Nagore as he roamed around the vast expanses of Hindustan. He obeyed the words of his beloved father and mother to marry Bibi Halima the daughter of Bahaudheen Sukravarthi an aalim and a man of spiritual learnings.

Our Baba made a happy living in Nagore for ten years and was blessed with a son and a daughter. Then he started off for Haj pilgrimage from Nagore he roamed around in various region of the country to reach Benugonda in Andrapradesh.

There he stayed in the Mazar of the Saint Baba Fakhrudin whose name is the same as his own to serve the people by giving them spiritual elucidation. It is an enthralling fact to know that the famed Puttabarthee Saibaba is born, the decendant of a woman from Puttabarthi near Benugonda by the miracle of our Baba.

Later he travelled north to Agra, the head quarters of Mugal Empire. He met Akbar the great and made an astounding speech at the court of inter-religious conference in the year 1582 A.D.

When Baba moved to Amirtha Saras, the sixth of the Sikh Guru renowned Guru Arjun Singh met him and received him at the precincets of the holy temple. Latter Guru sent his wife to Baba to bless him with an offspring.

Guru Hargobith Singh who was born of Baba's prayers became a noted Saint and warrior. He establised a seperate state for Sikh religious people at Punjab. He made the Sikh people a brave society.

From there Baba went to Gwalior to visit the mazar of Sufi master Muhamed Gauz, the Shiekh of his great grandfather Kadhir Oli. By his spiritual powers Baba transformed forty Fakhirs to Valiuallahs, the friends of Allah and transported them back to Benugonda without vehicle by his occult skill.

From Gwalior he went to Ajmeer to visit the mazar of Hajrath Khaja Muinudhin Chisti. Visited Kabul and Kandahar, famous cities of Afganistan. He went to Bulk, a town at the Afgan border practiced penance at the ruined palace of the great Sufi Saint Sultan Syed Ebrahim bin Adhuham.

During the days of penance at Bulk he visited spiritual landmarks of Mekka, Medina and Baghdad in his astral body. In his final meet the Prophet Kizhir informed him the dictum of God on him to lead the rest of his life at Thirumayam forest in Tamilnadu.

When Baba returned back to Thirumayam forest he was astounded to find that Nila, the daughter of landlord at Nallur to be the rebirth of his teenage consort Chandramathi. He saved her, her two children and her four servant maids from theives. Thirumayam forest a dent of marauders thereafter became a safe place for living.

Theives often met the astral appearance of Baba whereever they went out for barbery and murder.

Bound by the love of the landlord of Nallur our Baba made a dwelling in the woods, located in the perimeters of the village and performed penance, helped people to get relieve of physical and mental ailments.

Nila served Baba as a devotee for six years. The landlord joined their hands in wedlock. One fine morn as Baba and Nila strode along the path near the mountain rock towards their dwelling, Baba was killed by some theives, who were awaiting for a chance to have a vengence on him.

The sword that rose from the defeated body of Baba slayed the theives who tried to kill Nila. Nila alias Kadhir Beevi is worshipped at the bottom roots of a banyan tree where she with her consonant Baba lived at an hut. People of pallivasal flock there to redress their grievances.